# இஸ்லாமும் குடும்பத்திட்டமும்



டாக்டர் எம். எல். நஜிமுதீன்

IPR

# இஸ்லாமும்
# குடும்பத் திட்டமும்


**டாக்டர் எம். எல். நஜிமுதீன்**

M.B.B.S. (Colombo), M. S. (Sri Lanka)
M.R.C.O.G. (England)
மகப்பேறு மாதர் நோய் விசேட
வைத்திய நிபுணர்
அரசாங்க வைத்தியசாலை, களுத்துறை



9, எஸ். எப். மாவத்தை
தர்கா நகர்
12090

**Islamum Kudumpa Thiddamum**
*(Islam and Family Planning)*


| | | |
|---|---|---|
| *First Edition* | : | *October 2000* |


| | | |
|---|---|---|
| *Copy Right* | : | ***© Dr. M.L. Najimudeen***<br>*All rights reserved. No part of of this book may be reprinted or reproduced without written permission from the author.* |


| | | |
|---|---|---|
| *ISBN* | : | *955-8037-02-5* |
| *Pages* | : | *XXIII + 163 = 186* |
| *Cover Designed by* | : | ***Rosan Hameed Sheriffdeen*** |
| *Printed by* | : | ***Q G Graphics***<br>*110, 1/4, Maliban Street*<br>*Colombo-11, Tel. 431554* |
| *Publishers* | : | ***Study Circle***<br>*9, S.F. Mawatha*<br>*Dharga Town - 12090* |
| *Available in India At* | : | *Kumaran Publications*<br>*3 Maikai Vinayagar Street*<br>*Vadapalani, Chennai - 26*<br>*Tamil Nadu* |
| *Price* | : | *Rs. 250/-* |






## சமர்ப்பணம்

இஸ்லாத்தில்
குடும்பத் திட்டத்திற்கு
இடமே இல்லை என்ற
எண்ணத்தில் வருடாவருடம் அளவுக்கு
மீறிப் பிள்ளைகள் பெற்று உடல்
மெலிந்து, உள்ளம் தளர்ந்து
மௌனமாகக் கண்ணீர் வடித்துக்
கொண்டிருக்கும் என்னுடைய
ஆயிரக்கணக்கான முஸ்லிம்
சகோதரிகட்கு.

## உள்ளே உள்ளவை.......


| | | |
|---|---|---|
| அணிந்துரை | அல்ஹாஜ் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி | V |
| சிறப்புரை | மௌலவி எம்.ஜே.எம்.றியால் | VIII |
| மதிப்புரை | மௌலவி ஆ.மு.இ.ஆதம் முஹ்யித்தீன் | X |
| தகவுரை | மௌலவி ஆர்.என்.ஸைபுத்தீன் ஸாஹிப் | XIII |
| விதந்துரை | மௌலவி ஏ.எல்.எம்.ஹாஷிம் | XVII |
| என்னுரை | நூல் ஆசிரியர் | XIX |
| நன்றி நவிலல் | | XXI |

1) எண்ணக்கரு 1
2) குடும்பத்திட்டம் உயிர்க்கொலையா? 5
3) பிள்ளைகளா அதிக பிள்ளைகளா? 13
4) வருடத்திற்கொரு பிள்ளையா? 20
5) இஸ்லாமும் துறவறமும் 24
6) விளைநிலத்தை வளமாக்குவோம் 28
7) தொகைப் பலமா? தரப் பலமா? 31
8) குடும்பத் திட்டமும் இறைநம்பிக்கையும் 35
9) அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அனுமதி 42
10) நாயகத் தோழர்களின் நடைமுறைகள் 47
11) குடும்பத் திட்டம் அவசியமா? 53
12) குடும்பத் திட்டமும் ஒழுக்கசீர்கேடும் 59
13) குடும்பத் திட்ட முறைகளால் உடல்நலம் பாதிக்கப்படுமா? 64
14) முஸ்லிம் விரோத சக்திகளின் சதித்திட்டமா? 69
15) குடும்பத் திட்டமும் கருச்சிதைவும் 77
16) நிரந்தர கருத்தடைச் சத்திர சிகிச்சைகள் 84
17) பால்ய திருமணம் 90
18) தள்ளாத வயதில் தாயாகலாமா? 95
19) குறைவான பிள்ளைகளும் நிறைவான வாழ்வும் 100
20) சில சந்தேகங்கள் 105
21) சான்றோர்களின் சான்று 115
22) அறிஞர்களின் அபிப்பிராயங்கள் 124
23) முடிவுரை 130
24) ஆதாரங்கள் (References) 135
25) இந்நூல் ஆக்கத்திற்கு உதவியவை (Bibliography) 153

## பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளரும் இஸ்லாமிய அறிஞருமான அல்ஹாஜ் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி B.A. (Hons), Ph.D (Edin) அவர்களின்

# அணிந்துரை

டாக்டர் எம்.எல்.நஜ்முதீன் அவர்கள் எழுதிய "இஸ்லாமும் குடும்பத்திட்டமும்" என்ற தலைப்பிலான நூலுக்கு இந்த அணிந்துரையை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடையும் அதே நேரத்தில் இதனை ஒரு பொறுப்புமிக்க பணியாகவும் கருதுகிறேன். இலங்கையில் மட்டுமன்றி முஸ்லிம் உலகைப் பொறுத்தளவிலும் கருத்து வேற்றுமைக்கு உட்பட்ட சர்ச்சைக்குரிய ஒரு பொருளாக இது எப்பொழுதும் இருந்துவந்துள்ளது. இத்தகைய ஒரு பொருள் பற்றித் துணிச்சலுடன் தனது கருத்துக்களை, மிக நிதானமான நோக்கில் டாக்டர் நஜ்முதீன் அவர்கள் இந்நூலில் முன்வைத் துள்ளார்கள். ஒரு மகப்பேற்று மருத்துவ நிபுணர் என்ற வகையில் முஸ்லிம் கர்ப்பிணித் தாய்மார்களின் அவல நிலையை அவர் அவதானித்து, அதனால் ஏற்பட்ட கவலை, கரிசனையின் விளைவாக, குடும்பத்திட்டம் பற்றி சமூகத்திற்கு அறிவுறுத்தும் நோக்குடனேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது என அவரது குறிப்புக்களிலிருந்து உணர முடிகின்றது.





குடும்பத்திட்டம் என்றால் என்ன? அது ஏன்? எவ்வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்? போன்ற விடயங்களை, இது பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தைப் பல்வேறு நூல்களிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை ஆதாரங் காட்டி டாக்டர் நஜ்முதீன் விளக்கியுள்ளார்.

இந்நூலின் உள்ளடக்கம் தொடர் கட்டுரையாக தினகரன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட போது அது குறித்துப் பலர் தனக்கு விளக்கம் கோரி எழுதிய கருத்துக்களை மனதிற்கொண்டு அவற்றிற்குத் தெளிவை வழங்கும் வகையில் இதில் பல குறிப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளதாக நூலாசிரியர் மூலம் அறிந்தேன். தனது கருத்துக்களுக்கான மூலாதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள நூல்கள் பற்றிய அடிக்குறிப்புக்களை எழுதியிருப்பதானது, இது பற்றிய விளக்கங்களையும், தெளிவையும் விரும்புபவர்களுக்குப் பயனுள்ளதாக உள்ளது.

பொதுவாக முஸ்லிம் தாய்மார்கள் மகப்பேறு தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய மருத்துவ ரீதியான பல நுட்பமான தகவல்களையும், வழிகாட்டல்களையும் கொண்டிருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும். தனிப்பட்டவர்களால் நியாயமான காரணங்களுக்காகக் குடும்பத்திட்டத்தை மேற்கொள்வதை இஸ்லாம் சில வரையறைகளுடன் அங்கீகரித்தாலும் அதனை ஒரு தேசிய கொள்கையாக நடைமுறைப்படுத்துவதை அது அனுமதிக்கவில்லை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

நூலாசிரியர் குடும்பக்கட்டுப்பாடு பற்றி மட்டும் பேசாது இன விருத்தி பற்றிய இஸ்லாமியக் கருத்துக்களையும் வழங்கியிருப்பது மிகவும் பொருத்தமானது. குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை இஸ் லாம் சில வரையறைகளுடன் அனுமதிக்கின்றது எனில், இன விருத்தி பற்றிக் குறிப்பிடும் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களின் கருத்

துக்களுடன் இது முரண்படுகின்றது என்ற மயக்கம் இயற்கையாகவே தோன்ற இடமுள்ளது. எனவே இனவிருத்தி பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தையும் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது இந்நூலுக்கு ஒரு நிதானமான அணுகுமுறையை வழங்குகிறது.

டாக்டர் எம்.எல்.நஜ்முத்தீன் அவர்கள் ஒரு மகப்பேற்று மருத்துவ நிபுணர். அவரது பல்வேறு மருத்துவப் பணிகள் மத்தியில், பல்வேறு நூல்களிலிருந்தும் தகவல்களைத் திரட்டித் தொகுத்து இத்தகைய ஒரு நூலை எழுதியிருப்பது பாராட்டத்தக்க ஒரு பணியாகும்.

**கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி**

பணிப்பாளர்,
ஜாமிஆ நளீமிய்யா – பேருவளை.





**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின்**
**கௌரவ தேசியப் பொதுச் செயலாளர் சங்கைக்குரிய மௌலவி**
**பாஸில் எம்.ஜே.எம். ரியால் (கபூரி)** B.A. (Hons), Dip. in Ed.
SLEAS **அவர்களின்**

# சிறப்புரை

மகப்பேற்று மாதர் நோய் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் எம்.எல்.நஜ்முத்தீன் அவர்கள் எழுதியுள்ள இஸ்லாமும் குடும்பத்திட்டமும் என்ற நூலுக்கு சிறப்புரை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

குடும்பத்திட்டம் பற்றி பல இஸ்லாமிய மார்க்க அறிஞர்களும், சட்டமேதைகளும் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களின் அடிப்படையில் வெளியிட்டுள்ள கருத்துக்களை ஆதாரங்களாகக் காட்டி டாக்டர் அவர்கள் தனது அபிப்பிராயங்களைக் கூறியுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.

குடும்பத்திட்டம் என்றாலே அதனை முற்றிலும் வெறுத்து ஒதுக்கும் பலர் நம் மத்தியில் இருக்கிறார்கள். குடும்பத்திட்டம் என்ற பெயரில் கருச்சிதைவுக்கு உரிய கதவுகள் பல நாடுகளில் திறந்துவிடப்பட்டதே இந்த வெறுப்புணர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். நூல் ஆசிரியர் கருச்சிதைவுக்கும் (Abortion) குடும்பத்திட்டத்திற்கும் (Family Planning) உள்ள வேறுபாடுகளை மிகத் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

முஸ்லிம்கள் அனைவரும் தமது சொல், செயல், நடைமுறைகளை ஷரீஆவின் அடிப்படையில் அமைத்துக் கொள்வது அவசியமாகும். இஸ்லாத்தில் கருச்சிதைவு முற்றிலும் தடைசெய்யப்பட்டிருக்கும் அதேவேளையில், நியாயமான காரணங்களுக்காக குடும்பத்திட்டங்களை மேற்கொள்வது அனுமதிக்கப்பட்டுள்ளது. சென்றகால, சமகால மார்க்க அறிஞர்களின் நூல்கள், பத்வாக்கள் இவற்றை அனுமதித்துள்ளன. டாக்டர் எம்.எல்.நஜ்முத்தீன் அவர்கள் இந்த நூலில் இவற்றை மிகவும் விளக்கமாக ஆராய்ந்துள்ளார்.

தாயின் உயிருக்கோ, உடல் நலனுக்கோ ஆபத்து ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள், குழந்தைகளின் உடல் பாதிப்படைதல், குழந்தைகளை வளர்ப்பதில் பிரச்சினைகள் தோன்றும் என்று அஞ்சுவதற்குப் போதிய காரணங்கள் இருத்தல், பிள்ளை பிறப்பதால் சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படல், பின்னர் அக் குழந்தைகளை வளர்க்கத் தேவையான பொருளாதாரத் தேவைகளுக்காக மார்க்கத்துக்கு விரோதமானவற்றைச் செய்ய வேண்டி ஏற்படும் என்ற அச்சமேற்படல், தாய் கர்ப்பவதியானால் பால் குடிக்கும் குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படும் என்று திட்டவட்டமாகத் தெரிதல் போன்ற வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் குடும்பத்திட்ட முறைகளுக்கு அனுமதி உண்டு.

மனித இனம் நிலைபெறுவதற்கு இனப்பெருக்கம் அவசியம். இதனால்தான், இஸ்லாமிய திருமணத்தின் நோக்கங்களுள் ஒன்றாக இனப்பெருக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், மேற்குறிப்பிட்டவை போன்ற சந்தர்ப்பங்களில் குடும்பத்திட்ட முறைகளை மேற்கொள்ள இஸ்லாத்தில் இடம் உண்டு என்பதற்கான ஆதாரங்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள டாக்டர் நஜ்முத்தீன் அவர்களின் நூல் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

**மவ்லவி எம்.ஜே.எம்.றியால்**

25, அலஸ் வீதி,
நீர்கொழும்பு.
7. 7. 2000





**'ஷாஃபிஈ ஃபிக்ஹின் சட்டக் களஞ்சியம்' நூல் ஆசிரியரும் வேலூர் அல் பாகியாத்துஸ் ஸாலிஹாத் முன்னாள் பேராசிரியரும், பேருவளை கெச்சிமலை அஷ்ரபிய்யா அரபிக் கல்லூரியின் அதிபருமான அல் ஆலிமுல் பாஸில் ஆ.மு.இ. ஆதம் முஹ்யித்தீன் பாஜில், பாகவி அவர்கள் அளித்த**

# மதிப்புரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

மகப்பேற்று மாதர் நோய் விசேட வைத்திய நிபுணர் கண்ணியத்திற்குரிய டாக்டர் எம். எல். முஹம்மத் நஜ்முத்தீன் அவர்களால் திரட்டப்பட்ட "இஸ்லாமும் குடும்பத் திட்டமும்' என்ற நூலைப் பார்வையிட்டேன். வைத்தியத் துறையின் நிபுணரான நூலாசிரியர் அவர்கள் சன்மார்க்கச் சட்டக்கலையில் பிசகி விடக்கூடாது என்ற நினைவுடன் நூலின் ஆரம்ப முதல் இறுதி வரை பார்வையிட்டேன். ஆகாத ஹறாமினை ஹறாம் (விலக்கப்பட்டது) என்றும் ஆகுமாக்கப்பட்ட ஜவாசினை ஜவாஸ் என்றும் மிகச் சரியாகவே இவர் எழுதி இருக்கிறார்.

அல்-அஸ்ல் (Family Planning) கர்ப்பத் தாமதம் அல்லது குடும்பத்திட்டம் ஆகுமானது (ஜவாஸ்) என்றும், இஸ்காதுல் ஹம்ல் (Abortion) கருச்சிதைவு மார்க்கச் சட்டத்திலும், நாட்டின் சட்டத்திலும் தடுக்கப்பட்டுள்ளது என்றும், தஹ்தீதுன் நஸல் - நிரந்தர கர்ப்பத்தடை (Permanant Birth Control) ஹராமென்றும் குறிப்பிட்டுள்ள அநேக மேற்கோள்களைக் காட்டி இந்த விடயங்களை நூல் ஆசிரியர் மிகவும் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

நூலினை முழுமையாகப் படித்துப் பார்க்காமல், தலைப்பைக் கண்டு மலைத்து அவசரமாக முடிவு செய்தால் பலாத் தோலைக் கண்டு அதன் தேன் சொட்டும் சுளைகளை உண்பதற்கும், முள்ளினைக் கண்டு ரோஜாவை நுகர்வதற்கும் உரிய வாய்ப்பினை இழந்தவர்களாகி விடுவோம். ஏனெனில் நூலாசிரியர் பிள்ளைகளைப் பெற வேண்டாமென்று சொல்லவே இல்லை. அதிகம் பெற்று உங்கள் பிள்ளைகளை அடுத்தவர்களின் தொட்டில் குழந்தைகளாக மாற்றாதீர்; அளவாகப் பெற்றுத் தாயின் மடிக் குழந்தையாக இருக்கட்டும் என்கிறார். அடுத்தடுத்துப் பெற்றுச் சவளப் பிள்ளையாக ஆக்காதீர்; சற்றுத் தாமதம் ஆனாலும் தாயின் செல்லப் பிள்ளையாக இருக்கட்டும் என்கிறார். தொகைப் பலம் (Numerical Strength) வேண்டுமென்பதில்லை; தகைமைப் பலம் (Quality Strength) வேண்டும் என்கிறார். ஒரு பிள்ளை தோளில், மறுபிள்ளை மடியில், சிறுபிள்ளை வயிற்றில் என்று தாய்மையை அமாவாசை ஆக்காதீர்; அதனையும் தூய்மை ஆக்குங்கள் என்கிறார். இவற்றை இவர் தம்முடைய நுண்ணறிவால் கூறவில்லை; மாறாக சன்மார்க்க சான்றோர்களின் சான்றுகளைக் கொண்டே குறிப்பிடுகின்றார்.

டாக்டர் எம். எல். நஜிமுத்தீன் அவர்கள் மகப்பேறுச் சிரமங்களை அனுமானப் பிரமாணமாக அறிந்து, பிரசவ வேளையின் இன்னல்களை பிரத்தியட்சப் பிரமாணமாக விளங்கிக் கூறுகிறார். அதிக பிள்ளைகளைப் பெறுபவர்கள் எதிர்நோக்கும் ஆபத்துகளை மிகவும் தெளிவாக இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளன.

பெண்களின் கல்வி தடைப்பட்டு விடக் கூடாது என்று நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளார். பால்ய விவாகம் கூடாது என்றும், பெண்களின் திருமண வயது 20 – 25 என்றும் தனது சொந்த அபிப்பிராயத்தையம் தெரிவித்துள்ளார். முஸ்லிம்களில் படித்த, மேல்நிலை மக்கள் பொதுவாக மூன்று பிள்ளைகட்கு மேல் பெற்றுக் கொள்வதில்லை என்று ஆய்ந்தும் எழுதியிருக்கிறார்.





முஸ்லிம் ஏழைப் பெண்கள் அதிலும் குறிப்பாக வசதிகள் குறைந்த கிராமப்புறங்களில் உள்ளவர்கள் தொடரான பிரசவ சிரமத்தில் இருந்தும், அது தொடர்பான இன்னல்களில் இருந்தும் விடுதலை பெற வேண்டுமென்ற இரக்க உணர்வும், தூய நோக்கும் இந்நூலில் பரிணமிக்கிறது.

இந்த நூலில் அல்குர்ஆன், ஹதீஸ், சன்மார்க்க அறிஞர்களின் சான்று, மருத்துவ விபரங்கள், சர்வதேச புள்ளி விபரங்கள், போன்ற அநேக விபரங்கள் காணப்படுகின்றன. அதிக கால நேரத்தை எடுத்து, அயராத முயற்சியின் மத்தியில் இந்த ஆய்வு நூலை ஆசிரியர் திரட்டி ஆக்கி இருக்கிறார். ஓய்வே இல்லாத ஒரு விசேட வைத்திய நிபுணரின் இத்தகைய இமாலயப் பணி மிகவும் வியந்து பாராட்டத் தக்கதாகும்.

நூலாசிரியரின் தூய நோக்கிற்காகவும், அதற்கான அவரது முயற்சிக்காகவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளும், நல்லோர்களின் துஆவும், வாசகர்களின் ஆதரவும் நிறைந்து இருக்குமென்று நம்புகிறேன்; இருக்க வேண்டுமென்ற ஆவல் கொள்கிறேன்.

வஸ்ஸலாம்.

**மௌலவி ஆ.மு.இ. ஆதம் முஹ்யித்தீன் பாஜில் பாகவி**
கெச்சிமலை அஷ்ரபிய்யா அரபிக் கல்லூரி
வேருவளை.

# வானொலிப் பேச்சாளரும், நூலாசிரியருமான ஷெய்குல் உலமா, தஃவதுல் ஹக் மௌலானா மௌலவி அல்ஹாஜ் R. N. சைபுத்தீன் சாஹிப் அவர்கள் வழங்கிய

# தகவுரை

முதல்வன் துணை முன்னிற்க.

நான் அறபி மத்ரசா ஒன்றில் ஓதிக் கொண்டிருந்த காலம் அது. விடுமுறைக்காக சொந்த ஊர் வந்து விடுமுறை கழிந்த பின் மீண்டும் மத்ரசா செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். அப்போது என் சகோதரர் ஒருவரின் மனைவி என்னைச் சந்தித்தார். “மச்சான், நீங்கள் மத்ரஸாவில் இருந்து அடுத்த முறை விடுமுறைக்கு வரும்பொழுது என்னைக் காண மாட்டீர்கள்” என்றார். அவரின் இந்தச்சொல் என்னை மிகவும் உலுக்கி விட்டது. என்றாலும், அவருக்குள்ள வருத்தத்தின் காரணமாக அப்படிக் கூறுகிறார் என்று நினைத்தேன். மத்ரசாவிற்குச் சென்று இரண்டு மாதங்களில் பிரசவத்தின் போது அவர் இறந்து விட்டார் என்று எனக்குக் கடிதம் வந்ததும் நான் விக்கித்துப் போனேன். வாழ வேண்டிய வயதில் அவர் போய்ச் சேர்ந்து விட்டார்.

அவர் மிக இளவயதிலேயே மணம் முடித்தவர். மிக அவசரமாகவே பல பிள்ளைகட்குத் தாயாகி விட்டவர். ஒன்றன் பின் ஒன்றாக மிகக் குறுகிய காலத்தில் ஐந்தாறு பிள்ளைகள்; கர்ப்பிணியாக இருந்த அவர் தன் நிலையை நன்கு தெரிந்து கொண்டுதான் அப்படி என்னிடம் கூறினார் என்று வேதனையோடு உணர்ந்தேன். அவரது மரணம் என்னை உலுக்கி விடடது. கல்யாணம் முடித்த நாளில் இருந்து பிள்ளை பெறும் சாதனமாக





துன்பப்பட்டதல்லாமல் நிம்மதியாக, மகிழ்ச்சியாக அவர் வாழ்ந்ததை நான் பார்த்ததில்லை.

அவர் சென்று விட்டார். ஆனால், அவரின் அவரணைப்பிற்காக ஏங்கி நிற்கும் இளந்தளிர்களின் கதி, அந்தோ பரிதாபம் !

எனக்கு நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நான் எழுதினேன். இது போன்ற ஆயிரமாயிரம் பெண்கள் வேதனைகளை அனுபவிக்கிறார்கள்; மடிகிறார்கள். இஸ்லாம் இவ்வுலகம், மறு உலகம் இரண்டிலும் அமைதியான மகிழ்ச்சியான வழிகாட்டுகின்ற வழி என்று கூறுகிறோம். ஆனால், நாம் பெண்கள் வாழ்வில் துன்பத்திற்கு மேல் துன்பத்தைக் கொடுத்து அவர்களைத் துவள வைக்கிறோமே ஏன்? மனைவியரை விளைநிலம் என்று அல்லாஹ் வர்ணித்தான். அந்த நிலத்தைப் பண்படுத்தாமல் இடைவிடாது தாயாக்கித் துன்பங்களை விளைவிக்கிறோம்.

கருச்சிதைவை (Abortion) இஸ்லாம் தடுக்கின்றது. அது போல் கருவில் வளர்ந்து வரும் குழந்தையை அழிப்பதையும் பெரும்பாவமாகக் கூறுகின்றது. ஆனால், கர்ப்பம் உண்டாவதைத் தவிர்த்துக் கொள்வது பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது?

ஒரு தடவை நபித்தோழர் ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து “அல்லாஹ்வின் தூதரே, எனக்கு அடிமைப் பெண் ஒருத்தி இருக்கிறாள். அவருடன் உடலுறவு கொள்கிறேன். ஆனால் அவள் கருத்தரிப்பதை நான் விரும்பவில்லை. ஆகவே, உடலுறவின் போது விந்து வெளியாவதற்கு முன் என்னுடைய ஆண் உறுப்பை எடுத்து விடுவது எனக்கு ஆகுமானதா? நான் அப்படிச் செய்யலாமா?” என்று வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் “நீங்கள் அப்படிச் செய்து கொள்ளலாம்; ஆனால், அல்லாஹ் நாடியவைகளைத்

தடுக்க முடியாது” என்று கூறினார்கள். அந்த நாயகத் தோழர் கொஞ்ச நாட்களின் பின்னர் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து “யாரசூலல்லாஹ், அந்தப் பெண் கர்ப்பம் தரித்து விட்டார்” என்று கூறுகிறார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "‘அல்லாஹ் நாடியவற்றைத் தடுக்க முடியாது’ என்று நான் கூறவில்லையா” என்றார்கள்.

இந்த ஹதீஸைக் கவனமாகப் பாருங்கள். விந்து வெளியேறுவதற்கு முன்னர் ஆண் உறுப்பை எடுத்து விடுவதை ஆகாது என்று சொல்லவில்லை. செய்து கொள்ளலாம் என்றுதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த முறையை ‘அல் அஸ்ல்’ என்று அறபியில் கூறப்படுகின்றது. இந்த ‘அஸ்ல்’ முறையை பெருமானார் அனுமதித்தார்கள் என்பதனை ஹதீஸில் கண்டோம். இந்த ‘அஸ்ல்’ முறை இக்காலத்தில் பல வழிகளில் கையாளப் படுகின்றது.

பல காரணங்கட்காக அம் முறைகளைக் கையாளலாம் எனப் பல மார்க்க அறிஞர்கள், சட்ட மேதைகள் இந்த ஹதீஸின் அடிப்படையில் அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் இந்த நூலாசிரியர் மிகத் தெளிவுபட எழுதி இருக்கிறார். இவைகள் சிந்திக்க வேண்டிய அரும் பொக்கிஷங்களாகும்.

பெரும்பாலான பிரசவங்கள் மிகவும் சாதாரணமாகவும் இலகுவாகவும் முடிந்து விட்டாலும், எண்ணற்ற பெண்கள் பிரசவத்தின்போது மரணமடைகிறார்கள். ஆயிரக்கணக்கான பெண்கள் சொல்லொணாத் துயரங்கட்கு ஆளாகிறார்கள். இத்தகைய ஆயிரக்கணக்கான கர்ப்பிணித் தாய்மாரின் அவலங்கள், ஜீவ மரணப் போராட்டங்களை நேரில் அனுபவித்து வரும் ஒரு மகப்பேற்று வைத்திய நிபுணருக்கு உள்ளக் குமுறல் ஏற்படுவது இயல்பு தானே!





மகப்பேற்று மாதர் நோய் விசேட வைத்திய நிபுணர் கலாநிதி எம். எல். நஜ்முத்தீன் அவர்கட்கு இத்தகைய மன எழுச்சிதான் ஏற்பட்டிருக்க வேண்டும். அவர் முஸ்லிம் சமுதாயச் சூழல் மிகுந்த கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் பிறந்தவர். நல்ல ஒழுக்கத்துடன் இஸ்லாமிய நெறியில் வளர்க்கப்பட்டவர். இஸ்லாத்தை நன்கு அறிந்தவர்; அதன் பண்பாட்டில் ஊறிப் போனவர். இறை பக்தி மிகுந்தவர். சமூகத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர். நம்முடைய சகோதரிகளும், அவர்களைச் சூழ உள்ளவர்களும் சரியான மார்க்க ஞானமின்றி அளவுக்கு அதிகமாகப் பிள்ளைகள் பெற்று, கண்மூடித்தனமாகத் துன்பத்துக்கு மேல் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதை அவரால் சகிக்க முடியவில்லை. இஸ்லாம் என்ன கூறுகிறது? பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறைகள் என்ன என்பதை ஆராய்ந்தார். கற்றறிந்த இஸ்லாமிய மேதைகளின் கருத்துக்களை உற்றுணர்ந்தார். அவற்றைச் சமுதாய மக்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பினார். அதன் விளைவே இந்த நூலாகும்.

கலாநிதி நஜ்முத்தீன் அவர்கள் ஆய்ந்து எழுதிய இந்நூல் சமுதாயத்துக்கு மிகவும் அவசியமானதும், இன்றைய காலத்தின் தேவையுமாகும். இது போன்ற இன்னும் பல நூல்கள் எழுதி, சமுதாயத்திற்கு நலன் பயக்க வேண்டுமென்று அவரை வாழ்த்துகிறேன். அல்லாஹ் நல்லருள் புரிவானாக.

இவ்வண்ணம்

உங்கள் சகோதரன்

**மௌலவி அல்ஹாஜ்**
**ஆர். என். சைபுத்தீன் சாஹிபு.**
622/10 மெயின் வீதி
களுத்துறை
ஸ்ரீ லங்கா.

## அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அல்ஹாஜ் A.L.M. ஹாஷிம் (கபூரி) B.A. (Hons) M.A. (Peradeniya) அவர்களின்

# விதந்துரை

மகப்பேற்று மாதர் நோய்கள் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் எம்.எல்.நஜ்முத்தீன் அவர்களின் "இஸ்லாமும் குடும்பத்திட்டமும்" என்ற நூல் இடைவெளிகள் இன்றி அடிக்கடி அதிகமாகக் குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மார்களின் இன்னல்களைத் தெளிவுபடுத்துகின்றது. பிறக்கப் போகும் குழந்தையை விட உயிருடன் இருக்கும் தாய்மாரின் வாழ்விற்கு இஸ்லாம் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. பிரசவத்தின்போது தாய்மாரின் தேகாரோக்கியம் முக்கியத்துவமானதாகும்.

பொருளாதாரக் காரணங்களுக்காகக் குழந்தைகளைக் கொல்லுதல், கருச்சிதைவுகளை மேற்கொள்ளல் என்பன இஸ்லாத்தில் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. இதை நூலாசிரியர் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். தாயின் ஆரோக்கியத்தைப் பேணும் வைத்தியக் காரணங்களுக்காக ஏதாவது குடும்பத்திட்ட முறைகளை மேற்கொள்வது தடைசெய்யப் படவில்லை என்பதை பல மார்க்க அறிஞர்களின் விளக்கங்களுடன் நூலாசிரியர் முன்வைத்திருக்கிறார்.





சர்ச்சைக்குரிய இந்த விடயத்தை மருத்துவத்துறையில் உள்ள நிபுணத்துவ அறிவாலும், இஸ்லாம் மீதான ஆழமான பக்தியாலும் அழகு தமிழ் நடையாலும் நூலாசிரியர் வெகு சரளமாகக் கையாண்டிருக்கிறார். இது பக்தியும், உறுதியும் உள்ள ஒரு நன்முயற்சி ஆகும். இந்த நூல் ஆசிரியரின் முயற்சியை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக.

டாக்டர் நஜ்முத்தீன் அவர்களின் இந்த முயற்சி வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். கர்ப்பிணித் தாய்மாருக்கும், குறிப்பாக முஸ்லிம் பெண்களுக்கும் இந்த நூல் மிகுந்த பலன் அளிக்கும் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

**மௌலவி U.L.M. ஹாஷிம்**

4ம் குறிச்சி
அட்டாளைச்சேனை.

# என்னுரை

எக்காலத்திற்கும் ஏற்ற வாழ்வு நெறியாம் இஸ்லாத்தில் நான் பிறந்து வாழச் செய்த என்னுடைய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன். அவன் பேரருளாளன். நன்மையையும், தீமையையும் மிகத் தெளிவாகப் பிரித்துக் காட்டும் பரிசுத்த வேதம் ஒன்றை நமக்கு அருளினான்; வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய ஒரு மாமனிதரை எங்களுக்கு நபியாகவும், வழிகாட்டியாகவும் தந்தான். அத்தகைய இறைவன் போற்றற்குரியவன்; புகழுக்குரியவன். அவனை வழிபட்டு உதவி தேடுகிறேன்.

அருள்மறையாம் அல்குர்ஆனிலும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலும் இல்லாதவை இல்லை. மூவுலகின் முக்காலத்துப் பிரச்சினைகளுக்கும் கேள்விகளுக்கும் அங்குதான் தீர்வும் விடையும் இருக்கின்றன.

"இஸ்லாத்தில் குடும்பத்திட்டத்திற்கு இடமே இல்லை; ஏனெனில், குடும்பத்திட்ட முறைகள் உயிர்க்கொலைகள் ஆகும். அது தவிர அல்லாஹ்தான் உணவளிப்பவன், பாதுகாப்பவன் என்ற இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைக்குக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் எதிரானதாகும். இஸ்லாம் அதிக அளவு சனப் பெருக்கத்தைத்தான் ஊக்குவிக்கிறதே தவிரக் குடும்பத்திட்டத்தை அல்ல. குடும்பத்திட்ட முறைகளால் ஒழுக்கச் சீர்கேடுகள்





பெருகிவிடும். உண்மையில் குடும்பத்திட்ட முறைகள் எல்லாம் முஸ்லிம்களின் சனப் பெருக்கத்தைக் குறைப்பதற்கான முஸ்லிம் விரோத சக்திகளின் சதிமுயற்சிகளே ஆகும்" என்று சொல்லப்பட்டு வருபவை எவ்வளவு தூரம் உண்மையானவை என்பதை அல்குர்ஆன் அருள் வசனங்களின் அடிப்படையிலும், நபி (ஸல்) அவர்களின் கருத்துக்களிலும் இருந்து விளக்க முயற்சித்து இருக்கிறேன்.

கடந்த இருபது வருடங்களாகக் கர்ப்ப காலத்தின்போதும் பிரசவங்களின்போதும் எனது சகோதரிகள் படுகின்ற விவரிக்க முடியாத வேதனைகளையும், துயரங்களையும், மரண ஓலங்களையும், மரணங்களையும் நேரில் அனுபவித்ததன் விளைவே இந்த நூல் ஆகும். தாயினதும் குழந்தையினதும் தேக ஆரோக்கிய காரணங்களுக்காக குடும்பத்திட்ட முறைகளைப் பாவிக்க இஸ்லாத்தில் அனுமதி உண்டு என்பதை விளக்குவதே இந்த நூலின் நோக்கமாகும்.

இந்த நூலை வாசகர்கள் மிகவும் அவதானமாகவும், நிதானமாகவும் வாசிக்க வேண்டுமென விரும்புகிறேன். இந்த நூல் சம்பந்தமான உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அறிவதற்கு நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன்.

அன்புடன்

*டாக்டர் எம். எல். நஜிமுத்தீன்*

1ஈ, சார்ள்ஸ் பிளேஸ்,
தெஹிவளை.
*11.10.2000*

1 E, Charles Place
Dehiwela
Sri Lanka
Tel. 732827
E mail : najm@mail.ewisl.net

# நன்றி நவிலல்

இக்கட்டுரையை எழுதத் தேவையான பல நூல்களை எனக்கு அனுப்பியிருந்த என் நண்பர் அலி நஜி ராட் (Ali Naji Rad) அவர்களுக்கும், பாகிஸ்தான் ஆகாகான் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சாரா ஜமீல் அவர்களுக்கும்

தினகரன் வார மஞ்சரியில் பத்தொன்பது வாரங்கள் தொடராக இக்கட்டுரையைப் பிரசுரிக்கச் காரணமாக இருந்த என்னுடைய பல்கலைக்கழக நண்பர், இஸ்லாமிய செய்தியாளர் பேரவைத் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் அவர்களுக்கும், சகோதரி திருமதி பாலசிங்கம் அவர் களுக்கும்

இக்கட்டுரை நூல் உருவில் வருவதற்கு முழுக் காரணமாக இருந்த என்னுடைய நீண்டகால நண்பர் கலாபூஷணம், பன்னூலாசிரியர் கவிஞர் ஏ. இக்பால் அவர்களுக்கும்

சர்ச்சைக்குரிய இந்தக் கட்டுரையை மிகவும் அவதான மாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் பார்வையிட்டு, திருத் தங்கள் செய்து தங்கள் அபிப்பிராயங்களையும் ஆலோசனை களையும் வழங்கியதுடன்





அணிந்துரை வழங்கி அணி செய்த இஸ்லாமிய அறிஞரும், பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடப் பணிப்பாளருமான கலாநிதி அல்-ஹாஜ் எம்.ஏ.எம். சுக்ரி B.A. (Hons.) Ph.D. (Edin) அவர்களுக்கும்

சிறப்புரை வழங்கிய அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தேசிய பொதுச் செயலாளர் சங்கைக்குரிய மௌலவி பாஸில் எம்.ஜே.எம். றியாழ் (கபூரி) B.A. (Hons), Dip. in Ed. SLEAS அவர்களுக்கும்

மதிப்புரை வழங்கிய ஷாபிஈ ஃபிக்ஹின் சட்டக் களஞ்சிய நூலாசிரியரும் வேலூர் அல் பாக்கியாத்துல் ஸாலிஹாத் அறபிக் கல்லூரியின் முன்னாள் பேரா சிரியரும் பேருவளை கெச்சிமலை அஷ்ரபிய்யா அறபிக் கல்லூரியின் அதிபருமான மௌலவி ஆ.மு.இ. ஆதம் முஹ்யித்தீன் பாஜில் பாகவீ அவர்களுக்கும்

தகவுரை வழங்கிய பிரபல வானொலிப் பேச்சாளர், எழுத்தாளர், த.ஃவதுல் ஹக், ஷெய்குல் உலமா மௌலானா மௌலவி R.N.சைபுத்தீன் ஸாஹிப் அவர்களுக்கும்

விதந்துரை வழங்கிய அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் மௌலவி A.L.M. ஹாஷிம் (கபூரி), B.A. (Hons) MA (Peradeniya) அவர்களுக்கும்

கவர்ச்சியான முறையில் அட்டைப்படம் வரைந்துதவிய வளரும் கலைஞர் றோஷன் ஹமீத் ஷெரிபுத்தீன் அவர்களுக்கும்

மற்றும் இந்நூலை டைப்செட்டிங் செய்த ரிஸ்வி முஹம்மத் அவர்களுக்கும், மிகக் குறுகிய காலத்தில் மிகவும் சிறப்பாக அச்சிட்டு உதவிய கொழும்பு, மெலிபன் வீதி, கியூ. ஜீ. கிர.்.பிக்ஸ் உரிமையாளர் ஜனாப் இனாமுல் ஹஸன் அவர்களுக்கும் அன்னாரின் ஊழியர்கட்கும் நான் மிகவும் நன்றி உடைய வனாக இருக்கிறேன்.

– நூலாசிரியர்





( 1 )

# எண்ணக் கரு

பதினோராவது பிரசவத்திற்காக ஓர் இஸ்லாமிய சகோதரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அவருக்கு வயது முப்பத்தி ஆறு. பதினாறு வயதில் திருமணம் முடித்திருந்தார். அவரது மூத்த புதல்விக்கு வயது பதினெட்டு. ஆண்களும், பெண்களுமாகப் பத்துப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளி இருக்கிறார். மிக இளம் வயதில் திருமணம் முடித்துப் பத்துப் பிள்ளைகளைப் பெற்றதைத் தவிர வாழ்க்கையில் வேறு எந்த சந்தோஷத்தையும் அவர் அனுபவித்து இருக்கவில்லை. வெறும் பிள்ளை பெறும் இயந்திரமாக இயங்கியதைத் தவிர மற்றப் பெண்களைப்போல் கல்வியோ, ஓய்வோ, பொழுது போக்கோ அல்லது வேறு எந்த சுகமும், ஏன்? போதிய சத்து ணவோ அல்லது நித்திரையோ கூடக் கிடைத்திருக்காது என்றே எண்ணத் தோன்றியது. அளவுக்கு மீறிப் பிள்ளைகளைப் பெற்றதனால் அவர் மிகவும் மெலிந்து, நலிந்து இருந்தார். ஒரு பிள்ளை உண்டாகி அதனைப் பிரசவிப்பது என்பது சாதாரண

விடயம் அல்ல. பத்து மாதங்கள் பல இன்னல்களையும், நோய்களையும் அனுபவித்துக் கடைசியில் பிரசவ நேரத்தில் உயிர் போய் விடுவது போன்ற வேதனை. சில வேளைகளில் எத்தனை வைத்திய நிபுணத்துவ சிகிச்சை கிடைத்தும் உயிரே போய் விடுகின்றது!

வருடம் ஒன்றிற்கு ஐந்து இலட்சம் இளம் பெண்கள் பிரசவ காரணங்களால் மரணம் அடைகிறார்கள்.(1) நாள் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 1300 பெண்கள் மகப்பேற்றுடன் சம்பந்தப்பட்ட நோய்களால் இவ்வுலகை விட்டுப் பிரிகிறார்கள். ஒரு மணி நேரத்தில் ஐம்பது பெண்கள் பிரசவ காரணங்களால் அநியாயமாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் இவர்கள் அனைவரும் வாழ வேண்டிய இளம் பெண்கள்.

இறைவன் அருளால் இந்தப் பெண் தனது பதினோராவது பிரசவத்தை மிகவும் இலகுவாக எந்தவித ஆபத்தும் இன்றிப் பிரசவித்தார். அல்ஹம்துலில்லாஹ். எல்லாத் துதியும் இறைவனுக்கே.

இந்தப் பிள்ளையை இலகுவாகப் பெற்றார் என்பதற்காக இனிமேலும் பிரசவங்கள் இலகுவாக அமையும் என்று எதிர் பார்க்க முடியாது. இதற்கு முன்னர் ஒரு பெண்மணி தனது ஒன்பது குழந்தைகளை வீட்டிலேயே பெற்றிருந்தார். பத்தாவது பிரசவம் மிகவும் ஆபத்தானது என்று வைத்திய ஆலோசனைகள் கூறப்பட்டதால் பிரசவத்திற்காக வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்டு இருந்தார். ஒன்பது குழந்தைகளையும் மிக இலகு வாக வீட்டில் பெற்ற அவருக்குப் பத்தாவது பிரசவம் மிகவும் ஆபத்தாகப் போய்விட்டது. குழந்தை பிறந்த





பின் அவரது கருப்பை சுருங்காமல் மிகவும் அதிகமாக இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. எட்டுப் பைந்து இரத்தம் கொடுத்து, கருப்பையை அகற்றித்தான் அவரது உயிர் காப்பாற்றப்பட்டது. ஐந்து பிள்ளைகட்கு அதிகமாகப் பிள்ளை பெறும் ஒவ்வொரு வரும் இந்தப் பேராபத்தை எதிர்நோக்குகின்றார்கள்.(2) அது தவிர இந்தப் பெண் மிகவும் மெலிந்து, நலிந்து போய் இருந்தார்.

அந்தப் பெண்ணிடம் "இதற்குப் பின்னர் உங்களுக்குப் பிள்ளைகள் வேண்டாம், உங்கள் உடம்பு மிகவும் பலவீனமாக இருக்கிறது. நீங்கள் ஏதாவது ஒரு குடும்பத் திட்ட முறையை மேற்கொள்ள வேண்டும் என்று வைத்திய ரீதியில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

அதற்கு அந்த சகோதரி "நாங்கள் என்ன விரும்பியா பிள்ளைகளைப் பெறுகிறோம். எல்லாம் இறைவன் நாட்டத்தில் உள்ளது. இஸ்லாத்தில் குடும்பத் திட்டத்திற்கு அறவே இடமில்லை. ஆகவே எந்தக் கஷ்டம் வந்தாலும் நாங்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்" என்று தெரி வித்தார்.

அவரது அந்தப் பதில் என்னை அதிர்ச்சிக்கும், ஆச்சரி யத்துக்கும் உள்ளாக்கியது. அந்த சகோதரியின் இறை நம்பிக்கையும், இஸ்லாமிய நடைமுறையைப் பேண வேண் டுமென்பதில் அவருக்கிருந்த உறுதியும் எனக்கு மிகவும் பிரமிப்பை ஏற்படுத்தியது. இதே நம்பிக்கையில் பல்லாயிரக் கணக்கான இஸ்லாமிய சகோதரிகள் உள வலிமையில் உறுதி யாகவும் உடல் வலிமை குன்றியவர்களாகவும் இருக்கிறார்கள்.

குழந்தைகளைப் பெறுவதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் அவர்களின் நேரம் முழுவதும் கழிகின்றதே தவிர அவர்களது சுகத்தைக் கவனிக்கக் கூட அவர்கட்குப் போதிய நேரம் இல்லை. இரண்டு வருடங்களில் மூன்று பிள்ளைகளைப் பெற்ற பல சகோதரிகளை நான் கண்டிருக்கிறேன்.

இத்தகைய பல்லாயிரக்கணக்கான சகோதரிகளை கருத்திற் கொண்டு இதை எழுதலானேன்.

இச் சகோதரிகள் எண்ணிக் கொண்டிருப்பது சரிதானா? இஸ்லாத்தில் குடும்பத் திட்டத்திற்கு இடமே இல்லையா? இது சம்பந்தமாக அருள்மறையாம் அல்குர்ஆனின் கட்டளைகள் எவை? எங்கள் கண்மணி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுரைகள் எவை? அவர்களை அடியொட்டி வாழ்ந்த அருமைத் தோழர்களின் நடைமுறைகள் எவை? இஸ்லாமிய சட்ட மேதைகளின் வழிகாட்டல்கள் எவை என்பதை ஆராய்வோம்.





( 2)

# குடும்பத்திட்டம் உயிர்க்கொலையா?

குடும்பத் திட்டம் உயிர்க்கொலை முயற்சி என்பதால் இஸ்லாத்தில் குடும்பத்திட்டத்திற்கு இடமே இல்லை என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இஸ்லாம் மனித சமுதாயம் முழுவதற்குமான ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம் ஆகும். இஸ்லாம் எச் சமயத்தவர்க்கும், எக் காலத்திற்கும், எந்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற ஒரு தெய்வீக வாழ்க்கை வழிமுறை ஆகும்.

முதலாவதாகக் குடும்பத் திட்டம் (Family Planning) என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு தம்பதியர் நமக்கு விரும்பிய நேரத்தில், விரும்பிய அளவில் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏதாவது முறைகளால் கர்ப்பம் ஆவதைச் செயற்கையாகத் தாமதப்படுத்துவது குடும்பத் திட்டம் ஆகும். குடும்பத் திட்டத்தின்போது ஆண் திரவமும் (Seminal Fluid) பெண்ணினது முட்டையும் (Ovum) கலப்பதைத் தடுத்தலாகும். இவை இரண்டும் தனித்தனியே உயிராக முடியாது. இவை கலத்தலைத் தடுத்தல் உயிர்க்கொலை ஆகாது.[1]

குடும்பத் திட்டமானது கருச்சிதைவில் (Abortion) இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். கருச்சிதைவு என்பது ஆண்திரவமும், பெண் முட்டையும் சேர்ந்து உண்டான உயிரை அழித்தலாகும். கருச்சிதைவுக்கு இஸ்லாத்தில் அறவே இடமில்லை. இலங்கையிலும் கருச்சிதைவு சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட் டுள்ளது. இவை பற்றிப் பின்னர் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

குடும்பத் திட்டம் உயிர்க்கொலை என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பின்வரும் அல்குர்ஆன் வசனங்களை மேற்கோள் காட்டுகிறார்கள்.

அல்குர்ஆன் 6வது அத்தியாயம் – சூரா அன்ஆம் 151வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

يُؤْمِنُونَ بِالْآخِرَةِ وَهُمْ بِرَبِّهِمْ يَعْدِلُونَ ۝ قُلْ
تَعَالَوْا أَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ أَلَّا تُشْرِكُوا بِهِ
شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُمْ
مِنْ إِمْلَاقٍ نَحْنُ نَرْزُقُكُمْ وَإِيَّاهُمْ وَلَا تَقْرَبُوا
الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ وَلَا تَقْتُلُوا
النَّفْسَ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ ذَٰلِكُمْ وَصَّاكُمْ

"(இறைதூதரே) நீங்கள் கூறுவீராக. இறைவனுக்கு எதையும் இணைவைக்காதீர்கள். இன்னும் பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள். வறுமைக்காக உங்கள் குழந்தைகளை நீங்கள் கொலை செய்துவிடாதீர்கள். (ஏனெனில்) உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். மானக்கேடான காரியங்களில் நெருங்காதீர்கள்....

(அல்குர்ஆன் *6:151*)





அல்குர்ஆன் 17வது அத்தியாயம் – சூரா பனீ இஸ்ராயில் – 31வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

إِنَّهُ كَانَ بِعِبَادِهِ خَبِيرًا بَصِيرًا ۝ وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُمْ
خَشْيَةَ إِمْلَاقٍ نَحْنُ نَرْزُقُهُمْ وَإِيَّاكُمْ إِنَّ قَتْلَهُمْ
كَانَ خِطْئًا كَبِيرًا ۝ وَلَا تَقْرَبُوا الزِّنَىٰ إِنَّهُ كَانَ فَاحِشَةً

(மனிதர்களே) நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை வழங்குகிறோம். நிச்சயமாக அவர்களைக் கொலை செய்வது மிகப் பெரிய குற்றமாகும்.

(அல்குர்ஆன் *17:31*)

இந்த அறபு வசனங்களைப் பாருங்கள். இப்போதுள்ள வறுமைக்காக உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வசனத்தில் உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம் نَحْنُ نَرْزُقُكُمْ وَإِيَّاهُمْ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது வசனத்தில் இனிமேல் வரக்கூடிய வறுமையைப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் என்று குறிப்பிடும்போது அவர்களுக்கும் உங்களுக்கும் نَحْنُ نَرْزُقُهُمْ وَإِيَّاكُمْ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வசனங்கள் இரண்டும் எத்தனையோ வருட கால இடைவெளிகளில் அருளப்பட்டவை. வார்த்தைகள் எவ்வளவு சாதுரியமாகக் கையாளப்பட்டிருக்கின்றன என்று பாருங்கள்.

இரண்டாவது வசனத்தில் நிச்சயமாகக் குழந்தைகளைக் கொலை செய்வது மிகப் பெரும் பாவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக 'ஹித்த அன் கபீரா' என்ற அறபி வார்த்தைகள் பாவிக்கப்பட்டுள்ளன. காரணமின்றி அநியாயமாக ஒருவரைக் கொலை செய்வதைத் தான் இத்தகைய கொடிய பாவமாக எழுதப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் 60வது அத்தியாயம் சூரா அல் மும்தஹினா 12வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

நபியே, அல்லாஹ்விற்கு எப்பொருளையும் இணைவைப்பதில்லை என்றும், திருடுவதில்லை என்றும், விபசாரம் செய்வதில்லை என்றும், தங்கள் பிள்ளைகளைக் கொலை செய்வதில்லை என்றும், தங்கள் கைகட்கும் கால்கட்கும் இடையே எதனை அவர்கள் கற்பனை செய்கிறார்களோ அவ்வாறான அவதூறை இட்டுக் கட்டுவதில்லை என்றும் வாக்குறுதி செய்ய பெண்கள் உம்மிடம் வந்தால் அவர்களுடன் நீர் வாக்குறுதி செய்து கொள்வீராக. இன்னும் அவர்கட்காக இறைவனிடத்தில் பாவ மன்னிப்புத் தேடுவீராக. நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிகவும் இரக்கமுள்ளவன்.

(அல்குர்ஆன் 60)

அல்குர்ஆன் 6வது அத்தியாயம் சூரா அன்ஆம் 140வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

“அறிவின்றி மடமையால் தங்கள் மக்களைக் கொலை செய்தவர் களோ அவர்களும், தங்கட்கு (புசிக்கக்) கொடுத்திருந்தவற்றை (ஆகாதென) அல்லாஹ்வின் மீது கற்பனையாகக் கூறி விலக்கிக்





கொண்டார்களே அவர்களும் நிச்சயமாக நட்டமடைந்து விட்டார்கள்.அவர்கள் நேர்வழி பெற்றவர்களாக இருக்கவும் இல்லை.

(அல்குர்ஆன் 6 – 140)

இந்த நான்கு அல்குர்ஆன் வசனங்களிலும் குழந்தைகளைக் கொலை செய்வதை அல்லாஹ் வன்மையாகக் கண்டித்திருக்கிறான். கொலை செய்வதற்கு 'கத்ல்' என்ற அறபிச் சொல்லே இந்த நான்கு வசனங்களிலும் பாவிக்கப்பட்டுள்ளது. 'கத்ல்' என்றால் உயிருள்ள பொருளை வெட்டுதல் அல்லது வெட்டிக்கொலை செய்தல் என்று பொருள்.

இந்த வசனங்கள் இறக்கப்பட்ட காலகட்டத்தை எண்ணிப்பார்க்க வேண்டும். அக்கால அரேபியர்கள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்துக்கொலை செய்தனர். பெண் குழந்தைகள் உழைக்க மாட்டார்கள் என்பதாலும், அவர்களால் செலவு அதிகம் என்பதாலும் வறுமைக்குப் பயந்து அவர்களைக் கொலை செய்தனர். பனூ தமீம், பனூ முளா கோத்திரத்தினர் பெண் குழந்தைகளை உயிருடனேயே புதைத்துவிடுவர்.(2) அரேபியர்கள் ஆண் குழந்தைகளையும் பலியிட்டனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் தந்தை அப்துல் முத்தலிப் அவர்கள் தனக்குப் பத்து புதல்வர்கள் பிறந்தால் ஒருவரைக் கஃபாவில் பலியிடுவதாக நேர்ச்சை செய்திருந்தார். இவ்வாறு பிறந்த குழந்தைகளைக் கொலை செய்வதைத்தான் இந்த அல்குர்ஆன் வசனங்கள் தடை செய்துள்ளன.

அல்குர்ஆன் சூரா அந் நஹ்ல் 16வது அத்தியாயம் 58, 59வது திருவசனங்களில் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

.....இன்னும் அவர்களிடம் பெண் (குழந்தை) பிறந்திருப்பதாக நற்செய்தி கூறப்பட்டால் அவர் கோபமாகி முகம் கறுத்து விடுவார்.

(அல்குர்ஆன் 16:50)

எதைக் கொண்டு நற்செய்தி கூறப்பட்டதோ அதன் கெடுதிக்காக சமூகத்திடம் இருந்து மறைந்து கொள்கிறார். பழிப்புடன் (அந்தக் குழந்தையை) விட்டு வைப்பாரா அல்லது மண்ணில் புதைப்பாரா? அவர்கள் முடிவு மிகக் கெட்டது.

(அல்குர்ஆன் 16:59)

பெண் குழந்தைகள் பிறந்திருப்பதாக அக்கால அராபியரிடம் சொல்லப்பட்டால் அவர் மனைவியின் மீது கோபம் அடைந்து வெட்கத்தால் முகம் விகாரமாகி விடுவார். பெண்கள் பற்றிய அவர்கள் முடிவு மிகவும் கொடுமையானது.

இத்தகைய கொடுமையான முறையில் குழந்தைகளைக் கொலை செய்வதைத்தான் அல்குர்ஆனில் கண்டிக்கப்பட் டுள்ளதே தவிர குடும்பத் திட்ட முறைகளை அல்ல.

கலீபா உமர் (றழி) அவர்கள் காலத்தில் நாயகத் தோழர்கள் சிலர் குடும்பத்திட்ட முறைகள் சிறிய உயிர்க் கொலையா அல்லவா என்று விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது அலி (றழி) அவர்கள் அல்குர்ஆன் 25வது அத்தியாயம் சூரா அல் மு.ஃ.மினூன் 12, 13, 14வது வசனங்களை ஓதிக் காட்டினார்கள். இந்த வசனங்கள் மனிதன் எப்படி உருவாக்கப்படுகின்றான் என்பதை விளக்குகின் றன.

மனிதனைக் களிமண்ணின் மூலச் சத்தில் இருந்து படைத்தோம்.





(23:12)

பின்னர் (கருப்பையில்) ஒட்டிக் கொண்டிருக்கும் திரவப் பொருளாக வைத்தோம்.

(23:13)

பின்னர் அதை இரத்தக் கட்டியாக ஆக்கினோம். பின்னர் மாமிசத் துண்டாக ஆக்கினோம். பின்னர் அதில் எலும்புகளை உருவாக்கினோம். அந்த எலும்புகளைத் தசைகளால் மூடினோம். பின்னர் அதை இன்னொரு படைப்பாக (ஹல்க்கன் ஆகிர்) ஆக்கினோம்.

(23:14)

இந்த வசனங்களை ஓதிக் காட்டிய ஹசரத் அலி (றழி) அவர்கள் ஆணுடைய திரவமும், பெண் முட்டையும் சேர்ந்து கருக்கட்டி எத்தனையோ நாட்களுக்குப் பின்னர்தான் றூஹ் (உயிர்) ஊதப்படுவதால் குடும்பத்திட்ட முறைகள் உயிர்க்கொலை அல்ல என விளக்கினார்கள். இதைக் கேட்டு வியந்த உமர் (றழி) அவர்கள் ஹசரத் அலி (றழி) அவர்கட்கு இறைவன் நீண்ட ஆயுளைத் தர வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். இந்த சம்பவத்தை உபைத் இப்னு அபீ ரபாஹ் (றழி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த விபரம் அல்-பைஹக்கீ, அந்-நஸாயீ ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் பதிவாகி உள்ளது.[3]

நபித் தோழர் ஹசரத் அபூஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் குடும்பத் திட்ட முறை பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. "குடும்பத் திட்ட முறைகள் சிறிய உயிர்க்கொலை (Minor infanticide) என்று யூதர்கள் சொல்கிறார்களே, உங்கள் கருத்து என்ன என்று வினவப்பட்டது.

அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "யூதர்கள் பொய் சொல்கிறார்கள். குடும்பத் திட்ட முறைகள் உயிர்க்கொலை அல்ல" என்று பதில் அளித்தார்கள். இந்த ஹதீஸ் பைஹக்கீ ஹதீஸ் கிரந்தத்தில் பதிவாகி உள்ளது.(4)

ஹசரத் அபூ ஸஃதில் குத்ரி (றழி) அவர்கள் இந்த சம்பவத்தை அறிவிக்கிறார்கள். ஒரு மனிதர் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, "இறைதூதரே, நான் குடும்பத் திட்டத்தைப் பின்பற்ற விரும்பு கிறேன். ஆனால் யூதர்கள் குடும்பத் திட்டத்தைச் சிறிய உயிர்க் கொலை (மவ்ஊதத்து சகீர்) என்கிறார்கள். உங்கள் அபிப்பிராயம் என்னவென்று கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'யூதர்கள் பொய் சொல்கிறார்கள். குடும்பத் திட்டம் உயிர்க் கொலை அல்ல; ஆனால் அல்லாஹ் எதை நாடுகிறானோ அதைத் தவிர்க்க முடியாது" என்று பதில் அளித்தார்கள். இந்த சம்பவம் அபூதாவூத், அல் தஹாபீ, இப்னு ஹன்பல் ஆகியோர்களின் கிரந்தங்களில் பதிவாகி உள்ளது.(5)

ஆகவே அல்குர்ஆனின் உங்கள் குழந்தைகளைக் கொல்லா தீர்கள் போன்ற வசனங்கள் உயிருள்ள குழந்தைகளைக் கொலை செய்வதைத் தான் தடை செய்துள்ளதே தவிரக் குடும்பத் திட்டத்தை அல்ல. குடும்பத் திட்டம் உயிர்க் கொலையும் அல்ல.





## (3)

# பிள்ளைகளா அதிக பிள்ளைகளா ?

இக் கட்டுரைத் தொடர் தினகரன் வார மஞ்சரியில் பிரசுரமானபோது வாசகர் மத்தியில் பெரும் பரபரப்பைத் தோற்றுவித்தது. அதிகமான வாசகர்கள் பல கேள்விகளைக் கேட்டிருந்தனர். இக் கட்டுரைத் தொடரின் நோக்கமும் அதுவேயாகும்.

அதிகமானோர் கேட்டிருந்த கேள்வியும் சந்தேகமும் "இஸ்லாத்தில் பிள்ளைகளை அதிகமாகப் பெருக்கும்படி கூறப்பட்டிருக்கின்றதே. அது சம்பந்தமான உண்மை நிலை என்ன" என்பதாகும்.

அல்குர்ஆனின் குழந்தைச் செல்வங்கள் சம்பந்தமாக அருளப்பட்டுள்ள சில வசனங்களை அவதானிப்போம்.

சூரா அன் நஹ்ல் 16வது அத்தியாயம் 72வது வசனம் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

**உங்களில் இருந்தே உங்களுக்காக மனைவியரை அல்லாஹ் ஆக்கினான். உங்கள் மனைவியரில் இருந்து குழந்தைகளையும்,**

**பேரக் குழந்தைகளையும் அளித்துள்ளான். இன்னும் நல்லவற்றில் இருந்து உங்கட்கு உணவளித்துள்ளான். அவர்கள் பொய்யானதை விசுவாசித்து அல்லாஹ்வின் நற்கொடையை நிராகரிக்கின்றனரா?**

(அல்குர்ஆன் 16:72)

இந்த வசனத்தின் உட்பொருளைக் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனைவி, குழந்தைகள், பேரக்குழந்தைகள், உணவு போன்றவை மனிதனுக்கு மிகுந்த மகிழ்ச்சி தரக் கூடியவை. அவை அல்லாஹ்வின் அருட்கொடைகளாகும். இந்த வசனத்தில் பிள்ளைகள் அருட்கொடைகள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அதிக அளவு பிள்ளைகளைப் பெற்றுக் குவியுங்கள் என்று கூறப்பட்டுள்ளதா?

இந்த வசனத்தில் குழந்தைகளையும், உணவையும் இரண்டையும் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. அல்குர்ஆனின் இன்னுமொரு அருள்வசனத்தில் "நீங்கள் உண்ணுங்கள், அருந்துங்கள்; ஆனால் வீண் விரயம் செய்யாதீர்கள்; ஏனெனில் அல்லாஹ் வீண் விரயக்காரர்களை விரும்ப மாட்டான்" என்று அருளப்பட்டுள்ளது.

உணவும், குழந்தைப் பேறும் ஒரே வசனத்தில் இணைந்திருப்பதால் அவ்விரண்டிலும் அளவுக்கு அதிகமாக வேண்டாம் என்று கொள்ளலாம் அல்லவா!

அல்குர்ஆன் சூரத்துல் கஹ்ப் 18வது அத்தியாயம் 46வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது :

**செல்வமும் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்வின் அலங்காரங்களாகும். மேலும் என்றுமே நிலையான நற்கருமங்கள்தான் இறைவனிடத்தில்**





**மிகச் சிறந்ததாகும். (மறுமையை) ஆதரவு கொள்வது மிகச் சிறந்தது.**

(அல்குர்ஆன் 18:46)

இந்த வசனத்தையும் நன்கு அவதானியுங்கள். புத்திர பெருமையிலும், செல்வத்திலும் மதி மயங்கி விடாமல் இறைவனைத் திருப்திப்படுத்தும் நல்ல காரியங்களைச் செய்யுமாறு இங்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதா அல்லது அதிகமாகப் பிள்ளைகளைப் பெறும்படி குறிப்பிடப்பட்டுள்ளதா?

அல்குர்ஆன் 25வது அத்தியாயமான சூரத்துல் புர்க்கான் 74வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

(மேலும் அவர்கள் எத்தகையவர்களென்றால்,)

**"எங்கள் இறைவனே எங்கள் மனைவியர்களிடம் இருந்தும் எங்கள் சந்ததிகளில் இருந்தும் எங்கட்கு மகிழ்ச்சியைத் தந்தருள்வாயாக. அன்றியும் பயபக்தி உடையவர்கட்கு எங்களை வழிகாட்டியாக ஆக்குவாயாக என்று பிரார்த்திப்பார்கள்."**

(அல்குர்ஆன் 25:74)

நல்ல முஸ்லிம்களின் பண்புகள், பிரார்த்தனைகள் பற்றி இறைவன் இந்த அத்தியாயத்தில் 71வது வசனத்தில் இருந்து 76வது வசனம் வரை குறிப்பிடுகின்றான். இந்தப் பிரார்த்தனையைப் பாருங்கள். இதில் சந்தோஷத்தைத் தரக் கூடிய பிள்ளைகளைத் தருமாறுதான் பிரார்த்திக்கிறார்களே தவிர அதிக பிள்ளைகளைத் தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதா? ஒரு முஸ்லிமின் பிரார்த்தனை மகிழ்ச்சி தரக்கூடிய இறைவனுக்குப் பிரியமான குழந்தைகளே தவிர, அதிக குழந்தைகள் அல்ல.

திருமறையின் மூன்றாம் அத்தியாயம் சூரா ஆல இம்ரான்

38வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

**அந்த இடத்தில் சகரிய்யா தன் இறைவனை வேண்டினார். என் இறைவனே, எனக்குப் பரிசுத்தமான ஒரு சந்ததியை அளிப்பாயாக. நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவியுறு கின்றவன் என்று கூறினார்.**

(அல்குர்ஆன் *3:38*)

இந்த வசனத்தையும் பாருங்கள். இறைதூதர் சகரிய்யா (அலை) அவர்கள் பரிசுத்தமான ஒரு சந்ததியைக் கேட்டுத்தான் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்களே தவிர, அதிக பிள்ளைகளைக் கேட்டு அல்ல. ஆகவே நமது வாழ்வும், பிரார்த்தனையும் இறைவழி நடக்கும் சிறந்த பிள்ளைகளை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமே தவிர வெறும் இலக்கத்தில் அதிகமான பிள்ளைகளை அல்ல.

இங்கு சந்ததி என்று குறிப்பிடப்பட்டுள்ளதே, இதை பெரும் மக்கட் கூட்டம் என்று நினைத்து விட வேண்டாம். அறபி மொழி வாக்கு அப்படி. பின்னால் வருகின்ற இந்த அல்குர்ஆன் வசனங்களைக் கவனியுங்கள். இறைதூதர் இப்றாஹிம் (அலை) அவர்கள் பற்றி அல்குர்ஆன் சூரா அஸ்ஸாபாத் 37வது அத்தியாயம் 100 ஆம், 101 ஆம் திருவசனங்களில் இப்படி அருளப்பட்டுள்ளது.

**"என் இரட்சகனே, நல்லோர்களில் (ஒருவரை) நீ எனக்கு (சந்ததியாக) தந்து அருள் புரிவாயாக" என்றார்.**

(அல்குர்ஆன் *37:100*)

**ஆகவே மிகுந்த சகிப்புத்தன்மை உடைய (இஸ்மாயில் எனும்) மகனைக் கொண்டு அவருக்கு நன்மாராயம் கூறினோம்.**





(அல்குர்ஆன் *37:101*)

இந்த வசனங்களைப் பாருங்கள். சந்ததி என்பது மக்கட் பெருக்கத்தை அல்ல. இறைதூதர் இப்றாஹிம் (அலை) அவர்களின் பிரார்த்தனை நல்ல ஒரு பிள்ளையை அருள வேண்டுமென்பதே தவிர அதிக பிள்ளைகளை வேண்டி அல்ல.

அல்குர்ஆன் 57வது அத்தியாயம் சூரா அல்ஹதீத் 20வது வசனம் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

**(மனிதர்களே) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக இந்த உலக வாழ்க்கையெல்லாம் விளையாட்டும், வீணும், உங்கட்கிடையில் பெருமை அடித்துக் கொள்வதும், பொருளையும் பிள்ளைகளையும் பெருக்கிக் கொள்வதுமேயாகும். (இது) ஒரு மழையைப் போன்றது. மழையால் பயிர்கள் வளர்ந்து விவசாயியை மகிழச் செய்கின்றன. பின்னர் பயிர்கள் உலர்ந்து மஞ்சளாகி சருகுகள் ஆகின்றன. (இவ்வுலக வாழ்க்கையும் இவ்வாறே) மறுமையில் (சிலருக்கு) கொடிய வேதனையும் (சிலருக்கு) இறைவனின் திருப் பொருத்தமும் கிடைக்கின்றன. ஆகவே இவ்வுலக வாழ்க்கை (மனிதனை) மயக்கும் (சொற்ப) இன்பமேயன்றி வேறில்லை.**

(அல்குர்ஆன் *57:20*)

இந்த வசனங்களில் 'லஇபுன்' (விளையாட்டு, பிரயோசன மில்லாத வேலைகள்) என்ற அறபிச் சொல்லும் லஹ்வுன் (தேவையான காரியங்களை விட்டு விட்டுத் தேவையில்லாத காரியங்களில் ஈடுபடல்) என்ற அறபிச் சொல்லும் பாவிக்கப்பட்டுள்ளன. அதாவது பிள்ளைகளையும், பொருட்களையம் பெருக்குவது வீணான, அவசியமில்லாத வேலைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில்

மயங்கிக் கிடப்போருக்கு மறுமையின் கொடிய வேதனை எச்சரிக்கப்பட்டுள்ளது. இறைவழி நடப்போருக்கு இறைவனின் திருப் பொருத்தத்தை நன்மாராயம் கூறப்பட்டுள்ளது. ஆகவே அளவுக்கு மீறி அதிக அளவு பிள்ளைகள் பெற்றுக் கொள்ளலாமா?

அல்குர்ஆன் 63வது அத்தியாயம் சூரா அல் முனாபிக்கூன் 9வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

**"விசுவாசிகளே, உங்கள் பொருளும், மக்களும் அல்லாஹ்வை நினைப்பதை விட்டு உங்களைப் பழுதாக்கி விட வேண்டாம். மேலும் எவர் அதைச் செய்கிறாரோ அவர்தான் நஷ்டவாளர்கள்.**

**(அல்குர்ஆன் *63:9*)**

இறைபக்தியை விட்டுத் திசை திருப்பக் கூடிய முக்கியமானவை பொருளும், பிள்ளைகளும் ஆகும். அளவுக்கு மீறிப் பொருள் தேடும் அதிகமானோர் பாவ புண்ணியம் பார்ப்பதில்லை. பிள்ளைகட்குச் சொத்துச் சேர்க்கும் எண்ணத்தில் நியாய, அநியாயங்களை எண்ணிப்பார்ப்பதில்லை. பிள்ளைகள் வாஞ்சையால் தம்மையே மறந்து விடுகின்றார். ஆகவே அதிக பிள்ளைகள் பெறுமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறதா என்று எண்ணிப் பாருங்கள்.

அல்குர்ஆன் 64வது அத்தியாயம் சூரா அத்தகாபுன் 15வது வசனம் இப்படி வருகின்றது.

**உங்கள் பொருள்களும், பிள்ளைகளும் (உங்கட்குச்) சோதனையேயாகும். ஆனால்அல்லாஹ்விடத்தில் மகத்தான நற்கூலியுண்டு.**





**(*64:15*)**

இந்த வசனத்தில் பொருட்கள், பிள்ளைகள் என்ற இரண்டுக்குமே பித்னத் (Fithnath) என்ற அறபிச் சொல் பாவிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் மீது உள்ள வாஞ்சையால் பொருள் தேடும் ஆசையில் தங்களை மறந்து பாவத்தில் வீழ்ந்து விடுகின்றனர். இரண்டுமே பாவங்கட்குக் காரணமாகி விடுகின்றன. பிள்ளைகளும், செல்வங்களும் பாவத்தில் வீழ்த்தக் கூடிய சோதனைகள் என்று அல்லாஹ்வே எச்சரிக்கும்போது அதிக பிள்ளைகள் பெற்றுக் கொள்ளலாமா?

## ( 4 )

# வருடத்திற்கொரு பிள்ளையா ?

அல்லாஹ்வின் அருள் வேதமான அல்குர்ஆனில் ஒரு வசனம் கூட குடும்பத்திட்டத்திற்கு எதிராக இல்லை என்று எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் தலைவர் ஷேக் ஜாதல் ஹக் அவர்கள் தம்முடைய மார்க்கத் தீர்ப்பில் (பத்வாவில்) குறிப் பிட்டுள்ளார்.[1]

மாறாக அல்குர்ஆனின் பல வசனங்கள் இடைவெளிகள் விட்டுப் பிள்ளைகள் பெறுவதை ஆதரிப்பனவாக இருக்கின்றன.

அல்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயம் சூரத்துல் பக்கறா 233வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

> தாய்மார்கள் தங்கள் குழந்தைகட்கு இரண்டு வருடங்கள் பாலூட்டுவார்கள். இன்னும் அவர்கட்கு உணவும், உடையும் (வழங்குவது) தந்தையின் கடமையாகும். எந்த ஓர் ஆத்மாவும் சக்திக்கு அதிகமாகச் சிரமப்படுத்தப்பட மாட்டாது. ஒரு தாயோ, தந்தையோ குழந்தையின் காரணமாகத் துன்புறுத்தப்பட மாட்டார்.





> (குழந்தையின் தகப்பன் இறந்துவிட்டால் அதனைப் பராமரிப்பது) வாரிசின் கடமையாகும். (குழந்தையின் தாயும், தந்தையும்) ஆலோசித்து பால் குடித்தலை இரண்டு ஆண்டுகட்குள் மறக்க நாடினால் அது குற்றமல்ல....
>
> (அல்குர்ஆன் 2:223)

அல்குர்ஆன் 46வது அத்தியாயம் சூரத்துல் அல் அஹ்காப் 15வது வசனம் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

> மேலும் தன்னுடைய பெற்றோர்க்கு நன்மை செய்யுமாறு மனிதனுக்கு நாம் உபதேசம் செய்தோம். அவனுடைய தாய் சிரமத்துடன் அவனைச் சுமந்திருந்து சிரமத்துடன் அவனைப் பிரசவிக்கிறாள். கர்ப்பத்தில் சிசுவைச் சுமப்பதும் பால்குடி மறக்கச் செய்வதும் முப்பது மாதங்களாகும். முடிவாக இவன் வாலிபமாகி நாற்பது வயதை அடைந்ததும் என் இறைவனே! நீ என் மீதும் என் பெற்றோர் மீதும் புரிந்த அருளுக்காக நன்றியைச் செலுத்துகிறேன். நீ எதனைப் பொருந்திக் கொள்வாயோ அந்த நற்செயலைச் செய்யும் (நல்லறிவை) தருவாயாக. என்னுடைய சந்ததியினரைச் சீர்திருத்தி வைப்பாயாக. நிச்சயமாக நான் பாவமன்னிப்புடன் உன் பக்கம் திரும்பி விட்டேன்; நான் (முற்றிலும் உனக்கு கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் இருக்கிறேன் என்று கூறுவான்.
>
> (அல்குர்ஆன் 46:15)

இந்த இரண்டு அல்குர்ஆன் வசனங்களையும் பாருங்கள். ஒரு குழந்தைக்குக் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் தாய் பால் ஊட்ட வேண்டும். கர்ப்பவதியான பெண்ணில் ஒரு குழந்தை பால் குடிப்பதை அறபியில் கயால் (ghayal) என்று குறிப்பிடப்படும். அஸ்மா பின்த் ஸைதிப்னு சக்கன் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் கர்ப்பவதியான பெண்ணொருத்தி பால் ஊட்டுவதை விரும்பவில்லை. இந்த ஹதீஸ் அபூதாவூத் கிரந்தத்தில் பதிவாகியுள்ளது.(2)

ஒரு குழந்தைக்கு இரண்டு வருடங்கள் பால் ஊட்டப்படல் வேண்டுமென்றால், அந்த இரண்டு வருடங்களிலும் அந்தத் தாய் கர்ப்பவதியாகக் கூடாதென்றால் இரண்டு குழந்தைகட்கிடையே குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் இடைவெளி வேண்டும்.

குழந்தைகள் மீது பெற்றோருக்குச் சில கடமைகள் இருக்கின்றன என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள். அந்தக் குழந்தைகட்கு நல்ல கருத்துள்ள பெயர்களை இடல் வேண்டும். அவைகட்கு இரண்டு வருடங்கள் பால் ஊட்டப்படல் வேண்டும். ஏழு வயதில் அவர்களைத் தொழும்படி ஏவ வேண்டும். பத்து வயதிலும் தொழாவிடின் கண்டித்துத் தொழ வைக்க வேண்டும். அவர்களது படுக்கைகளைத் தனித்தனியாக்க வேண்டும். தனித்தனிப் படுக்கைகள் என்னும்போது தனித்தனி அறைகளாகவோ, தனித்தனிக் கட்டில்களாகவோ அல்லது குறைந்த பட்சம் தள்ளிப் போடப்பட்ட தனித்தனிப் பாய்களாகவோ, கம்பளங்களாகவோ இருக்கலாம். இந்த ஹதீஸ் இமாம் அஹ்மது இப்னு ஹன்பலி அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.(3) அவர்களது பிற்கால வாழ்க்கைக்கும் வழி செய்ய வேண்டியது அவசியமாகும். ஒரு பிள்ளைக்குத் தந்தை கொடுக்கின்ற சொத்துக்கள் பொது நிதியத்தில் இருந்து வழங்கப்படும் நன் கொடைகளை விட எவ்வளவோ மேல் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த ஹதீஸ் புனித சஹீஹுல் புகாரி கிரந்தத்தில் பதிவாகி உள்ளது.(4) அது தவிர இஸ்லாமிய





வாழ்க்கையையும், நற்பழக்க வழக்கங்களையும் ஒரு குழந்தைக்குக் கற்றுக கொடுப்பது ஒரு பெற்றோரின் தலையாய கடமையாகும். நற்குணங்களையும், நல் ஒழுக்கங்களையும் விட ஒரு தகப்பன் பிள்ளைக்கு வழங்கக்கூடிய சிறந்த சொத்து எதுவும் இல்லை என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாக தபரானியில் பதிவாகி உள்ளது.

குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்க்குள்ள கடமைகளை எண்ணிப் பார்க்கும்போது வருடாவருடம் பிள்ளைகள் உண்டாவது நல்லதா அல்லது இடைவெளிகள் விட்டுப் பிள்ளைகள் கொள்வது நல்லதா?

( 5 )

# இஸ்லாமும் துறவறமும்

ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதிநாளைப் பற்றியும், நரகத்தின் வேதனைகளைப் பற்றியும் உபதேசம் செய்தார்கள். இதன் பின்னர் பத்து நபித் தோழர்கள் உத்மான் இப்னு மத்ஊன் (றழி) அவர்கள் வீட்டில் கூடினார்கள். அவர்கள் தாங்கள் காலமெல்லாம் நோன்பு நோற்க வேண்டும்; இரவெல்லாம் விழித்திருந்து இறைவனை வணங்க வேண்டும்; இறைச்சியை உண்ண மாட்டோம்; மனைவியுடன் உறவு கொள்வதில்லை; சந்நியாசம் பூண வேண்டுமென்று முடிவு செய்தனர். இதை அறிந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களையும், ஏனையோரையும் அழைத்து "நான் உங்கட்கு ஒருபோதும் இப்படி ஏவவில்லையே. என்னைப் பாருங்கள். நான் சில நாட்களில் நோன்பு வைக்கிறேன். இரவின் சில பொழுதில் வணங்குகிறேன். சில பொழுதுகளை என் மனைவியருடன் கழிக்கிறேன். எவர் என்னைப் பின்பற்ற வில்லையோ அவர் என்னைச் சேர்ந்தவர் அல்ல என்று கண்டித்தார்கள்.[1] அவர்கள் இவ்வாறு உபதேசித்துக் கொண்டிருந்த போது பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் இறங்கின.





விசுவாசிகளே, இறைவன் உங்கட்கு அனுமதித்தவைகளை விலக்கிக் கொள்ளாதீர்கள். இன்னும் (அனுமதித்திருப்பவற்றில்) வரம்பு மீறாதீர்கள். அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிக்க மாட்டான். சூரா அல்–மாயிதா.

(அல்குர்ஆன் 5:87)

இன்னும் இறைவன் உங்கட்கு உணவாக்கி இருப்பதில் நின்றும் ஆகுமாக்கப்பட்ட நல்லதைப் புசியுங்கள். இன்னும் நீங்கள் விசுவாசங் கொண்டிருக்கும் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்.

(அல்குர்ஆன் 6:86)

இந்த வசனங்களைப் பார்க்கும்போது இஸ்லாத்தில் துறவறம் என்ற சொல்லுக்கே இடமில்லை.

சக்தி பெற்றவர்களைத் திருமணம் செய்து கொள்ளும்படி அல்குர்ஆன் பல இடங்களில் வற்புறுத்தியுள்ளது. குடும்பத்தைக் காக்கும் திறன் பெற்றோர் திருமணம் முடிப்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் வலியுறுத்தி உள்ளார்கள்.

வேறு சில மதங்களில் இனப்பெருக்க நோக்கத்திற்காக மாத்திரமே தம்பதியர் உடல் உறவு கொள்ள முடியும். ஆனால் இஸ்லாத்தில் அப்படியல்ல. கணவன் மனைவி உறவு இதற்கும் அதிகமானது; அந்நியோன்யமானது.

அல்குர்ஆன் சூரா அல்–ரூம் 30வது அத்தியாயம் 21வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் இருந்து மனநிம்மதி பெறுவதற்காக உங்களில்

**இருந்தே உங்கட்காக அவன் படைத்தான்; உங்கட்கிடையில் அன்பையும், உறவையும் ஆக்கினான். இவை அவனது அத்தாட்சிகளில் உள்ளவை. சிந்திக்கக் கூடியவர்கட்கு இதில் அத்தாட்சி உண்டு.**

**(அல்குர்ஆன் *30;21*)**

இந்த அல்குர்ஆன் அருள்வசனங்களைப் பாருங்கள். கணவன் – மனைவி உறவும் பாசமும் எவ்வளவு தெளிவாக விளக்கப் பட்டுள்ளன?

ஒரு பெண்ணுக்கு இறைவனின் பொருத்தம் அவளது கண வனின் பொருத்தத்தின் அளவைப் பொறுத்ததே ஆகும். கணவனின் திருப்தியைப் பெறாத பெண் இறைவனின் கடுங்கோபத்திற்கு உள்ளாகிறாள். அதுபோன்ற ஒரு கணவனுக்குத் தனது மனைவி யையும் பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கின்றது.

இஸ்லாம் திருமணம் செய்வதை மிகவும் வற்புறுத்தி இருக் கிறது. வசதியும் வாய்ப்பும் இருந்தும் திருமணம் செய்து கொள்ளாத வர்கள் இஸ்லாத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். திருமணம் அல்லாஹ் வுக்கு மிகவும் பிடித்தமான ஒரு நடைமுறை; அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தமது வழிமுறைகளில் ஒன்றாகக் காட்டிய வாழ்க்கை முறை. ஒருவர் தனது மனைவி, குழந்தைகட்குச் செலவளிப்பது சதக்கா (தர்மம்) ஆகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். “ஒருவன் தனது மனைவியின் செலவினங்களை வழங்குவதற்காக அல்லாஹ்வால் சிறப்பிக்கப்படுவான். ஒரு கவளம் உணவை அன்புடன் மனைவிக்கு ஊட்டினால் அதற்கும் அவன் பாராட்டப்படுவான்.”(2)





மனைவியை விட்டும் பிரிந்து துறவறத்தில் இருப்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவே இல்லை. அதற்காக ஓய்வு ஒழிவு இன்றிப் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்றும் அர்த்தமல்ல.

இஸ்லாத்தில் துறவறத்திற்கு இடமில்லை என்றால் கணவனும் மனைவியும் வாஞ்சையோடு வாழ வேண்டுமென்றால், குழந்தை கட்கு இரண்டு வருடங்கள் பால் கொடுத்து, அவர்கட்குச் சகல வசதிகளையும் அளிக்க வேண்டுமென்றால், இடைவெளிகள் விட்டு பிள்ளைகள் பெறுதல் குடும்பத் திட்ட முறைகள் இன்றி எப்படிச் சாத்தியமாகும்?

## ( 6 )

# விளைநிலத்தை வளமாக்குவோம்

அல்குர்ஆன் இரண்டாம் அத்தியாயமான சூரா அல் பக்கரா 223வது அத்தியாயத்தில் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

"உங்கள் மனைவியர் உங்கட்குரிய விளைநிலங்கள். ஆகவே உங்கள் விளைநிலங்கட்கு நீங்கள் விரும்பியவாறு சென்று கொள்ளுங்கள். உங்கட்காக (நன்மைகளை) முற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் இறைவனைச் சந்திக்கக் கூடியவர்கள் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். மேலும் விசுவாசிகட்கு நன்மாராயங் கூறுங்கள்.

*(அல்குர்ஆன் 2:223)*

இந்த அல்குர்ஆன் வசனத்தைக் கவனமாக ஆராய்ந்து பாருங்கள். இறைவன் பெண்களை விளைநிலங்கட்கு





உவமித்துள்ளான். ஒரு நல்ல விவசாயி விளைநிலத்தில் தொடர்ந்து ஒருபோதும் பயிர் செய்வதில்லை. நெல் வயல்களை எடுத்துக் கொண்டால் ஒரு வருடத்திற்கு ஒரு போகம் அல்லது இரண்டு போகம்தான் செய்யப்படுகின்றது. அறுவடையின் பின் பல மாதங்கட்கு நிலம் பண்படுத்தப்படுகின்றது. ஓய்வாக விடப்படுகின்றது. விளைநிலங்கள் பல மாதங்கள் ஓய்வாக விடப்படுவது போல் பெண்களும் சில வருடங்கள் ஓய்வாக விடப்படல் வேண்டும். ஒரு சகோதரி எனது ஞாபகத்திற்கு வருகிறார். தனது 22வது வயதில் ஆறாவது பிரசவத்திற்காக வந்திருந்தார். பதினேழு வயதில் திருமணம் முடித்திருந்தார். ஐந்து வருட மண வாழ்க்கையில் ஆறாவது பிரசவம்! இடைவெளியில்லாமல் பயிரிடப்படும் விளைநிலம் உரமின்றி, வளமின்றித் தரிசாகப் போவது போல் இந்த இளம் பெண்ணும் அதிகப் பிள்ளைகளை இடைவெளி இன்றிப் பெற்றதால் வளமின்றி, வாடிப் போய் இருந்தார். அந்த சகோதரியின் காலில் நாளங்கள் வீங்கி, வெடித்து அந்த சகோதரி அனுபவிக்கும் இன்னல்களை எழுத்தில் வடிக்க முடியாது.

இந்தக் கட்டுரைத் தொடர் தினகரன் வார மஞ்சரியில் வெளியானபோது சிலர் எனக்குக் கடிதம் எழுதி இருந்தார்கள். நான் இந்த அல்குர்ஆன் வசனத்திற்குப் பிழையான வழியில் விளக்கம் தருவதாகவும் 'விளைநிலங்கட்கு விரும்பியவாறு சென்று கொள்ளுங்கள்' என்று இந்த வசனத்தில் வந்திருப்பதால் மனைவியை விரும்பியபடி அனுபவித்துக் கொள்ள அவளது கணவனுக்கு உரிமை இருப்பதாகவும் எழுதி இருந்தார்கள்.

இந்த வசனத்தின் கருத்து அதுவல்ல. நினைத்தவாறு எல்லாம் உருட்டிப் பிரட்டி எடுப்பதற்கு பெண் வெறும் சதைப் பிண்டம் அல்ல. அவளுக்கும் உயிர் இருக்கிறது; உணர்வுகள் இருக்கின்றன.

பெண்கள் தொடர்பான வைத்தியத் துறையைச் சேர்ந்தவன் என்ற வகையில் ஒரு கணவன் தன்னுடைய மனைவியுடன் எவ்வாறு

நடந்துகொள்ள வேண்டும் என்று எவ்வளவோ எழுதத் தோன்றுகின்றது. பல காரணங்கட்காக இந்த நூலில் அவற்றை எழுத முடியாது. குடும்பத் திட்டம் சம்பந்தமான விளக்கத்தை மாத்திரம் தர முற்படுகின்றேன்.

இமாம் அபூ ஹனிபா (றஹ்) அவர்கள் இந்த அருள்வசனம் குடும்பத் திட்ட முறைகளைப் பாவித்தோ அல்லது பாவிக்காமலோ விரும்பியபடி நடந்துகொள்ள அனுமதிப்பதாகவே விளக்கம் அளித்துள்ளார்கள்.[1]

அல்குர்ஆனுக்கு விளக்க உரைகள் எழுதியுள்ள இமாம் அபூபக்கர் ஜஸஸ் (றஹ்) அவர்கள் தங்களுடைய அக்ரமுல் குர்ஆன் என்ற நூலிலும் குடும்பத் திட்ட முறைகளைப் பாவித்தோ, பாவிக்காமலோ இருப்பதற்கு இந்த அருள்வசனம் வழிவகுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.[2]

ஹசரத் ஸாயிதா இப்னு உமைர் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இப்னு அப்பாஸ் (றழி) அவர்களிடம் நான் இந்த வசனம் பற்றி விளக்கம் கேட்டேன். அதற்கு இந்த வசனம், நீர் விரும்பினால் குடும்பத்திட்ட முறைகளுடனோ அல்லது இல்லாமலோ இணைவதற்கு அனுமதி அளிப்பதாகத் தெரிவித்தார்கள். இவை அல்-ஹாக்கிம் அவர்களது முஸ்தத்ரக் என்ற நூலிலும் அல்-தஹ்ஹாரி அவர்களது தப்ரீ என்ற நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.[3]

ஸஈத் இப்னு முஸய்யிப் (றஹ்) அவர்கள் இந்த வசனம் பற்றி விளக்குகையில் விரும்பினால் குடும்பத் திட்ட முறைகளைப் பாவிப்பதற்கோ, விரும்பாவிட்டால் அவை இன்றியோ உறவு கொள்ள அனுமதிப்பதாக தெரிவித்துள்ளார். தப்ஸீருல் தபரீயில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.[4]

ஆகவே ஓய்வே இல்லாமல் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு இருப்போமா அல்லது விளைநிலத்தை வளமாக்குவோமா?





( 7 )

# தொகைப் பலமா? தரப் பலமா?
## (Quantity or Quality?)

முஸ்லிம்கள் அதிக அளவில் பெருகினால் எதையும் சாதிக்கலாம் என்று பல பேர் எண்ணுகிறார்கள். பல முஸ்லிம் நாடுகளில் அளவற்ற சனப்பெருக்கத்தால் அந்நாடுகள் அளவுக்கு அதிகமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அடிப்படை வசதிகள் இன்மை, போதிய கல்வி இன்மை, தொழில் வாய்ப்பின்மை, போதிய வருமானம் இன்னோரன்ன பல பிரச்சினைகளால் அந் நாடுகள் தடுமாறுகின்றன. பல ஆண்டுகட்கு முன்னர் இடம்பெற்ற அரபு-இஸ்ரவேல் யுத்தத்தில் பல நூறு மடங்கான அராபியர்களால் சிறிய அளவு எண்ணிக்கையான இஸ்ரவேலர்களுடன் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஆகவே வெறும் எண்ணிக்கையில் இனம் பெருகுவதால் மட்டும் இஸ்லாமிய சமூகம் தலைநிமிர்ந்து வாழ முடியாது. இஸ்லாத்தின் எதிர்பார்ப்பும் தரமான முஸ்லிம்களையே தவிர வெறும் எண்ணிக்கையில் அதிக அளவு முஸ்லிம்களை அல்ல.

இதற்கு ஆதாரமாகச் சில அல்குர்ஆன் வசனங்களை நோக்குவோம்.

அல்குர்ஆன் சூரா அல் பக்கரா 2வது அத்தியாயம் 249வது வசனத்தில் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

**...எத்தனையோ சிறு கூட்டத்தினர் இறைவன் அருளால் பெருங்கூட்டத்தை வெற்றி பெற்றுள்ளார்கள். மேலும் இறைவன் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்...”**

(அல்குர்ஆன் *2:249*)

இஸ்லாமிய வரலாற்றில் எப்போதும் சிறு கூட்டத்தினர்தான் பெருங் கூட்டத்தை வென்றிருக்கிறார்கள். பத்று யுத்தத்தில் 313 முஸ்லிம்கள் 1000 எதிரிகளைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடினார்கள். உஹத் யுத்தத்தில் ஆயிரம் முஸ்லிம்கள் மூவாயிரம் விரோதிகளை விரட்டியத்தார்கள். பல யுத்தங்களில் சில ஆயிரம் முஸ்லிம்கள் லட்சக்கணக்கான விரோதிகளை மிகவும் இலகுவாகத் தோற்கடித்து வெற்றி கண்டார்கள். வெறும் இலக்கத்திலோ தொகையிலோ எதுவும் இல்லை. தரமான முஸ்லிம்களே இன்றைய தேவை.

வெறும் எண்ணிக்கையில் எந்த விதமான பலனும் இல்லை என்பதற்கு அல்குர்ஆன் 9வது அத்தியாயம் சூரா அத் தவ்பா 25வது வசனம் சிறந்த சான்று பகர்கின்றது.

**அநேக (யுத்த)களங்களில் நிச்சயமாக இறைவன் உங்கட்கு உதவி செய்திருக்கிறான். இன்னும் ஹுனைன் யுத்தத்தில் உங்களை அகமகிழச் செய்த உங்கள் (வீரர்களின்) அதிகம் உங்கட்கு எந்தப் பயனையும் அளிக்கவில்லை. விசாலமான பூமி உங்கட்கு நெருக்கடியானது. பின்னர் நீங்கள் புறமுதுகிட்டுத் திரும்பினீர்கள்.**

(அல்குர்ஆன் *9:25*)





முஸ்லிம்களுக்கும், இறை மறுத்தோருக்கும் இடையில் இடம்பெற்ற அதிகமான யுத்தங்களில் முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாகவும், விரோதிகள் மிக அதிகமாகவும் இருந்தனர். ஆனால் முடிவில் முஸ்லிம்களே வெற்றி பெற்றனர்.

ஹிஜ்ரி எட்டாம் வருடம் மக்காவுக்கும் தாயிபுக்கும் இடைப் பட்ட ஹுனைன் என்ற இடத்தில் முஸ்லிம்களை ஹவாஜன் என்ற கோத்திரத்தார் எதிர்த்து யுத்தம் செய்தனர். இவர்களில் 4000 பேரும், முஸ்லிம்களில் 12000 பேரும் இருந்தனர். எண்ணிக்கைப் பலத்தை நினைத்துப் பெரும் சந்தோஷமடைந்திருந்த முஸ்லிம்கள் ஆரம்பத்தில் அசட்டையாக இருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹசரத் அப்பாஸ் (றழி) அவர்கள், அபூசுப்யான் (றழி) அவர்கள் போன்ற முக்கிய தோழர்கள் தவிர அநேகர் புறமுதுகிட்டோடினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் விடம் உதவி கோரினார்கள். இறைவன் அருளால் எதிரிகள் பின் வாங்கி முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள். பின்னர் ஹவாஜன் கோத்திரத்தைச் சேர்ந்த பெருந்தொகையானோர் இஸ்லாத்தைத் தழுவினர்

இந்த அல்குர்ஆன வசனத்தை ஆராய்ந்து பாருங்கள். சனத்தொகையின் அதிக பலத்தால் எதையும் சாதிக்க முடியாது என்பதற்கு இந்த அருள்வசனம் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

முஸ்லிம் நாடுகளில் இந்தோனேஷியாவின் சனத்தொகை இரு பது கோடியாகும். பாக்கிஸ்தானின் சனத்தொகை பதினைந்து கோடி யாகும். பங்களாதேஷின் சனத்தொகை பன்னிரண்டு கோடியாகும்.[1] கோடி கோடியாக மக்கள் இருந்தும் வெறும் ஆள்பல அதிகரிப்பால் (numerical strength) இந்த முஸ்லிம் நாடுகள் என்ன அபிவிருத்தியை அடைந்திருக்கின்றன? எதைச் சாதித்திருக்கின்றன? அபிவிருத்தி என்னும்போது ஒருவருக்கு எத்தனை மாளிகைகள், எத்தனை

கார்கள், எத்தனை செல்போன்கள் என்பதை நான் கருதவில்லை. இந்த நாடுகளில் பொருளாதார நிலை சரியாக இல்லை. போதிய சுகாதார வசதிகள் இல்லை. தாய், சேய் மரண விகிதங்கள் மிக அதிக அளவில் இடம்பெறுகின்றன.

குழந்தைகளின் மரண விகிதங்கள் தொடர்பாக 1985ம் ஆண்டு மெலின் மக்நமாரா என்பவர் ஓர் ஆராய்ச்சியை நடாத்தினார்.[2] அவரது முடிவின்படி இரண்டு வருட இடைவெளிக்குக் குறைவாக பிள்ளைகள் பெற்றால், அந்தப் பிள்ளைகளின் மரண விகிதம், இரண்டு வருடங்களுக்கு அதிகமாக இடைவெளி விடப்பட்டுப் பெறப்படும் பிள்ளைகளை விட இரண்டு மடங்கு அதிகமாகும். இதைப் புள்ளி விபரப்படி நிறுவியுள்ளார். ஆகவே அதிக அளவில் பிள்ளைகள் பெற்று அதிக அளவு பிள்ளைகள் மரணம் அடைவது நல்லதா அல்லது குறைந்த அளவு பிள்ளைகள் பெற்று போதிய கவனிப்புடன் நலமாக வாழ்வது நல்லதா என்று யோசித்துப் பாருங்கள்.





## ( 8 )

# குடும்பத் திட்டமும் இறை நம்பிக்கையும்

ஒரு விசுவாசி தனது அனைத்துக் காரியங்களும் இறைவனாலேயே நடைபெறுகின்றன என்று கட்டாயமாக விசுவாசம் கொள்ளல் வேண்டும். நான்காம் கலிமாவிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது. அணுவும் அவன் எண்ணப்படியே அசைகின்றது. ஒரு வாழ்க்கையை தீர்மானிப்பவன் அல்லாஹ். உயிரை வேண்டிய நேரத்தில் விரும்பிய வடிவத்தில் ஆக்குபவன் இறைவன் ஒருவனே. எல்லா உயிரினங்களுக்கும் உணவளிப்பவனும், பராமரிப்பவனும் அவனே. இதை ஒரு முஸ்லிம் உறுதியாக நம்பிக்கை கொள்ள வேண்டும். இப்படி நம்பிக்கை கொள்ளாவிட்டால் இறை மறுத்தவனாக (காபிராக) ஆகிவிடுவான். உயிர் உண்டாவதைத் தீர்மானிப்பவன் இறைவன் என்றால் ஒரு முஸ்லிம் குடும்பத் திட்ட முறைகளைப் பாவிக்கலாமா? உணவளிப்பவன் (ரஸ்ஸாக்) இறைவனே என்றால் வறுமைக்குப் பயப்படலாமா?

அல்குர்ஆன் 65வது அத்தியாயம் சூரா அத்தலாக் 3வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

இன்னும் மனிதன் எண்ணியிராத விதத்தில் அவனுக்கு (இறைவன்) வாழ்வாதாரங்களை அளிக்கிறான். எவர் இறைமீது நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு இறைவன் போதுமானவன். நிச்சயமாக இறைவன் தன் காரியத்தை அடைபவன். ஒவ்வொரு பொருளுக் கும் ஓர் அளவை திட்டமாக (இறைவன்) நிர்ணயம் செய்திருக்கிறான்.

(அல்குர்ஆன் *65:3*)

அல்குர்ஆன் 11வது அத்தியாயம் சூரத் ஹூத் 6வது வசனம் இப்படி வருகின்றது.

மேலும் பூமியில் உள்ள எந்த உயிரினதும் உணவு அல்லாஹ்விடம் இருந்தே தவிர வேறில்லை. அவை தங்கும் இடத்தையும் அவை அடையும் இடத்தையும் அவன் அறிந்தவன். யாவும் தெளிவான புத்தகத்தில் இருக்கின்றன.

(அல்குர்ஆன் *11:6*)

அல்குர்ஆனில் உள்ள இன்னும் ஒரு திருவசனத்தையும் கவனிப்போம். அல்குர்ஆன் 29வது அத்தியாயம் சூறா அன்கபூத் 60வது வசனத்தில் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

இன்னும் பிராணிகள்தான் எத்தனை? அவைகளுக்கும் உங்களுக்கும் அல்லாஹ்தான் உணவளிக்கிறான்.

(அல்குர்ஆன் *29:60*)

அல்குர்ஆன் 6வது அத்தியாயம் சூறா அன்ஆம் 14வது வசனம் இப்படி வருகின்றது.

...இறைவன் தான் (சகல படைப்பினங்களுக்கும்) உண வளிக்கிறான்...

(அல்குர்ஆன் *6:14*)





அல்குர்ஆன் 15வது அத்தியாயமான சூரா அல்-ஹிஜ்ர் 20வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

உங்களுக்கும் நீங்கள் எவருக்கு உணவளிக்கவில்லையோ அவர்களுக்கும் வாழத் தேவையானவற்றை நாமே ஆக்கியுள்ளோம்.

(அல்குர்ஆன் *15:20*)

இறைநம்பிக்கை பற்றி அல்குர்ஆன் 64வது அத்தியாயம் சூரா அத்தகாபுன் 13வது வசனம் இப்படிக் குறிப்பிடுகிறது.

இறைவனைத் தவிர வணக்கத்திற்கு உரியவர் யாரும் இல்லை. இறைவன் மீதே விசுவாசிகள் (தங்கள் காரியங்கள் அனைத்தையும் ஒப்படைத்து) முழுமையாக நம்பிக்கை வைக்க வேண்டும்.

(அல்குர்ஆன் *64:13*)

இந்த வசனங்கள் அனைத்தையும் பார்க்கும்போது உயிரினங்கள் அனைத்துக்கும் உணவளிப்பவன் அல்லாஹ். இப்படி இருக்கும்போது வறுமைக்குப் பயப்பட வேண்டுமா? இறைவனே நம்முடைய காரியங்கள் அனைத்திற்கும் பொறுப்பாக இருக்கும்போது வாழ்க்கை முயற்சிகள் அவசியமா?

உணவளிப்பவன் அல்லாஹ் என்பதற்காக வாழ்க்கையின் முயற்சிகளில் ஈடுபடாமல் சோம்பி இருக்கும்படி இஸ்லாம் ஒருபோதும் கூறவில்லை. ஒருவனுடைய சகல விதமான முயற்சிகளின் பின்னர் அவனுக்குக் கிடைப்பது அல்லாஹ் அவனுக்கு அமைத்ததுதான். இதுதான் இறைநம்பிக்கை ஆகும்.

## ஒட்டகத்தைக் கட்டுங்கள்

தவக்கல் (இறை நம்பிக்கை) பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அழகாக விளக்கியுள்ளார்கள். தவக்குலே அக்லீ பற்றி மிகச் சிறந்த உதாரணம் ஒன்று அவர்கள் காட்டினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழி ஒன்று இவ்வாறு வருகின்றது. "நீங்கள் இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள்; ஆனால் ஒட்டகத்தைக் கட்டிக்கொள்ளுங்கள்".[1] இந்த அருள்வாக்கு திர்மிதி, பைஹக்கி, தபரானி ஆகிய மூன்று கிரந்தங்களிலும் பதிவாகி உள்ளது. இந்த அருள் வசனத்தை நன்கு கவனியுங்கள். ஒட்டகத்தைக் கட்டி வைக்காமல் அல்லாஹ்தான் பாதுகாப்பான் என்ற நம்பிக்கையில் இருக்க முடியுமா? ஒரு விசுவாசியின் நம்பிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை எவ்வளவு துல்லியமாக விளக்கி இருக்கிறார்கள். ஆகவே எந்த விதமான முன்னேற்பாடுகளோ, முயற்சிகளோ இன்றி அல்லாஹ் கவனித்துக் கொள்வான் என்று இருப்பதற்கு இஸ்லாத்தில் இடம் இருக்கிறதா?

ஒரு வியாபாரி இறைவனால் அனுமதிக்கப்பட்ட முறையில் வியாபாரம் செய்ய வேண்டும். இலாபமோ நட்டமோ இறைவன் நாடியது என்று தவக்கல் கொள்ள வேண்டும். ஒரு மாணவன் நல்ல முறையில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து மிகவும் கடினமாக முயன்று, நல்ல முறையில் பரீட்சை எழுத வேண்டும். முடிவுக்கு இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். வியாபாரம் செய்யாமல் வீட்டில் இருந்து கொண்டே இலாபத்தை எதிர்பார்ப்பது எவ்வளவு அறிவீனம்? ஒன்றுமே படியாமல், அல்லாஹ் கருணையாளன், நினையாத விதத்தில் அருள்பவன் என்று எண்ணி விசேட சித்தியை எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள்தனம்?





இப்படித்தான் நம்மவர்கள் நினைத்த நேரமெல்லாம் மனைவியுடன் சேர்ந்த பின்னர், "நம்முடைய கையில் என்ன இருக்கிறது? எல்லாம் அல்லாஹ்வுடைய வேலை" என்று விதண்டாவாதம் பேசுகின்றனர். இத்தகைய மூட நம்பிக்கைகட்கு இஸ்லாத்தில் இடமே இல்லை.

இரண்டாம் கலீபா ஹசரத் உமர் (றழி) அவர்கள் இறைநம்பிக்கை (தவக்கல்) பற்றி இன்னும் ஓர் உதாரணத்தைக் காட்டி இருக்கிறார்கள். ஒரு நல்ல விவசாயி, விதைகளைப் பயிரிட்டு, நீரூட்டி, உரமிட்ட பின் அல்லாஹ் மீது நம்பிக்கை வைப்பான் என்றார்கள்.[2] ஒருவன் தனது கடமைகள் அனைத்தையும் நன்கு செய்துவிட்டே அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதை எவ்வளவு நன்றாக விளக்கியுள்ளார்கள். பயிரிடாமல், பசளை இடாமல் அல்லாஹ்தான் முளைக்கச் செய்பவன் என்று இருப்பதற்கு இஸ்லாத்தில் இடம் இருக்கிறதா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள் : "நீங்கள் அல்லாஹ்வின் மீது தவக்குல் (நம்பிக்கை) வைக்க வேண்டிய அளவுக்கு வையுங்கள். பறவைக்கு இறைவன் உணவளிப்பதைப் பாருங்கள். அது காலையில் வெறும் வயிற்றுடன் செல்கின்றது; மாலையில் வயிறு நிரம்பியதாகத் திரும்புகின்றது'.[3] இந்த ஹதீஸை நன்றாக அவதானியுங்கள். உணவு தேடி, வீட்டை விட்டு வெளிச் சென்று மாலை வரை உழைப்பவருக்குத்தான் இறைவன் உணவளிக்கிறான் என்பதை அண்ணல் நபியவர்கள் எவ்வாறு அழகாகச் சொல்லி இருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இன்னுமொரு அருள்வாக்கில் "வர்த்தகம் செய்யுங்கள்; பொருள் சம்பாதியுங்கள். ஒருவனுக்கு வறுமை வந்தால் அவன் முதலில் புசிப்பது அவனுடைய

மார்க்கத்தைத்தான். அதிக வறுமை இறைமறுப்புக்கு இட்டுச் செல்லும்"(4) என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே இறைவன்தான் உணவளிப்பவன் என்பதற்காக வீட்டுக்குள் சோம்பி இருக்க இஸ்லாத்தில் அனுமதி இல்லை. அனுமதிக்கப்பட்ட வழிகளில் பொருள் தேட வேண்டும். அதை விட்டு விட்டு நம்முடைய கையில் என்ன இருக்கின்றது? எல்லாம் அல்லாஹ்வுடைய நாட்டம். உணவு அளிக்கிறவன் அல்லாஹ். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானா? என்ற கேள்விகட்கெல்லாம் இஸ்லாத்தில் இடமில்லை.

இனி குடும்பத் திட்ட முறைகளைப் பாவிப்பது இறை நம்பிக்கைக்கு விரோதமானதா என்று பார்ப்போம். நோயைக் குணப்படுத்துபவன் அல்லாஹ். ஆனால், அதற்காக வைத்திய ஆலோசனை பெறாமல், மருந்து வகைகளைப் பாவிக்காமல் இருக்க முடியுமா? மரணத்தை விரும்புவதற்கு அனுமதி இல்லை. இறைவனே நோய்களைக் குணமாக்குபவன் என்ற நம்பிக்கையுடன் மருந்து செய்வது கடமையாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை மிகவும் வற்புறுத்தி இருக்கிறார்கள். தாங்கள் நோயுற்று இருந்தபோது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மருந்துகளை உட்கொண்டிருக்கிறார்கள். தாங்களே பல மருந்து வகைகளை நோயுற்ற தோழர்களுக்குச் சொல்லிக் கொடுத்தி ருக்கிறார்கள்.(5)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் மருத்துவ முறைகளை விளக்கும் அத்திப்பு வன்னபவி (Al Thibb vannabavi) என்ற மருத்துவ நூல் அக்காலத்திலும், இக்காலத்திலும் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

அவ்வாறே நோய்கள் வராமல் பாதுகாக்கும் தடுப்பு மருந்தூட்டும் (vaccines) இஸ்லாத்தில் அனுமதி உண்டு. காச நோய்,





போலியோ என்னும் இளம்பிள்ளை வாத நோய், ருபெல்லா போன்ற பல நோய்கள் வராமல் தடுக்கும் மருந்துகளைப் பாவிக்க இஸ்லாம் அனுமதித்திருக்கிறது. இதே அடிப்படையில் இடைவெளி விட்டுப் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்காக வைத்திய ஆலோசனையின்படி ஏதாவது முறைகளைப் பாவிப்பது 'ஷரீஅத்' அடிப்படையில் பிழையாக மாட்டாது.

எகிப்தின் பள்ளிவாசல்கள், த.்.வாப் பணிகளின் பணிப்பாளரான டாக்டர் அப்துல் றஹ்மான் அல் நாஜ்ஜார் அவர்கள் தம்முடைய "குடும்பத் திட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம்" என்ற நூலில் குடும்பத்திட்ட முறைகள் அல்லாஹ்தான் உணவளிக்கிறான் என்ற கொள்கைக்கு முரணனானவையல்ல என்று தெளிவுபடுத்தி யுள்ளார்கள்.(6)

( 9 )

# அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அனுமதி

அகிலத்தின் அருட்கொடையாம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அண்ணளவாக 1400 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தார்கள். அக்காலத்தில் மனித சமுதாயம் அறிந்திருந்த ஒரேயொரு குடும்பத்திட்ட முறை அல்-அஸ்ல் (Al Azl) என்பதாகும். அஸ்ல் என்ற சொல் அஸலா என்ற அறபிச் சொல்லில் இருந்து வந்தது. அஸலா என்பதற்கு வேறாக்கல் அல்லது பிரித்தல் என்பது பொருளாகும்.(1) இம்முறையில் ஆணும் பெண்ணும் உறவு கொள்ளும்போது, ஆணின் உச்ச நிலையில் ஆண் திரவம் பெண் இன உறுப்பினுள் விழாமல் ஆண்குறியை (penis) பெண் குறியில் இருந்து (vagina) வெளியே எடுத்தலாகும்(2) (coitus interruptus - withdrawal method). இம்முறை திருப்திகரமான முறையும் அல்ல, வெற்றிகரமான ஒன்றும் அல்ல. ஆணுடைய உணர்ச்சியின் உச்ச நிலையில் ஆண் உறுப்பை, பெண் உறுப்பில் இருந்து வெளியே எடுப்பதென்பது திருப்திகரமான முறை அல்ல, வெற்றிகரமான முறையில்லை என்று குறிப்பிட்டதன் காரணம் நூறு தம்பதியர் ஒரு வருடத்திற்கு இந்த முறையை கைக்கொண்டால், எட்டுப்பெண்கள் அளவில் கர்ப்பவதி





ஆகிவிடுவார்கள். இக்கால வாசகர்கட்கு இந்த முறை ஒரு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், அந்தக் கால மக்கள் அறிந்திருந்த ஒரேயொரு குடும்பத்திட்ட முறை இதுதான். ஆணுறைகள் (condom) 1564ஆம் ஆண்டில் இத்தாலியில் பலோப்பியோ அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன. கருத்தடைச் சத்திர சிகிச்சைகள் 1823 ஆம்ஆண்டில் ஜேம்ஸ் பிலண்டனால் ஆரம்பிக்கப்பட்டன. கருப்பையுள் இடப்படும் லூப் (IUCD) வகைகள் 1909 ஆம் ஆண்டு ரிச்சர் அவர்களால் அறிமுகப் படுத்தப்படடன. கருத்தடை மாத்திரைகள் ஜொர்ஸி, பின்கஸ் போன்றோரின் முயற்சியால் 1950 ஆம் ஆண்டுதான் வெளி வந்தன.(3)

ஆகவே 1400 ஆண்டுகட்கு முன் மனித சமுதாயம் அறிந்திருந்த ஒரேயொரு குடும்பத்திட்ட முறையான அல்-அஸ்ல் முறை பற்றி கண்மணி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருத்தென்ன என்று நோக்குவோம்.

**நபித்தோழர் ஹசரத் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நாங்கள் அஸ்ல் முறையைப் பின்பற்றுபவர்களாக இருந்தோம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்கு இது தெரிய வந்தபோதும் அவர்கள் இதைத் தடுக்கவில்லை.** இந்த ஹதீஸ் புனித சஹீஹுல் முஸ்லிம் கிரந்தத்தில் பதிவாகி உள்ளது.(4)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்கு தமது தோழர்கள் இந்த முறையை மேற்கொள்வதைத் தெரிந்திருந்தும் அவர்கள் தடுக்கவில்லை என்றால் அதன் பொருள் என்ன?

ஹசரத் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (றழி) அவர்களின் மேற்கோள் இப்படியும் பதிவாகியுள்ளது. **“நாயகத் தோழர்களான நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்த, அல்குர்ஆன் வசனங்கள் நேரடியாக இறங்கிக் கொண்டிருந்த**

காலத்தில் குடும்பத் திட்ட முறையைக் கைக் கொண் டிருந்தோம்". இந்த ஹதீஸ் புனித கிரந்தங்களான சஹீஹுல் புகாரி,[5] சஹீஹுல் முஸ்லிம்,[6] திர்மிதி,[7] இப்னு மாஜா,[8] ஹன்பலி இமாம் அவர்களது முஸ்னத்[9] ஆகிய கிரந்தங்களில் பதிவாகி உள்ளது. குடும்பத் திட்ட முறைகளை அல்லாஹ் பிழையாக எண் ணியிருந்தால், அதைத் தடுத்துக் குடும்பத் திட்ட முறைகளைக் கண்டிக்கும்படியான அல்குர்ஆன் வசனங்கள் இறங்கியிருக்க வேண்டுமே!

எகிப்தின் அல்–அஸ்ஹர் பீடத்தின் சிரேஷ்ட இமாமான ஷேக் ஜாதல் அலி ஜாதல் ஹக் அவர்கள் 1991 ஆம் ஆண்டில் 'ஷரீஆச் சட்டங்களும் பெண்ணோயியல் பிரச்சினைகளும்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். இதில் குர்ஆனின் எந்த வசனமும் கருவுறாமல் தடுப்பதையோ, பிள்ளைகளின் எண்ணிக்கையைக் குறைப்ப தையோ தடைசெய்யவில்லை என்று தெளிவாக விளக்கியுள்ளார்.[10]

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். அவர் "நாயகமே, எனக்குச் சட்டபூர்வமான அடிமைப் பெண் ஒருத்தி இருக்கிறாள். அவள் எனக்கு உதவியாளராகவும், பேரீச்சந் தோட்டத்திற்கு நீர் ஊற்றுபவராகவும் இருக்கிறாள். அவளுடன் நான் உறவு கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவள் கருத்தரிப்பதை நான் விரும்பவில்லை" என்று தெரிவித்தார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "நீர் விரும்பினால் அஸ்ல் குடும்பத் திட்ட முறையை மேற்கொள்ளும். ஆனால் அல்லாஹ் எதை நாடியிருக்கிறானோ, அதைத் தடுக்க முடியாது" என்று கூறினார் கள். சில காலத்தின் பின்னர் அந்த மனிதர் வந்து சொன்னார்: "நாயகம் (ஸல்) அவர்களே, அந்தப் பெண் கருத்தரித்து விட்டார்". அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேனே, அல்லாஹ் நாடியதை தடுக்க முடியாது" என்று. இந்த ஹதீஸ் புனித





கிரந்தங்களான சஹீஹுல் முஸ்லிம்,[11] இப்னு மாஜா,[12] மஸ்னத்[13] ஆகிய கிரந்தங்களில் பதிவாகி உள்ளது.

இந்த சம்பவத்தைக் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். கருத்தரிக்க விரும்பாத ஒரு மனிதருக்கு "நீர் விரும்பினால் குடும்பத் திட்ட முறையைப் பின்பற்றும்; ஆனால் அல்லாஹ் நாடினால் அவள் கருத்தரிப்பதை யாராலும் தடுக்க முடியாது" என்று தெரிவித்திருக்கிறார்கள். இதைப் பற்றி விளக்கமாக ஆராயும் ஷேக் முகம்மத் அல் மதனி அவர்கள் 'மன்பர் அல் இஸ்லாம்' என்ற சஞ்சிகையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே நேரடியாகக் குடும்பத் திட்ட முறையை அனுமதித்ததற்கு இது சிறந்த ஒரு சான்று என்று குறிப்பிட்டுள்ளார்கள்.[14]

அபூ சஃதில் குத்ரி (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : ஹுனைன் யுத்த வேளையில் குடும்பத் திட்ட முறையைப் பின்பற்ற நாயகத் தோழர்கள் விரும்பினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது நீங்கள் விரும்பியவாறு நடந்து கொள்ளுங்கள் (அஸ்னஊ மாபதாலக்கும்). ஆனால் அல்லாஹ் நாடியதைத் தடுக்க முடியாது" என்று தெரிவித்தார்கள். இந்த சம்பவம் இமாம் இப்னு ஹன்பலி (றழி) அவர்களால் குறிப்பிடப் பட்டுள்ளது.[15]

இந்த வசனங்களையும் கவனியுங்கள். குடும்பத் திட்ட முறையைப் பின்பற்ற விரும்பிய தோழர்கட்கு, "அவை தடுக்கப்பட்டுள்ளன; அவற்றைப் பின்பற்றாதீர்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்தார்களா அல்லது நீங்கள் விரும்பியவாறு நடந்து கொள்ளுங்கள் என்று அனுமதித்தார்களா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் அல்–அஸ்ல் குடும்பத் திட்ட முறையை மாத்திரந்தான் மனித சமுதாயம் அறிந்திருந்தது என்று ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தேன். இதை 'கியாஸ்' ஒழுங்கு படுத்திப் பார்த்தல் அடிப்படையில் பார்க்கும்போது தற்போதைய முறைகளான கருத்தடை மாத்திரைகள், ஊசி வகைகள், லூப் போன்றன இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்திற்குப் பொருந்தக் கூடியவையே என்று மார்க்க நிபுணர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.





( 10 )

# நாயகத் தோழர்களின் நடைமுறைகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குடும்பத் திட்ட முறையைப் பூரணமாக அனுமதிக்கவில்லை என்று வாதிடுபவர்களின் கருத்துக்களை ஆராய்வோம்.

பல நாயகத் தோழர்கள் குடும்பத் திட்ட முறைகளை ஆமோதித்து, அனுமதித்து இருந்தாலும் எல்லா நாயகத் தோழர்களும் இந்த முறையைப் பின்பற்றவில்லை. உதாரணமாக ஹசரத் அபூபக்கர் (றழி) அவர்கள், உமர் இப்னு கத்தாப் (றழி) அவர்கள் உத்மான் இப்னு அப்பான் (றழி) அவர்கள், இன்னும் பல முஹாஜிரீன்கள் குடும்பத் திட்ட முறைகளை விரும்பவில்லை.[1] இதற்காக குடும்பத் திட்ட முறைகட்கு இடமில்லை என்று சிலர் வாதிக்கிறார்கள். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இவர்கள் குடும்பத் திட்ட முறைகளை விரும்பவில்லையே தவிர, இந்த முறைகள் மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ளதாக ஒருபோதும் குறிப்பிடவில்லை. அதே நேரத்தில் ஹசரத் அலி இப்னு அபூதாலிப் (றழி) அவர்கள், ஸஃதிப்னு வக்காஸ் (றழி) அவர்கள், அபூஅய்யூப் அல் அன்சாரி (றழி) அவர்கள், ஸைத் இப்னு தாபித் (றழி) அவர்கள், ஜாபிர்

இப்னு அப்துல்லாஹ் (றழி) அவர்கள், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள், அபூசஃதுல் குத்ரீ (றழி) அவர்கள், அப்துல்லா இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள், இன்னும் அநேக அன்சாரீன்கள் குடும்பத் திட்டத்தை ஆதரித்தும் அனுமதித்தும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். இந்த விபரங்கள் இமாம் மாலிக் (றஹ்) அவர்களின் முவத்தஃ[2], பைஹக்கி (றஹ்) அவர்களின் அல் சுனன் அல் குப்றா[3], இப்ன் ஹஸ்ம் அவர்களின் அல் முஹல்லா[4], இப்னு அல் கையிம் அவர்களின் ஸத்துல் மத்[5], இப்னு அல் குதாமா அவர்களின் அல் முஃனீ[6] ஆகிய கிரந்தங்களில் பதிவாகி உள்ளன.

நான் முதலில் குறிப்பிட்ட நாயகத் தோழர்கள் குடும்பத் திட்ட முறைகளைத் தடுக்கவில்லை. பின்னர் குறிப்பிட்ட தோழர்கள் இம்முறைகளை ஆமோதித்தும், அனுமதித்தும் இருக்கிறார்கள். ஆகவே குடும்பத் திட்ட முறைகளுக்கு இஸ்லாத்தில் இடம் இருக்கிறதா என்று எண்ணிப் பாருங்கள்.

ஹசரத் அபூ சஈதுல் குத்ரி (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இறை தூதர் (ஸல்) அவர்களிடம் குடும்பத் திட்ட முறைகள் பற்றிக் கேட்கப்பட்டதும் அதற்கு அவர்கள் அளித்த பதில் "லா அலைக்கும் அல்லா தப்அலூ", – 'ஆனால் அல்லாஹ் நாடியதைத் தடுக்க முடியாது.' இந்த ஹதீஸ் ஆனது புனித ஹதீஸ் கிரந்தங்களான ஸஹீஹுல் முஸ்லிம்[7], சுனனு அபூதாவூத்[8] ஆகிய கிரந்தங்களில் பதிவாகி உள்ளது.

இந்த **லா அலைக்கும் அல்லா தப்அலூ** என்ற வசனத்திற்கு இரண்டு விதமாகப் பொருள் கொடுக்கலாம். அதை மேற்கொள்வது விரும்பத் தக்கதல்ல (There is no disfavour in doing it) என்று பொருள் கொள்ளலாம். அதைச் செய்ய வேண்டியதில்லை (You have not to do it) என்றும் பொருள் கொள்ளலாம். விரும்பத்தக்கதல்ல என்றும், மேற்கொள்ள வேண்டியதில்லை என்றும் வருவதால்





குடும்பத் திட்டத்திற்கு இஸ்லாத்தில் இடமே இல்லை என்று சிலர் வாதிக் கிறார்கள். ஆனால் சஹீஹுல் புகாரி கிரந்தத்தின் விளக்கவுரையான "பத்ஹுல் பாரி" என்ற நூலில் அதன் ஆசிரியர் இப்னு ஹஜர் (றஹ்) அவர்கள் இது கூடக் குடும்பத் திட்டத்தைத் தடைசெய்யவில்லை என்று விவரித்துள்ளார்.[9]

ஹசரத் உக்காசா (றழி) அவர்களின் சகோதரி ஜுதாமா பின்த் வஹபுல் அஸதிய்யா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் நான் இருந்தபோது அவர்களிடம் குடும்பத் திட்ட முறை பற்றிக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் இது அல் வத்உல் காபீ – மறைந்துள்ள உயிர்க்கொலை (hidden infanticide) என்று பதில் அளித்தார்கள். இந்த ஹதீஸ் அந் நஸாயி கிரந்தத்தில் பதிவாகி உள்ளது.[10]

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குடும்பத் திட்ட முறையை மறைந்துள்ள உயிர்க்கொலை என்று குறிப்பிட்டுள்ளதால், இது உயிர்க்கொலை என்று நினைத்து அதிகமானோர் குடும்பத் திட்ட முறைகளை எதிர்க்கிறார்கள். "மறைந்துள்ள உயிர்க்கொலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது குடும்பத்திட்ட முறைகள் விரும்பத் தகாதவை என்று குறிப்பிடுவதற்கான உயர்வு நவிற்சிக் குறிப்பே தவிர வேறல்ல. **அபூ யஃலா** என்ற கிரந்தத்தில் பின்வரும் சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அலி (றழி), உமர் (றழி), சஃது (றழி) போன்ற பிரபல்யமான நாயகத் தோழர்கள் கூடியிருந்த ஒரு சபையில் குடும்பத் திட்ட ம் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது அது தவறில்லை என்று அனைவரும் பதில் உரைத்தனர். இதுவும் குழந்தையை உயிருடன் குழி தோண்டிப் புதைப்பதைப் போன்றதா என்று ஒருவர் வினவினார். அதற்கு அலி (றழி) அவர்கள் குழந்தை உருவாவது பற்றிய அல்குர்ஆனின் 23வது அத்தியாயம் 12, 13, 14 ஆம் வசனங்களை ஓதிக் காட்டி, இரத்தக் கட்டி, சதைக்கட்டி ஆகிய மாற்றங்களின் பின்னர் அழித்தல்தான் உயிர்க்கொலையே தவிர, குடும்பத் திட்டம்

உயிர்க்கொலை அல்ல என்று விளக்கினார். உடனே உமர் (றழி) அவர்கள் அலி (றழி) அவர்கள் கூறியதை ஆமோதித்தார்கள்.[11]

ஹசரத் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தோழர்கள் "நாயகமே, நாங்கள் குடும்பத் திட்ட முறைகளைப் பின்பற்றுகிறோம். யூதர்கள் அதை சிறிய உயிர்க்கொலை (minor infanticide - Mow oodathu sahree) என்கிறார்களே உங்கள் கருத்தென்ன என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "யூதர்கள் பொய் சொல்கிறார்கள். அல்லாஹ் எதைப் படைக்க நாடுகின்றானோ அதைத் தடுக்க முடியாது" என்று விடை பகர்ந்தார்கள். இந்த ஹதீஸ் திர்மிதி கிரந்தத்தில் பதிவாகி உள்ளது.[12]

யூதர்கள் குடும்பத் திட்ட முறையை சிறிய உயிர்க்கொலையாக நினைத்ததற்குக் காரணம் இருக்கிறது. அவர்களது வேதப் புத்தகத்தில் விந்தை கருப்பையுள் விதைக்காமல் வீணாக்குவது பாவமான காரியமாகும். (spilling of seed sinful - Genesis 38, verse 9) ஓனான் (Onan) என்பவர் இதற்காகத் தண்டிக்கப்பட்டார்.[13] இதனால்தான் உடலுறவின்போது ஆண்குறியை வெளியே எடுக்கும் (coitus interruptus) முறையை ஒனனிசம் (oanism) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனாலேயே ஆறாவது பாப்பரசர் (Pope Paul VI in 'Human Vitae") மற்றும் இரண்டாம் பாப்பரசர் (Pope John Paul II in his 'Evangelium Vitae") ஆகியோர் குடும்பத் திட்டத்தைக் கண்டிப்பாக எதிர்த்தார்கள்.[14]

ஆனால் இஸ்லாத்தில் கருப்பையுள் தங்கியிருந்து நிலை மாறாத ஆணுடைய திரவத்திற்கு (seminal fluid) எந்த வித மதிப்போ, சக்தியோ இல்லை. தனியே அது உயிராக மாட்டாது. உண்மையில் அது ஒரு அற்பமான திரவமாகும். அல்குர்ஆன் சூறா அல் முர்சலாத் 77வது அத்தியாயம் 20வது வசனத்தில் மனிதனின் படைப்பைப் பற்றி





இறைவன் இப்படிக் கூறுகிறான்.

**அற்பமான ஒரு திரவத்தில் இருந்து உங்களை நாம் படைக்கவில்லையா?**

(அல்குர்ஆன் 77:20)

அல்குர்ஆனின் 86வது அத்தியாயம் சூறா அல் தாரிக் ஐந்தாம், ஆறாம் வசனங்கள் இப்படி அருளப்பட்டுள்ளன.

**ஆகவே மனிதன் எதனால் படைக்கப்பட்டான் என்பதை அவன் எண்ணிப் பார்ப்பானாக.**

(அல்குர்ஆன் 86:5)

**தெறிக்கும் திரவத்தினால் (ejaculate) அவன் படைக்கப் பட்டான்.**

(அல்குர்ஆன் 86:6)

ஆகவே ஆண் திரவம் பெறுமதி அற்ற பொருளே அன்றி வேறல்ல. கருப்பையுள் தங்கி நிலை மாறும்போதுதான் அதற்குப் பெறுமதியும் பரிமாணமும் வருகின்றது.

மனிதனின் உற்பத்தியைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாற்பதுகளில்விளக்கிக் காட்டினார்கள். "நீங்கள் உங்கள் தாயின் கருப்பையுள்ளே 40 நாட்கள் திரவ நிலையில் இருந்தீர்கள்; இரத்தக் கட்டியாக 40 நாட்கள் இருந்தீர்கள். சதைக்கட்டியாக 40 நாட்கள் இருந்தீர்கள். அதன் பின்னர் உயிரை ஊதுவதற்காக ஒரு மலக்கு அனுப்பப்பட்டார்." இந்த அருள்மொழி புனித கிரந்தங்களான சஹீஹுல் புகாரி, சஹீஹுல் முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் பதிவாகி உள்ளது.[15]

இந்த அருள் வாக்கின்படி ஆணுடைய திரவமும், பெண்ணுடைய முட்டையும் கலந்து எத்தனையோ நாட்களின் பின்னர்தான்

உயிர் (றூஹ்) ஊதப்படுகின்றது. ஆகவே உயிர் ஊதப்படுவதற்கு எத்தனையோ நாட்களுக்கு முன்னர் இடம்பெறும் குடும்பத் திட்ட முறைகள் உயிர்க்கொலை ஆக மாட்டா. அவை இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டவையே ஆகும்.

ஹசரத் ஜாபிர் (றழி), ஹசரத் அபூ ஹுறைரா (றழி), ஹசரத் அபூ ச.ீதல் குத்ரி (றழி) போன்ற மிகவும் பிரபலமான நாயகத் தோழர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்–அஸ்ல் குடும்பத் திட்ட முறையை அனுமதித்து இருப்பதாகத் தெரிவித்து இருக்கும் அதே வேளையில் ஜுதாமா பின்த் வஹப் அல் அஸதிய்யா (றழி) அவர்கள் அதை மறைந்துள்ள உயிர்க்கொலை (அல வத்அல் காபீ) என்று குறிப்பிட்டதாகத் தெரிவித்துள்ளார்கள். இவை முரண்படுகின்றனவா?

பல மார்க்க அறிஞர்கள் இது பற்றி மிக நீண்ட விளக்கம் அளித்துள்ளார்கள். ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலி (றழி) அவர்களின் கருத்துப்படி இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல. குடும்பத் திட்டம் சிறிய உயிர்க்கொலையா (Minor infanticide) என்று கேட்டதற்கு அது சிறிய உயிர்க்கொலை அல்ல (not minor infanticide) என்றும், இன்னுமொரு சந்தர்ப்பத்தில் மறைந்துள்ள உயிர்க்கொலை (hidden infaticide) என்றும் தெரிவித்துள்ளார்கள். மறைந்தள்ள உயிர்க்கொலை என்று குறிப்பிடப்பட்டது அது விரும்பத்தகாத ஒன்று (மக்றூஹ்) என்பதைக் காட்டுகிறதே தவிர சட்டபூர்வமாகத் தடுக்கவில்லை. ஆகவே இஸ்லாத்தில் குடும்பத் திட்ட முறைகள் தடுக்கப்படவில்லை என்று இமாம் கஸ்ஸாலி (றழி) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.[16]





## ( 11 )

# குடும்பத் திட்டம் அவசியமா?

குடும்பக் கட்டுப்பாட்டைப் பலர் மிகவும் வன்மையாக எதிர்க்கின்றனர். சமூக, அரசியல், பொருளாதார, ஒழுக்க, சமய ரீதியாக எந்த வகையில் நோக்கினாலும் குடும்பத் திட்டம் மனித சமுதாயத்திற்கு அறவே ஒத்து வராத ஒன்று என்று மிகவும் கருதுகின்றனர். அவர்களது சில கருத்துக்களை நோக்குவோம்.

மார்ஷல் பெற்றயின் (Marshall Petaine) என்பவர் 1940 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாடு யுத்தத்தில் தோல்வியுற்றதன் காரணம்போதிய ஆள் பலம் இன்மையே என்று குறிப்பிட்டுள்ளார்.[1] பேராசிரியர் கொலின் கிளார்க் (Professor Collin Clark) என்பவர் பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பிறப்பு விகிதத்தைக் குறைப்பது இவற்றை ஒரு வலுவிழந்த நாடாக்கி விடும் என்று குறிப்பிட்டுள்ளார்.[2] இங்கிலாந்தைச் சேர்ந்த சேர் ஜோர்ஜ் நியூமன் (Sir George Newmann) என்பவரும் இங்கிலாந்தில் பிறப்பு விகிதம் குறைவதைத் தடுக்காவிட்டால் இங்கிலாந்து ஒரு சக்தியற்ற நாடாகிவிடும் என்று எச்சரித்துள்ளார்.[3] 1944 ஆம் ஆண்டில்

இங்கிலாந்தில் உள்நாட்டு அமைச்சராக இருந்த ஹேபர்ட் மொரிசன் என்பவர் பிரித்தானிய நாடு செல்வாக்கு மிக்கதாக விளங்க வேண்டுமென்றால் அதன் சனத்தொகை இருபத்தி ஐந்து வீதத்தால் அதிகரிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.(4) இப்படியான பல மேற்கோள்களை ஆதாரங் காட்டி ஒரு நாடு பலம் பெற வேண்டுமானால் அதன் சனத்தொகை பெருக வேண்டுமென்று பலர் கருதுகின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக இந்த அறிஞர்கள் யாரும் இப்போது உயிருடன் இல்லை. அவர்கள் உயிரோடு இருந்தால் தங்களது கொள்கைகளை மாற்றி அறிக்கைகளை வெளியிட்டிருப்பார்கள். ஏனெனில் 1905 ஆம் ஆண்டில் இங்கிலாந்து வைத்தியர்கள் சங்கம் குடும்பத் திட்டத்தை மிகவும் வன்மையாக எதிர்த்தது. ஆனால் எட்டு ஆண்டுகளின் பின்னர் தனது கருத்தை மாற்றிக் கொண்டது.(5) இப்போது குடும்பத் திட்டம் அதிகமாகப் பின்பற்றப்படும் நாடுகளில் இங்கிலாந்தும் ஒன்றாகும்.

சனத்தொகை அதிகரிப்பால் ஒரு நாடு பாதிக்கப்பட மாட்டாது என்பது சிலரின் வாதமாகும். இங்கிலாந்தின் சனத்தொகை 1780 ஆம் ஆண்டில் எண்பது இலட்சமாகும். 1815 இல் ஒரு கோடியே எண்பத்தி ஐந்து இலட்சமாகும். 1911 ஆம் ஆண்டில் நான்கு கோடி ஐம்பத்தி இரண்டு இலட்சமாகும். இத்தனை சனத்தொகை அதிகரித்த பின்னரும் இங்கிலாந்தில் தனிநபர் வருமானமும் உற்பத்தியும் அதிகரித்தனவே தவிர குறையவில்லை. ஆகவே சனத்தொகைப் பெருக்கத்தால் ஒரு நாடு பாதிப்படையாது என்பதுஒரு வாதமாகும்.(6)

ஆனால் உண்மையில் இங்கிலாந்தில் இருந்து மிகப் பெருந்தொகையான மக்கள் வெளியேறி வட அமெரிக்காவில் குடியேறினார்கள். அது தவிர இக்கால கட்டத்தில் ஐரோப்பியத்





தொழிலதிபர்கள் இந்தியா, இலங்கை போன்ற வளமிக்க நாடுகளில் தோட்டங்களை நிறுவி அந்த வருமானங்களை அப்படியே அவர்களின் நாட்டுக்குக் கொண்டு சென்றார்கள். 1780 ஆம் ஆண்டின் பவுண் பெறுமதியும் 1911 ஆம் ஆண்டின் பவுண் பெறுமதியும் எவ்வளவோ வேறுபாடு உடையவை. வேலையில்லாதோரின் பிரச்சினை அங்கும் அதிகமாகிவிட்டது. எல்லோரும் நினைப்பது போல் இங்கிலாந்து ஒரு செல்வந்த நாடு அல்ல.

“மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் இரண்டு, மூன்று பிள்ளைகட்கு அதிகமாகத் தமக்குக் கிடைத்தால் அவர்களின் கல்விச் செலவு, பராமரிப்புச் செலவு என்பவற்றைக் கருதிக் குடும்பத் திட்ட முறைகளை மேற்கொள்கிறார்கள். அல்லாஹ்தான் உணவளிப்பவன்; அல்லாஹ்தான் பாதுகாப்பு அளித்துப் பராமரிப்பவன் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். இது மிகவும் பிழையானது என்று சிலர் வாதிடுகின்றனர். இன்றைய வாழ்க்கைச் செலவின் ஏற்றத்தில் மத்தியதர வகுப்பினர் படுகின்ற கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் ஏறிக் கொண்டு போகின்றது. ஆனால் அவர்களின் வருமானம் உயர்வதில்லை. பிள்ளைகளின் பாடசாலை அனுமதி என்பது நகரப் புறங்களில் சாதாரண விடயமல்ல. இலவசக் கல்வி என்றாலும் எத்தனையோ செலவுகள். பெயருக்குத்தான் இலவச வைத்திய சேவையே தவிர விலை கூடிய மருந்து வகைகள் எல்லாம் வெளியில் விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கின்றது. பிள்ளைகளின் மேலதிக வகுப்புச் செலவினங்கள், வேறு செலவினங்கள் என்று தங்கள் சுக துக்கங்களை மறந்து, ஓய்வு ஒழிவின்றி பிள்ளைகட்காகவே இவர்கள் உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் அதிக பிள்ளைகளைத் தவிர்த்துக் கொள்வது எப்படிப் பிழையாகும்? இந்த வகையில் கவனமாக இருப்பது அல்லாஹ்தான் பராமரிப்பவன் என்ற கொள்கைக்கு ஒருபோதும் முரண் ஆகாது.

பொருளாதாரக் காரணங்கட்காகக் குடும்பத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதை வாதிப்பவர்கள் இப்படி விளக்கியுள்ளார்கள். உலகப் பரப்பின் பத்து வீதமான நிலத்தில்தான் இப்போது பயிர்கள் செய்யப்படுகின்றன. மிகுதியுள்ள 90 வீதமான நிலப்பரப்பில் காடுகள், மேய்ச்சல் நிலங்கட்காக 10 வீதமான நிலத்தைக் கழித்தாலும் கிட்டத்தட்ட 70 வீதமான நிலம் பயிரிடப்படாமலேயே இருக்கின்றது. ஓர் ஏக்கருக்கான விளைச்சலை நவீன விஞ்ஞான முறைகளால் பல மடங்கு அதிகரிக்க முடியும். விவசாயிகளின் பிள்ளைகள் அவர்களின் பெற்றோருக்கு உதவ முடியும். ஆகவே அவர்கட்குத் தொழிலாளர்கள் தேட வேண்டிய அவசியம் இல்லை. முழுக் குடும்பமும் வயலில் வேலை செய்வதால் அவர்கள் நல்ல வருமானத்தைப் பெறுவார்கள். ஆகவே எதிர்காலத்தில் உற்பத்தி போதாது என்று நினைப்பதற்கோ அல்லது அதிக பிள்ளைகள் பெறுவதால் பொருளாதாரக் கஷ்டம் வரும் என்று நினைப்பதற்கோ இடமில்லை என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

ஆனால் உண்மையில் நடைமுறையில் இடம்பெறுவதென்ன? வேளாண்மை நிலங்களின் உற்பத்திச் செலவுகள் எக்கச்சக்கமாக அதிகரித்து விட்டன. விதை நெல்லின் விலையே அதிகரித்து விட்டது. முன்னைய காலங்களைப் போல் அல்லாது களைகளை அகற்றக் கிருமி நாசினிக்கும், பசளைகளுக்கும் பெருந்தொகைப் பணம் தேவைப்படுகின்றது. விவசாயத்திற்குப் பெரும் முதலீடு தேவைப்படுவதால் சாதாரண மக்களால் சொந்தமாக விவசா யத்தில் ஈடுபட முடியாது. அவர்கள் கடனுக்குக் கூடிய விலையில் இந்தப் பொருட்களைப் பெற்று அதன் பின்னர் நெல் கொள்வனவு செய்வோருக்கு மிகவும் குறைந்த விலையில் நெல்லை விற்றுக் கடைசியில் கையும் கணக்கும் சரியாகவே முடிகின்றன. ஓர் ஏக்கரில் நெற்செய்கை பண்ணுவதற்குப் பத்தாயிரம் ரூபாய் தேவைப் படுகின்றது. அநேக பயிரினங்களின் உற்பத்திச் செலவு சந்தையில்





அப்பயிரினம் விற்கப்படும் விலைக்குச் சமனாகவே இருக்கிறது. உதாரணமாக ஒரு கிலோ சின்ன வெண்காயத்தின் உற்பத்திச் செலவு பதினைந்து ரூபாய் ஆகும். சந்தையில் ஒரு கிலோ சின்ன வெண்காயத்தின் விலையும் பதினைந்து ரூபாய்தான். இந்த நிலையில் விவசாயிகள் தங்கள் பிள்ளைகளையும் விவசாயத்தில் ஈடுபடுத் துவார்களா? தங்கள் பிள்ளைகள எப்பாடு பட்டாவது படிக்க வைத்து வேறு ஏதாவது தொழில்கட்கு அனுப்பவே எல்லாச் சாதாரண விவசாயிகளும் முயற்சிக்கிறார்கள். இந்த நிலையில் அதிகமான பிள்ளைகளைப் பெற்று அவர்கட்குத் தேவையான அனைத்தையும் வழங்குவது ஒரு சாதாரண ஏழை விவசாயிக்கு எப்படிச் சாத்தியமாகும்?

குடும்பத் திட்டம் அவசியம் இல்லை என்று கூறுபவர்கள் உலகத்தின் நிலப்பரப்பையும், சனத்தொகையையும் கணக்கிட்டுக் காட்டுகிறார்கள். பூமியின் மொத்த மேற்பரப்பு 51 கோடி சதுர கிலோ மீற்றர் ஆகும். இதில் 15.3 கோடி சதுர கிலோ மீற்றர் நிலம் ஆகும். இரண்டாயிரம் ஆண்டின் உலக மக்கட் தொகை அறுநூறு கோடி ஆகும். இதன்படி பார்த்தால் ஒரு சதுர கிலோ மீற்றரில் 39 பேர்கள் தான் வாழ்கிறார்கள். இன்னும் எத்தனை கோடி மக்கள் பெருகினாலும் நிலத்தில் இடம் உண்டு என்று இவர்கள் வாதிக்கிறார்கள்.

இந்த நிலத்தில் மனிதர்கள் வாழத் தகுதியான நிலப்பரப்பு எவ்வளவு என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறி விடுகிறார்கள். எனது சொந்த இடமான காத்தான்குடியில் ஒரு சதுர கிலோ மீற்றர் பகுதியில் 30,000 மக்கள் வாழ்கின்றார்கள். கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்குச் செல்லும்போது எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வெறுமனே இருக்கக் காண்கிறோம். எல்லா நிலங்களிலும் மக்கள் குடியிருக்க முடியுமா?

மக்கள் தொகை அதிகரித்தால் உணவு உற்பத்தியும் அதிகரித்து விடும். ஆகவே சனப் பெருக்கம் அதிகரித்தாலும், உணவுப் பற்றாக்குறை இருக்க மாட்டாது என்பது சிலரின் கூற்றாகும்.[8] டட்லி ஸ்ரம்ப் (Dudley Stamp) என்பவரின் கூற்றுப்படி[9] 1900 ஆண்டில் மக்கட் தொகை 150 கோடியாக இருந்தபோது உணவு பற்றாக்குறையாக இருந்தது. 1980 ஆம் ஆண்டில் மக்கட் தொகை 500 கோடியாக அதிகரித்தபோது உணவு வகைகள் தாராளமாக இருந்தன. ஆகவே சனத்தொகை அதிகரிப்பால் உணவுக்குப் பஞ்சமில்லை என்று வாதிக்கின்றனர். ஆனால் இந்த உணவுப் பொருட்கள் எல்லா நாடுகளிலும், எல்லா மக்களுக்கும் சமமாகக் கிடைக்கின்றனவா? எத்தனை நாடுகளில், எத்தனை வீடுகளில் மக்கள் பசி, பட்டினியால் வாடுகின்றனர்?





## ( 12 )

# குடும்பத் திட்டமும் ஒழுக்கச் சீர்கேடும்

குடும்பத் திட்ட சாதனங்கள் இலகுவாகக் கிடைத்தால் பாலியல் குற்றங்கள் அதிகரித்து விடும் என்ற எணணத்தில் பலர் குடும்பத் திட்ட முறையை எதிர்க்கிறார்கள்.

இங்கிலாந்தில் 1938-43 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு 80,000 சட்டபூர்வமற்ற குழந்தைகள் பிறந்தன. பத்தில் ஒரு பெண் தகாத உறவு டையவராக இருந்தார். 1938ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டின்படி இருபது வயதிற்கும் குறைந்த வயதில் மணமுடித்தோரில் நாற்பது வீதமானோர் திருமணத்திற்கு முன்னரே கர்ப்பவதியாக இருந்தனர்.[1]

கின்ஸி (Kynsey) என்பவரது அறிக்கையின்படி அமெரிக்காவில் 47 வீதமான ஆண்களும், ஐம்பது வீதமான பெண்களும் குடும்பத்திற்கு வெளியே தொடர்பு உள்ளவர்களாக இருக்கின்றனர். ஐந்தில் ஒரு பிள்ளை சட்டபூர்வமற்ற பிள்ளையாக இருக்கின்றது. நான்கு வீதமான பிரசவங்கள் திருமணம் ஆகாத பெண்களில் இடம்பெறுகின்றன.[2] டைம்ஸ் பத்திரிகையின் அறிக்கையின்படி

1945 ஆம் ஆண்டில் சன்பிரான்ஸிஸ்கோவில் 16,400 பிறப்புகள் இடம்பெற்ற அதே வேளையில் 18,000 கருச்சிதைவுகள் இடம்பெற்றன. இது தவிர பாலியல் குற்றங்களும் அதிகரித்தே வந்திருக்கின்றன.(3) இங்கிலாந்தில் 1938ஆம் ஆண்டில் 283,000 பாலியல் குற்றங்கள் இடம்பெற்றன. 1955 ஆம் ஆண்டில் இது 438,000 ஆக கிட்டத்தட்ட இருமடங்கு அதிகரித்தது.(4) குடும்பத் திட்ட முறைகளால்தான் இவை நிகழ்கின்றன என்று பலர் நினைக்கின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக இந்த ஒழுக்கச் சீர்கேட்டிற்கு குடும்பத் திட்ட முறைகள் காரணம் அல்ல. மேலைநாட்டவரின் வாழ்க்கை முறையே அதற்குக் காரணமாகும். உண்மையில் குடும்பத் திட்ட முறைகளை அவர்கள் பாவித்திருந்தால் இத்தனை ஆயிரம் சட்டபூர்வமற்ற குழந்தைகள் உருவாகி இருக்க மாட்டா.

இங்கிலாந்தில் 1969 ஆம் ஆண்டில் பதினான்கு அல்லது அதற்குக் கீழ்ப்பட்ட வயதைச் சேர்ந்த 326 சிறுமிகளில் சட்டபூர்வமான கருச்சிதைவுகள் மேற்கொள்ளப்பட்டன. (இங்கிலாந்தில் சில நிபந்தனைகளுடன் கருச்சிதைவு சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.) இவற்றில் இரண்டு சிறுமிகளின் வயது 11 ஆகும்! 14 வயது சிறுமிகள் இரண்டு பேர் இரண்டாவது முறையும் கருச்சிதைவுக்கு வந்தவர்களாகும். இவர்கள் குடும்பத் திட்ட முறைகளைப் பாவிப்பவர்கள் அல்ல.(5)

ரொக்பெல்லர் ஆணைக்குழு அறிக்கை(Rockfeller commission report)யின்படி அமெரிக்காவில் 15 - 19 வயதிற்கு இடையிலான திருமணமாகாத பெண்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பாலியல் உறவை அனுபவித்துள்ளனர். ஆனால் இவர்களில் 75·· சதவிகிதமான பெண்கள் ஒருபோதும் குடும்பத்திட்ட முறைகளைப் பாவித்ததில்லை. அல்லது மிக மிகக்





குறைந்த அளவிலேயே பாவித்திருக்கின்றனர்.(6) ஆகவே குடும்பத் திட்ட முறைகளால்தான் பாலியல் சீர்கேடுகள் இடம்பெறுவதாகக் கூறுவது எப்படி நியாயமாகும்?

மேற்கத்திய நாடுகளில் இளம் பெண்கள், ஆண் நண்பர்களுடன் உடலுறவு கொள்வது ஒரு சாதாரண விடயமாகும். (permissive). இவ்வாறு அவர்கள் ஒரு கிழமைக்குப் பல தடவைகள் இணைந்து நாட்களைக் கழிக்கின்றனர். சில வேளைகளில் அவர்கள் இணைந்தே வாழ்கின்றனர். ஆனால் இது ஒரு தற்காலிக உறவே என்பது இருவருக்கும் தெரியும். அவர்களுக்குக் குடும்ப வாழ்வின் நினைப்போ, குழந்தை பெற வேண்டுமென்ற எண்ணமோ ஒருபோதும் இல்லை. பெரும்பாலான சோடிகள் சில காலத்தின் பின்னர் நண்பர்களாகவே பிரிகின்றனர்.(7)

ஒவ்வொரு வருடமும் இங்கிலாந்தில் 10,000 கல்லூரி மாணவிகள் கர்ப்பவதி ஆகின்றனர். 1983 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் 10500 கல்லூரி மாணவிகள் கர்ப்பவதி ஆகின்றனர். இவற்றில் 600 மாணவிகள் 14 வயதிற்குக் குறைந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் குடும்பத் திட்ட முறைகளைப் பாவிப்பதே இல்லை.(8)

கர்ப்பவதியான இந்தக் கல்லூரி மாணவிகளின் குடும்பப் பின்னணிகள் பரிதாபத்திற்குரியவை. இந்த மாணவிகளில் அதிகமானோருக்கு தாயோ, தந்தையோ மட்டுமே இருந்தனர். இலண்டனில் நடாத்தப்பட்ட ஓர் ஆய்வின்படி 16 வீதமானோருக்குத் தாய் இருக்கவில்லை. 65 வீதமானோருக்குத் தகப்பன் இருக்கவில்லை. 70 வீதமான இந்த மாணவிகள் தங்கள் சொந்தப் பெற்றோருடன் வாழவில்லை. வறுமையான சூழல், தொழில் வாய்ப்பின்மை, வீட்டு வசதியின்மை, விரக்தி போன்ற பல காரணிகள் இவர்கட்குப் பின்னணியில் இருந்தன. இந்த மாணவிகளிடம்

யாராவது அன்பு காட்டத் தொடங்கினால் அதற்கு இவர்கள் உடனே அடிமைப்பட்டு விடுகின்றனர். பெயர், விலாசமே தெரியாதோரின் தற்காலிக அன்பில், அணைப்பில் இவர்கள் தங்களையே இழந்து விடுகின்றனர்.

துரதிர்ஷ்டவசமான இந்த நிலை இலங்கையிலும் பரவி வருவதை அதிகமான வாசகர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். பால்ய வயதிலும், பள்ளி வய்திலும் தாயாகும் அநேகரை அடிக்கடி சந்திக்கிறேன். வெளிநாட்டில் வேலை பார்க்கும் தாய், பொறுப்பற்ற தந்தை, கவனிப்பாரற்ற குழந்தைகள், அன்புக்காக ஏங்கும் இந்த அப்பாவிச் சிறுமிகள் அநியாயமாகத் தங்களையே இழந்து விடுகிறார்கள்.

ஆகவே குடும்பத் திட்ட முறைகளால் ஒழுக்கச் சீர்கேடுகள் வந்து விடும் என்று கூறுவது முற்றிலும் தவறானதாகும். இந்தப் பெண்கள் தவறுவதற்கான காரணங்களைக் களைந்து, இஸ்லாமிய வாழ்க்கையில் நெறிப்படுத்துவதால் இந்தக் கவலைக்கிடமான நிலையை முற்றாக ஒழிக்க முடியும்.

இன்னும் ஒரு வகைப் பெண்கள் (promiscuous) வேறு சில காரணங்கட்காக ஆண்களுடன் உறவு கொள்கின்றனர். பெரும்பாலும் இவர்களது பெற்றோர் விவாகரத்துப் பெற்றவர்களாக இருப்பர். அல்லது இளவயதில் பெற்றோரை இழந்தவர்களாக இருப்பர். வறுமை, ஆதரவின்மை போன்றவற்றால் வாடும் இவர்கட்கு உடலுறவு ஓர் ஆறுதலையும் நிம்மதியையும் அளிப்பதாக இவர்கள் எண்ணுகின்றனர். தற்காலிய நண்பர்களின் தற்காலிக உறவினால் இவர்கள் தங்களையே அழித்துக் கொள்கின்றனர்.

துரதிர்ஷ்டமான இந்த நிலைக்கு அவர்களின் வாழ்க்கையின் போக்கே காரணமே தவிர, குடும்பத் திட்ட முறைகளால் அவர்கள் இந்த நிலைக்கு வந்துவிடவில்லை.





இத்தகைய பெண்கள் முறையாகக் குடும்பத் திட்ட முறைகள் எதையும் பாவிப்பதில்லை. கருவுற்றால் கருச்சிதைவுகளை மேற் கொள்கின்றனர்.

ஆகவே குடும்பத் திட்ட முறைகள் பழக்கத்திற்கு வந்தால் பாலியல் ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்து விடும் என்று கூறுவது ஒருபோதும் நியாயமாகாது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசில் குடும்பத் திட்ட முறைகள் மிகவும் தீவிரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. 1997 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி 72 சதவீதமான குடும்பங்கள் அங்கு குடும்பத் திட்ட முறைகளை மேற்கொள்கின்றன. ஆனால் அங்கு இப்படியான பாலியல் குற்றங்கள் நடைபெறுவதே இல்லை. தகாத உறவுகள் மிகவும் அரிது. இஸ்லாமிய நெறியில் வாழ்கின்ற ஒரு கட்டமைப்பில் குடும்பத் திட்ட முறைகள் ஒருபோதும் வெறுக்கத்தக்க விளைவு களை ஏற்படுத்த மாட்டா. ஆகவே குடும்பத் திட்ட முறைகளால் சமூக ஒழுங்குகள், ஒழுக்கங்கள் சீர்கெட்டு விடும் என்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

## ( 13 )

# குடும்பத் திட்ட முறைகளால் உடல் நலம் பாதிக்கப்படுமா?

கருத்தடை மாத்திரைகளில், ஊசி முறைகளில் பாதிப்பு இருப்பதாலும், கருத்தடை முறைகள் எதுவும் நூற்றுக்கு நூறு விகிதம் வெற்றி அளிக்காததாலும் இவை மனித சமுதாயத்திற்கே கேடு விளைவிப்பதும், பிரயோசனம் அற்றதுமாகும் என்று சிலர் வாதிக் கிறார் கள்.

முதலில் கருத்தடைச்சாதனங்களின் பாதிப்புகள் பற்றிக் கவனிப்போம். ஒரு பெண் கருத்தடைச் சாதனங்களைப் பாவிக்காமல் கர்ப்பவதியானால் இதனால் வரும் ஆபத்தையும் கருத்தடைச் சாதனங்களைப் பாவிப்பதனால் ஏற்படும்ஆபத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். பிரசவ காரணங்களால் வருடாந்தம் ஐந்து லட்சம் பெண்கள் அனாவசியமாக மரணமடைகிறார்கள். ஆனால் கருத்தடைச் சாதனங்களால் ஒரு பெண்கூட மரணம் அடைவதில்லை. எத்தனையோ கர்ப்பவதிகள் பிரசவ வேளையில் சாவின் எல்லைக்கே சென்று திரும்புகிறார்கள். பிள்ளை பிறந்த





பின்னரும் இலட்சக்கணக்கான பெண்கள் பிரசவத்துடன் சம்பந்தப்பட்ட அநேக நோய்களுக்கும், சங்கடங்களுக்கும் ஆளாகிறார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட கருத்தடை மாத்திரைகளில் ஓமோன்களின் விகிதம் அதிகமாக இருந்ததால் பல பாதிப்புகள் ஏற்பட்டன. ஆனால் காலப்போக்கில், தொடர்ந்த ஆராய்ச்சிகளின் விளைவாக இப்போது மிகவும் குறைந்த ஓமோன்கள் கொண்ட கருத்தடை மாத்திரைகள் தயாரிக்கப்படுகின்றன. இவை பாதிப்புகள் மிகவும் குறைவானவை.

கருத்தடைக்காகப் பாவிக்கப்படும் ஓமோன்களின் பாதிப்புகள் பற்றி ஆராய்வதற்காக சில பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பீகிள் நாய்களுக்கு (Beagle dogs) சாதாரண ஓமோன்களின் 20 மடங்கு ஓமோன் கொடுக்கப்பட்டபோது அவற்றின் மார்பகங்களில் கட்டிகள் தோன்றின.[1] இதை ஆதாரமாக வைத்து கருத்தடை ஓமோன்கள் மார்பகங்களில் கட்டிகளை ஏற்படுத்தும் என்று பிரசாரம் செய்யப்பட்டது. இந்தப்பரிசோதனையில் பல வழுக்கள் இருந்தன. பீகிள் நாய்களில் பொதுவாகவே மார்பகங்களில் கட்டிகள் ஏற்படும். அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட ஓமோன்களின் அளவு சாதாரண அளவை விட இருபது மடங்கு அதிகமாகும். இந்த நாய்களில் இந்த ஓமோன்கள் சீரணிக்கப்படும் விதமும், மனிதனில் சீரணிக்கப்படும் முறையும் முற்றிலும் வேறுபட்டதாகும். 1992 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்படி அதிக காலம் கருத்தடை மாத்திரை பாவிப்பவர்களில் மார்பகப் புற்று நோய் நிகழ் விற்கான சாத்தியம் இல்லை என்று நிறுவப்பட்டுள்ளது.[2] எனினும் சிலர் பொதுவாகவே மார்பகப் புற்று நோய் நிகழ்வதற்கு அதிக வாய்ப்புள்ளவர்கள். வைத்தியர்கள் இவை பற்றி நன்கு கவனத்திற்கு எடுத்த பின்னரே ஒருவருக்கு உரிய முறையைச் சிபார்சு செய்வார்கள்.

இன்னுமொரு பரிசோதனை ஒருவகைக் குரங்குகள் (Rhesus monkeys) மீது மேற்கொள்ளப்பட்டது. இவற்றிற்கு சாதாரணமாக வழங்கப்படும் கருத்தடை ஊசியின் ஐம்பது மடங்கு ஊசி ஏற்றப் பட்டது. 2716 குரங்குகட்கு சாதாரண அளவின் ஐம்பது மடங்கு மருந்து பத்து ஆண்டுகட்கு ஏற்றப்பட்டது. காலப்போக்கில் இவற் றின் கருப்பையில் அசாதாரணமான இழையங்கள் தோன்றின. இவற்றை வைத்துக் கொண்டு இந்த ஊசி (DMPA - Depot Provera) கர்ப்பப்பைப் புற்று நோயை விளைவிக்கக் கூடியது என்று பிரசாரம் செய்யப்பட்டது.[3] உண்மையில் இந்த ஊசி இப்போது மனித கர்ப்பப்பைப் புற்று நோய்க்கு சிகிச்சையாகப் பாவிக்கப்படுகின்றது. இவற்றால் கட்டிகள் வரும், புற்றுநோய்கள் வரும் என்பதில் எள்ளளவும் உண்மையில்லை. இவை அப்பாவி மக்களைத் திசைதிருப்பும் பொய்ப் பிரசாரமாகும்.

பாதிப்புகள் எதுவும் இல்லாத மருந்துகள் எதுவும் இல்லை. ஏன் அன்றாட உணவைக் கூட அதிகம் உண்டால் உடம்பில் பாதிப்பு ஏற்படும். அதிக நீர் உட்கொள்ளல் பலருக்குக் கூடாது. அதிக அளவு சீனி, உப்பு என்பவை கூடப் பலருக்கு ஒத்து வராது. சில மரக்கறி வகைகள் சிலருக்குப் பொருந்தாது. ஆகவே குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகளைப் பற்றி மாத்திரம் குறைவாகப் பேசுவது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் ஒன்றல்ல. பல விதமான குடும்பத் திட்ட முறைகள் இருக்கின்றன. ஒவ்வொருவரினதும் உடம்பிற்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்ற விதத்தில் பொருத்தமான குடும்பத் திட்ட முறை ஒன்றை வைத்தியர்கள் சிபார்சு செய்வார்கள். அதன்படி செயற்பட்டால் அவற்றின் பாதிப்பு மிகவும் குறைவாக இருக்கும்.

கருத்தடை மாத்திரைகள் (combined oral contraceptive pills) மிகவும் பாதுகாப்பானவை எனக் கருதப்படுகின்றன. 1986 ஆம்





ஆண்டின் கணக்கெடுப்பின்படி இங்கிலாந்தில் முப்பது இலட்சம் பெண்களும் உலகில் ஆறு கோடிப் பெண்களும் கருத்தடை மாத்திரைகளைப் பாவிக்கின்றனர்.[4]

கருத்தடை மாத்திரைகளால் இருதய நோய்கள் வரலாம் என்று வாதிடுகின்றனர். ஆரம்ப காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட மாத்திரைகளில் ஓமோன்களின் (Hormones : Progesterone & Oestrogen) அளவு அதிகமாக இருந்தது. ஆனால் இப்போதுள்ள மாத்திரைகளில் ஓமோன்களின் அளவு மிகவும் குறைவாகும். முப்பத்தி ஐந்து வயதிற்கு அதிகமான, கொழுத்த, அதிகம் புகைக்கும் பழக்கமுடைய பெண்களிலேயே பாதிப்புகள் அதிகமாகும். ஆனால் சாதாரண பருமனான, புகைக்கும் பழக்கம் இல்லாத, இரத்த அழுத்தம் இல்லாத பெண்களில் குடும்பத் திட்ட மாத்திரைகள் பாதுகாப்பானவை ஆகும்.[5]

குடும்பத் திட்ட மாத்திரைகளால் புற்று நோய்கள் வரும் என்று பிரசாரம் செய்யப்பட்டது. ஆனால் பல ஆராய்ச்சிகளின்படி குடும்பத்திட்ட மாத்திரைகளால் கருப்பைப் புற்று நோயும் (Endometrial carcinoma), சூலகப் புற்று நோயும் (Ovarian cancer) குறைவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒரு ஆராய்ச்சியின்படி ஒரு வருடத்துக்குக் குடும்பத் திட்ட மாத்திரைகள் பாவித்தால் இந்த இரண்டு புற்று நோய்கள் உண்டாகும் விகிதம் அரைவாசியாகக் குறைக்கப்படுகின்றது.ஒரு வருடம் பாவித்து நிறுத்தினாலும், பத்து வருடங்கட்கு இந்தப் புற்று நோய்கள் வருவது குறைக்கப்படு கின்றது.[6]

அடுத்ததாக எந்தக் கருத்தடை முறையும் நூற்றுக்கு நூறு விகிதம் வெற்றி அளிக்காததால் இவற்றைப் பாவிப்பதில் அர்த் தமில்லை என்று குறிப்பிடுகின்றார்கள். குடும்பத் திட்ட முறைகள் மனிதனின் உடற் தொழிலுக்குக் கேடு விளைவிக்காத விதத்தில்,

சாதாரண வாழ்க்கையைப் பாதிக்காத விதத்தில், ஆபத்துக்கள் இல்லாத முறையில் அமைய வேண்டும். மனிதனின் உடல் நலனைக் கருத்திற் கொள்ளும்போது நூற்றுக்கு நூறு விகிதம் வெற்றி அளிக்கக் கூடிய முறை ஒன்றைத் தயாரிக்க முடியாது. நன்றாகக் கருத்தரிக்கக் கூடிய நூறு தம்பதியர் ஒரு வருடத்திற்கு எந்த முறையையும் பாவிக்காமல் இருந்தால் வருட முடிவில் எண்பது மனைவியர் தாயாகி விடுவார்கள். கருத்தடை மாத்திரைகளைப் பாவித்தால் நூறு பேரில் வருட முடிவில் இரண்டு பேர் கர்ப்பவதியாகி விடுவாகள். கருப்பையுள் இடப்படும் லூப் (Loop - IUCD) பாவித்தால் நூறு பேரில் வருட முடிவில் இரண்டு பெண்கள் தாயாகி விடுவார்கள். ஆணுறைகள் பாவித்தால் வருட முடிவில் கிட்டத்தட்ட பத்துப் பெண்கள் கர்ப்பமாகி விடுவார்கள்.[7] ஆகவே ஒரு முறையையும் பாவிக்காமல் வருட முடிவில் 80 பெண்கள் கர்ப்பமாவது நல்லதா அல்லது கருத்தடைச் சாதனங்களைப் பாவித்து 80 பேரில் இருந்து இரண்டு ஆகக் குறைப்பது நல்லதா என்பதை வாசகர்கட்கு விடுகின்றேன்.

நூற்றுக்கு நூறு விகிதம் வெற்றியளிக்கக்கூடிய கருத்தடை முறை சாத்தியம் இல்லை. இந்த முறைகளை அனுசரித்த பின்னர் அவர்கட்குக் கிடைக்கும் குழந்தைகள் அல்லாஹ் அவர்கட்கு நிர்ணயித்தவைகளேயாகும்.





( 14 )

# முஸ்லிம் விரோத சக்திகளின் சதித்திட்டமா?

குடும்பத் திட்டத்திற்கு இஸ்லாத்தில் இடமே இல்லை என்று அதிக மானோர் நினைப்பதற்குக் காரணம் குடும்பத் திட்ட முறைகள் மேற்கத்தைய நாடுகளால் (Western Countries) அறிமுகப்படுத்தப் பட்டமையேயாகும். துரதிர்ஷ்டவசமாக மேற்கத்தையர்களின் எல்லா முயற்சிகளும் இஸ்லாத்திற்கு எதிராகவே இருக்கின்றன. இஸ் லாத்தைப் பலவீனப்படுத்துவதற்காக நாசூக்காகவும், நேரடியாகவும் அவர்கள் சூழ்ச்சிகளை மேற்கொண்டே வருகின்றனர். ஆகவே குடும்பத் திட்ட முறைகளும் இஸ்லாமியர்களைக் குறைப்பதற்கான ஒரு முயற்சி என்று பலர் நினைப்பது இயல்பானதேயாகும்.

இதே காரணத்தால்தான் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் சிற்பி மர்ஹூம் ஆயத்துல்லா கொமெய்னி ஆரம்பத்தில் குடும்பத் திட்ட முறைகளை வன்மையாக எதிர்த்தார். ஈரான் உலகத்தில் பதினா றாவது பெரிய நாடாகும். ஈரானில் இஸ்லாமியப் புரட்சி 1979 பெப்ரவரி மாதம் இடம்பெற்றது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாந் திகதி ஈரான் இஸ்லாமியக் குடியரசாகப் பிரகடனம் செய்யப்

பட்டது. 1970/80 காலகட்டங்களில் ஈரானில் குடும்பத் திட்ட முறைகள் அதிகமாக வழக்கில் இருக்கவில்லை. பெண்கள் மிகச் சிறிய வயதில் மணமுடித்து, அடிக்கடி பிள்ளைகள் உண்டாகி, அளவுக்கு அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டே சென்றனர். 1980-88 காலப்பகுதியில் ஈரான்-ஈராக் யுத்தம் நடந்துகொண்டிருந்ததால் உயிரிழப்புகள் அதிகமாக இருந்தன.

1988 ஆம்ஆண்டில் யுத்தம் முடிவுக்கு வந்தது. இந்த நிலையில் அளவற்ற சனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் 2002 ஆம் ஆண்டில் மக்கட்தொகை இருமடங்காக ஆகிவிடும் என்று ஆயத்துல்லா கொமெய்னி பயந்தார். 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ந் திகதி சனத்தொகை பற்றி ஆராய்வதற்காக ஈரானில் ஒரு உயர்மட்ட மாநாடு கூட்டப்பட்டது. அதன் பின்னர் ஈரானிய அரசாங்கம், குடும்பத் திட்ட நடவடிக்கைகட்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தைத் (UNFPA) தமக்கு உதவுமாறு அழைத்தது.[1] குடும்பத் திட்டம் அரசாங்கத் திட்டமானது. அரசாங்கத்தின் ஆதரவுடன் குடும்பத் திட்ட நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டமொன்று வகுக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டு மே மாதம் ஈரானிய பாராளுமன்றத்தில் குடும்பத் திட்டத்திற்கான சட்டம் (Family planning and population control bill) ஒன்று முடிவாக்கப்பட்டது. இதன்படி ஒரு குடும்பத்தின் நான்காவது பிள்ளைக்கு மானியங்கள், சலுகைகள் எல்லாம் இரத்தாக்கப்பட்டன.[2] இதனால் மூன்று பிள்ளைகட்கு மேல் பெறுவதை யாரும் விரும்பவில்லை. எல்லாக் குடும்பத் திட்ட சாதனங்களும், சத்திர சிகிச்சைகளும் மக்கட்கு இலவசமாகவே வழங்கப்பட்டன. சனத்தொகை ஒழுங்காக்கல் சபை (Fertility Regulation council) உருவாக்கப்பட்டது. இப்போது சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை (Population growthrate) 2.3 இல் இருந்து 1.5





ஆகக் குறைப்பதற்காகவும் ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டிய பிள்ளைகள் தொகையை (Total fertility rate) 3.6 இல் இருந்து 2.5 ஆகக் குறைப்பதற்காகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இஸ்லாமிய நாடு ஒன்றின் அரசாங்கமே குடும்பத் திட்ட முயற்சிகளில் ஈடுபட்டு வருவதற்கு ஈரான் ஓர் உதாரணமாகும். ஈரானில் குடும்பத் திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், குடும்பத் திட்ட நடவடிக்கைகள் அங்கு அபார வெற்றி அளித்திருப்பதாகவும், அதற்கு அரசாங்கத்தின் பூரண பங்களிப்பும் மதத் தலைவர்களின் ஒத்துழைப்பும், அறிஞர்களின் வழிகாட்டலுமே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.[3] ஈரானில் 1986 ஆம் ஆண்டு இருபது வீதமான மக்கள் மட்டுமே குடும்பத் திட்ட முறைகளை மேற்கொண்டார்கள். ஆனால் 1997 ஆம் ஆண்டில் 56 வீதமான மக்கள் குடும்பத் திட்ட முறைகளை மேற்கொள்கிறார்கள். 1986 ஆம் ஆண்டில் பெண்களின் சராசரி திருமண வயது 19.9 ஆக இருந்தது. அது 1997 ஆம் ஆண்டில் 22.4 ஆக உயர்ந்தது. 1986 ஆம் ஆண்டுக்கும் 1997 ஆம் ஆண்டுக்கும் இடையே பால்ய வயது திருமணம் இருபத்தி ஐந்து வீதத்தால் குறைந்து விட்டது.[4]

குடும்பத் திட்ட முறைகளால் உலகில் இஸ்லாமியர்கள் குறைந்து விடுவார்கள் என்று பயப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. 1980 - 1985 ஆம் ஆண்டுகளின் மதிப்பீடுகளின்படி ஐரோப்பிய நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பு விகிதம் வருடம் ஒன்றுக்கு 0.3 வீதமாகும். அதாவது ஐரோப்பிய நாடுகளின் சனத்தொகை இரண்டு மடங்கு ஆவதற்கு 230 ஆண்டுகள் செல்லும். மூன்றாம் மண்டல நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பு வீதம் வருடம் ஒன்றுக்கு 2 வீதம் ஆகும். இங்கு சனத்தொகை இரண்டு மடங்கு ஆவதற்கு முப்பத்தி ஐந்து ஆண்டுகள் செல்லும். அரபு நாடுகளிலும், முஸ்லிம் உலகிலும் சனத்தொகை அதிகரிப்பு வீதம் வருடத்திற்கு 3 ஆகும். அதாவது சனத்தொகை இரு மடங்கு

ஆவதற்கு 23 ஆண்டுகளே போதுமாகும். அதாவது ஐரோப்பிய நாடுகளின் சனத்தொகை 230 ஆண்டுகளில் அதிகரிக்கும் அளவை முஸ்லிம் நாடுகள் 23 ஆண்டுகளில் அடைந்துவிடும்.[5]

இவ்வாறு சனத்தொகை அதிகரிப்பை வளர்முக நாடுகளோ, முஸ்லிம் நாடுகளோ தாங்க முடியுமா என்று எண்ணிப் பாருங்கள். முஸ்லிம் நாடுகள் என்றதும் பலருக்கு எண்ணெய் வளங்கொழிக்கும் செல்வந்த நாடுகள்தான் ஞாபகத்திற்கு வரும். ஆனால் இந்தத் தொகையினர் மிகவும் குறைவாகும். உதாரணமாக இலங்கையில் முஸ்லிம்கள் என்றால் பணக்காரர்கள் என்றுதான் மற்ற சமூகத்தவர்கள் நினைக்கிறார்கள். முஸ்லிம்களில் பணக்காரர்கள் மிகச் சிலரே. ஐந்து லட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் அன்றாட வாழ்க்கைக்கே திண்டாடும் பரிதாபகரமான அவல நிலையில் வாழ்கிறார்கள். இனக் கலவரங்களால் அதிகமாகப் பாதிக் கப்பட்டவர்கள் முஸ்லிம்களே. சொந்த மண்ணில் இருந்தும், எல் லைக் கிராமங்களில் இருந்தும் துரத்தப்பட்டு அதிக அளவில் அகதிகளாக இருப்பவர்கள் முஸ்லிம்களே. உலக முஸ் லிம்கள் நிலையும் இப்படித்தான். மிகச் சில முஸ்லிம் நாடுகளே ஓரளவு வசதியாக இருக்கின்றன. பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் பொருளாதாரப் பிரச்சினைகளால் தடுமாறிக் கொண்டு இருக்கின்றன. வேலையில்லாப் பிரச்சினை, வீடு, மற்றும் வசதிகள் பற்றிய பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் தடுமாறும்போது சனத்தொகை கட்டுமீறிப் பெருகிச்சென்றால் எப்படி முகம் கொடுக்க முடியும்?

1995 ஆம் ஆண்டிற்கான சில நாடுகளில் கர்ப்பிணித் தாய் மாரின் மரண விகிதத்தையும் சிசுக்களின் மரண விகிதத்தையும் இங்கே தருகிறேன்.[6]





| நாடு | தாயின் இறப்பு விகிதம் (ஒரு இலட்சம் பிரசவத்திற்கு) | சிசுவின் இறப்பு (ஆயிரம் பிரசவத்திற்கு) |
|---|---|---|
| எகிப்து | 84/100,000 | 45/1000 |
| சவூதி அரேபியா | 110 | 55 |
| ஈரான் | 80 | 30 |
| ஈராக் | 166 | 80 |
| இஸ்ரவேல் | 05 | 10 |
| இங்கிலாந்து | 02 | 10 |
| பங்களாதேஷ் | 600 | 85 |
| பாகிஸ்தான் | 500 | 70 |
| இந்தியா | 460 | 80 |
| இலங்கை | 40 | 30 |

இந்த அட்டவணையைப் பாருங்கள். அரபு நாடுகளில் ஒரு இலட்சம் கர்ப்பிணித் தாய்மாரில் 100 பேர் மரணம் அடைகிறார்கள். ஆனால் இஸ்ரவேலில் ஒரு இலட்சம் பிரசவங்களில் ஐந்து பெண்கள் மாத்திரமே மரணம் அடைகிறார்கள். அரபு நாடுகளில் ஆயிரம் பிரசவங்களில் ஐம்பது குழந்தைகட்கு மேல் மரணம் அடைகின்றன. இஸ்ரவேலிலே ஒரு சதவீதமான குழந்தைகள் தான் தவறிப் போய்விடுகின்றன. செல்வங் கொழிக்கும் சொகுசு நாடுகளாக நாம் நினைத்துக் கொண்டிருக்கும் அரபு நாடுகளின் சுகாதார வைத்திய வசதிகளை எண்ணிப் பாருங்கள். இலங்கையில் ஒரு இலட்சம் பிரசவங்களில் 40 தாய்மாரே காலமாகும்போது நமது அண்டைய முஸ்லிம் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் என்பவற்றில்

500-600 இளந் தாய்மார்கள் பிரசவ காரணங்களால் மரணம் அடைகிறார்கள். கட்டுப்பாடற்ற விதத்தில் பிள்ளைகளைப் பிறக்கச்செய்து ஒவ்வொரு முறையும் ஒரு பெண்ணை மரண பயத்திற்குகூடாக எடுத்துச் செல்ல வேண்டுமா? இஸ்லாமிய சகோதரிகளை சக்தியற்ற, பிள்ளை பெறும் பொம்மைகளாய் (from slave reproductive doll to) நடாத்துவதைத் தவிர்த்து சக்தி மிகுந்த குடும்பத்தை உருவாக்கும் தாயாக (brave productive role) ஏன் மாற்ற முடியாது?

குடும்பத் திட்ட முறைகள் முஸ்லிம் விரோத சக்திகளின் சதி முயற்சிகளாக இருக்குமோ என்று பல முஸ்லிம் நாடுகள் சந்தேகப்பட்டன. ஒரு காலத்தில் குடும்பத் திட்ட முறைகளுக்கு முஸ்லிம் நாடுகளில் சிறிதேனும் இடம் இருக்கவில்லை. ஆனால் காலப்போக்கில் குடும்பத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து கொண்ட பல முஸ்லிம் நாடுகள் குடும்பத் திட்ட முறையை ஊக்குவித்துள்ளன. அரசாங்க ஆதரவுடன் இந்த முஸ்லிம் நாடுகளில் குடும்பத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாகிஸ்தானில் 1951 ஆம் ஆண்டில் நான்கு கோடி மக்கள் வாழ்ந்தனர். அப்போது ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பில் 42 மக்கள் வாழ்ந்தனர். 1991 இல் சனத்தொகை 12 கோடியாகி விட்டது. ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பில் 145 மக்கள் வாழ வேண்டியதாகி விட்டது. சனத்தொகையின் 45 வீதமானோர் 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள். இது சனத்தொகை எவ்வளவு வேகமாகப் பரவுகின்றது என்பதைக் காட்டுகின்றது.

இதனால் பாகிஸ்தானில் குடும்பத் திட்ட வேலைகளை அரசாங்கமே முன்னெடுத்துச் செல்லத் துணிந்தது.[7] முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1955-60 ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமான 1960-





1965 காலப்பகுதியில் சுகாதார அமைச்சின் கீழ் குடும்பத் திட்ட வேலைகள் கொண்டுவரப்பட்டன. சுகாதாரத் திணைக்களத்தின் வைத்தியசாலைகள் மூலமாக குடும்பத் திட்ட ஆலோசனைகளும் சாதனங்களும் வழங்கப்பட்டன. மூன்றாவது காலப் பகுதியான 1965-1970 இல் குடும்பத் திட்ட வேலைகள் மிகவும் தீவிரமாகின்றன. அரசாங்கம் 17 கோடி ரூபாய்களைக் குடும்பத் திட்ட வேலைகட்காகச் செலவிட்டது. 1970-75 வேலைத்திட்டம் பாகிஸ்தான் - பங்களாதேஷ் யுத்தம் காரணமாகப் பின்னடைவானது. ஆனால் 1978-83 ஆண்டுக்கால ஐந்தாண்டுத் திட்டம் சாதனை படைத்தது! பின்னர் ஆறாவது ஐந்தாண்டு காலமான 1983-1988 காலப்பகுதியில் 230 கோடி ரூபாவை அரசாங்கம் குடும்பத் திட்ட வேலைகட்காகச் செலவழித்தது. இக்கால கட்டத்தில் ஒரு இலட்சம் பேர் கருத்தடைச் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டனர். இரண்டரை இலட்சம் பெண்கள் லூப் வகைகளை (IUCD) எடுத்துக் கொண்டனர். இருபது இலட்சம் பெண்கள் கருத்தடை மாத்திரைகளை உட்கொண்டனர். இது இஸ்லாமிய நாடு ஒன்றில் இஸ்லாமியர்கள் மேற்கொண்ட குடும்பத் திட்ட முறைகள் ஆகும். 1988-1993 காலப்பகுதியில் 40 இலட்சம் பேரைக் குடும்பத் திட்ட முறைகளில் ஈடுபடுத்த அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டது.[8]

குடும்பத் திட்ட முறைகள் மிகவும் தீவிரமாக மேற்கொள் ளப்படுகின்ற இன்னும் ஒரு முஸ்லிம் நாடு எகிப்து ஆகும். எகிப்து அரபுக் குடியரசு கூட ஆரம்பத்தில் குடும்பத் திட்ட முயற்சிகளில் அக்கறை காட்டவில்லை. ஆனால் சனத்தொகை கட்டுக்கடங்காமல் பெருகியபோதுதான் அரசாங்கம் விழித்துக் கொண்டது. எகிப்தில் கிட்டத்தட்ட ஏழு கோடி மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 95 வீதமானோர் முஸ்லிம்கள்.

கமால் அப்துல் நாசர் ஜனாதிபதியாக இருந்தபோது சனத்தொகை அதிகரிப்பின் தாக்கத்தை உணர்ந்தார். 1965 ஆம்

ஆண்டில் குடும்பத் திட்ட நடவடிக்கைக்காக உயர் சபை ஒன்றை நியமித்தார். 1967 இல் எகிப்தின் பிரபல மார்க்க அறிஞர்கள் குடும்பத் திட்டத்தை ஆதரித்துக் குரல் கொடுத்தனர். மார்க்க ஆதாரங் களைச் சமர்ப்பித்தனர். குடும்பத் திட்ட நடவடிக்கைகள் அரசாங்க ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டன.[9]

மலேஷியாவில் இலங்கையின் சனத்தொகை அளவிலான மக்கள் வாழ்கிறார்கள். இஸ்லாம் அங்கு அரசாங்க மதமாகும். சிங்கப்பூரின் பிரதம காதியான துவான் ஹாஜி அலி பின் முஹம்மத் சையித் ஸாலிஹ் அவர்கள் 'தாயின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக குடும்பத் திட்ட முறைகளை மேற்கொள்வதில் தவறில்லை' என்று மார்க்கத் தீர்ப்பு வழங்கிய பின்னர் அதிகமான மலேஷிய மக்கள் குடும்பத் திட்ட முறைகளை மேற்கொள்ள லாயினர்.[10] முப்தி ஸையித் யூசுப் பின் அலி ஸவவி அவர்களும் 'தாயி னதும் பிள்ளைகளினதும் ஆரோக்கியக் காரணங்கட்காகக் குடும்பத் திட்ட முறைகளை மேற்கொள்வதை இஸ்லாம் தடுக்கவில்லை' என்ற நீண்ட மார்க்கத் தீர்ப்பை அளித்தார்கள்.[11]

பல சர்வதேச குடும்பத் திட்ட மகாநாடுகள் மலேஷியாவில் நடாத்தப்பட்டுள்ளன. குடும்பத் திட்ட விடயம் சம்பந்தமான தென் கிழக்காசிய அமைச்சர்கள் மட்ட மகாநாடு மலேஷியாவிலும் மற்றும் சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் முஸ்லிம்களிடையே குடும்பத் திட்ட நடவடிக்கைகள் பரவ வழிகோலியது.





( 15 )

# குடும்பத் திட்டமும் கருச்சிதைவும்

## (Family planning and abortion)

குடும்பத் திட்டம் (Family Planning) என்பது ஆண் திரவமும், பெண் முட்டையும் கலந்து நுகம் (Zygote) உண்டாவதைத் தடுப்பதாகும். ஆனால் கருச்சிதைவு (Abortion) என்பது உண்டான உயிரை அழித்தலாகும். இஸ்லாத்தில் குடும்பத் திட்டத்திற்கு இடமுண்டே தவிரக் கருச்சிதைவுக்கு இடமில்லை. வேண்டியபடி இடைவெளி விட்டு விரும்பிய அளவில் குழந்தை பெறுவதற்கு இஸ் லாம் அனுமதிக்கிறது; உயிரை அழிப்பதை இஸ்லாம் முற்றாகத் தடுத் திருக்கிறது. அருள்மறையாம் அல்குர்ஆனில் வருகின்ற "....தரித் திரத்திற்காக உங்கள் மக்களைக் கொலை செய்யாதீர்கள் "(அல் குர்ஆன் 6:151) மற்றும் "வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைக ளைக் கொலை செய்யாதீர்கள்" (அல்குர்ஆன் 17:31) ." நிச்சயமாக அவர்களைக் கொலை செய்வது மிகப் பெரும் பாவமாக இருக்கின் றது" ஆகிய திருமறையின் வசனங்கள் கருச்சிதைவையே குறிப்பிடு கின்றன.

கருச்சிதைவு (Abortion) இலங்கையில் சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இப்படிச் சட்டபூர்வமாகத் தடைசெய்யப் பட்டுள்ளதால் நிபுணத்துவ வைத்தியர்களோ, கௌரவமான வைத்தி யர்களோ பொதுவாகக் கருச்சிதைவு செய்வதில்லை. இருந்தும் நாளொன்றுக்கு இலங்கையில் 750 கருச்சிதைவுகள் இடம் பெறுகின்றன.[1] துரதிர்ஷ்டவசமாகக் கணிசமான அளவு முஸ்லிம் சகோதரிகளும் கருச்சிதைவு செய்து கொள்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் இதே சகோதரிகளிடம் குடும்பத் திட்ட முறைகள் பற்றி ஆலோசனை வழங்கப்பட்டபோது அவை பாவமான முறைகள் என்று மறுத்தவர்கள் குழந்தை உண்டானபின் இஸ் லாத்தின் விதிகளுக்கும், இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கும் முற்றிலும் விரோதமான முறையில் கருச்சிதைவுகளை மேற் கொள்கிறார்கள்.

பெரும்பாலான கருச்சிதைவுகள் தகுதியற்ற போலி வைத் தியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பெண்ணினதும் கருப்பையின் அளவு (size), நிலைமை (position) இருக்கை (version) வித்தியாசமானவையாகும். இவற்றையறியாத போலி டாக்டர்கள் கருப்பையின் உள்ளே கூரான ஆயுதங்களைச் செலுத்தி அநேக ஊறுகளையும் காயங்களையும் விளைவித்து விடுகிறார்கள். குடல், சிறுநீர்ப்பை போன்ற முக்கிய உறுப்புகளைத் துளைத்துக் காயம் அடைந்த பலரை நாங்கள் அடிக்கடி சந்திக்கிறோம். அதிகக் குருதிப் பெருக்கால் உயிர் இழந்தோரும் உண்டு. இந்தக் கருச்சிதைவுகள் களவாக முடுக்குகளில் செய்யப்படுவதால் போதிய சுத்திகரிப்பு (sterility) இல்லாத நிலைகளில் துப்புரவற்ற கருவிகளால் செய்யப்படு கின்றன. இதனால் நோய்க் கிருமிகள் உட்புகுந்து இரத்தம் நஞ்சே றியதால் (septicaemia) இறந்தவர்கள் அநேகம்.

இந்தப் புள்ளி விபரங்கள் உங்கட்கு ஆச்சரியமாக இருக் கலாம். உலகில் வருடாந்தம் இருபது கோடி குழந்தைகள் உருவாகின்றன.





இவற்றில எட்டுக் கோடி குழந்தைகள் விருப்பமில்லாமல் உண்டான வையாகும்.[2] பெரும்பாலான பெற்றோர் நமக்கென்ன பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவும் ஒன்று என்று அந்தக் கர்ப்பத்தைக் காப்பாற்றிக் குழந்தையாகப் பெறுகிறார்கள். பலர் அக் குழந்தையை அழிப்பதற்காக கருச்சிதைவு செய்கிறார்கள். உலகில் வருட மொன்றுக்கு ஐந்து கோடி கருச்சிதைவுகள் இடம்பெறுகின்றன. வருடாந்தம் 80,000 இளம் பெண்கள் கருச்சிதைவால் மரணம் அடைகிறார்கள். நாளாந்தம் 200 வாழ வேண்டிய இளம்பெண்கள் கருச்சிதைவு காரணமாக அநியாயமாகக் "கொல்லப்படுகிறார் கள்."[3]

இலங்கையில் சட்ட விரோதமான முறைகளில் கருச்சிதைவு முறைகளை மேற்கொண்டு வந்த முறையான தகைமைகள் இல்லாத டாக்டர் ஒருவர் அநேக பெண்களுக்கு அநேக காயங்களையும் அபாயங்களையும் தன்னை அறியாமல் ஏற்படுத்தி வந்தார். கடைசியில் தன்னுடைய மனைவிக்குக் கருச்சிதைவு செய்த போது அவர் அநியாயமாக உயிர் இழந்தார். பிரேத பரிசோதனையின்போது தவறான முறைகளில் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதால் குடல் ஊறுபட்டு அழுகி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.[4] 1996 ஆம் ஆண்டின் கணிப்பின்படி இலங்கையில் கர்ப்பிணித் தாய்மாரின் மரணங்களில் 5.8·· சத வீதமானவை கருச்சிதைவுகளாலேயே இடம்பெறுகின்றன.[5]

கருச்சிதைவு உயிர்க்கொலைக்கு ஒப்பானது. மாதவிடாய் தாமதமாகி பிள்ளை உண்டானது உறுதியானதும் நம்முடைய சகோதரிகள் கருவைக் கலைப்பதற்காகப் போலி டாக்டரிடம் செல்கின்றனர். அவர்களும் மாத்திரை வகைகளைக் கொடுக் கின்றனர். அல்லது ஊசிகளைப் போடுகின்றனர். இவற்றால் உண்டான கருவைக் கலைக்க முடியாது. கருவைக் கலைக்கக் கூடிய மருந்து வகைகள் இலங்கையில் இல்லை. இந்த மாத்திரை,

ஊசி வகைகளால் குழந்தைக்கு அங்கவீனங்கள் ஏற்பட்டு விடுமோ என்று பயந்து அதற்காகவே கருச் சிதைவுக்குச் செல்கின்றனர். அடுப்புச் சட்டியில் இருந்து நெருப்பில் வீழ்வது போல் இது பிரச் சினையை, வியாதிகளை இன்னும் அதிகமாக்குகின்றது. கருச் சிதைவு ஒழுங்காகச் செய்யப்பட்டாலும் அதன் உடல், உள பாதிப்புகளில் இருந்து விடுபட எவ்வளவோ காலம் எடுக்கின்றது. வயிறு கழுவுதல் (womb wash) என்று இலேசாகச்சொல்வது போல் கருச்சிதைவு ஒரு சாதாரண விடயம் அல்ல.

இங்கிலாந்தில் 1971 ஆம் ஆண்டில் 12 வயதுச் சிறுமி ஒருத்தியின் கருச்சிதைவைச் செய்ய மறுத்த ஒரு மகப்பேற்று மாதர் நோய் வைத்திய நிபுணரைப் பத்திரிகைகள் காரசாரமாக விமர்சித்தன.[6] ஆனால் ஒரு கிழமையின் பின்னர் மற்றும் ஒரு 12 வயதுச் சிறுமி சட்டபூர்வமான கருச்சிதைவின் விளைவுகளால் மரணம் ஆன போது எல்லாப் பத்திரிகைகளும் மௌனம் ஆகிவிட்டன. இங்கிலாந்து போன்ற மிக உயர்ந்த மருத்துவ வசதிகள் உள்ள நாட்டில் கருச்சிதைவினால் மரணம் ஏற்படக் கூடுமாயின் கருச்சிதைவின் விளைவுகள் எவ்வளவு பாரதூரமானவை என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் குடும்பத் திட்டத்தையும், கருச்சிதைவையும் மிகச் சிறந்த உதாரணம் ஒன்றின் மூலம் விளக்கியுள்ளார்கள். இஸ்லாமிய ஷரீஅத் சட்டப்படி ஓர் ஒப்பந்தம் செல்லுபடியாக வேண்டுமென்றால் அங்கு கொடுப்பவரும் (ஈஜாப்) அதை ஏற்பவரும் (கபூல்) இருக்க வேண்டும். தருவதாகச் சொல்லி மற்றவர் ஏற்பதற்கு முன்னர் கொடுக்காவிட்டால் ஒப்பந்தத்தை முறித்ததாகக் கொள்ள முடியாது. குடும்பத் திட்ட முறைகளில் ஆணுடைய திரவம் பெண்ணுடைய முட்டையை அடைவதற்கு முன்னரே எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே குடும்பத் திட்ட முறைகள் பிழையாக மாட்டாது. ஆனால்





கருச்சிதைவின்போது ஒரு பொருளை ஒருவருக்குக் கொடுத்து, அவர் அதனை ஏற்றுக் கொண்ட பின் பறித்து எடுத்துக் கொள்ளுதல் அல்லது அழித்தல் போன்றாகும். ஆகவே குடும்பத் திட்ட முறைகள் ஏற்கப்பட்டவை என்றும், கருச்சிதைவுகள் இஸ்லாத்திற்கு விரோதமானவை என்றும் மிகவும் மதி நுட்பமாக விளக்கியுள்ளார்.[7]

குடும்பத் திட்ட முறையாகக் கருச்சிதைவைச் செய்து கொள்ள இஸ்லாத்தில் ஒருபோதும் அனுமதி இல்லை. ஆனால் மருத்துவக் காரணங்கட்காக அதாவது அந்தக் கர்ப்பத்தால் தாயின் உயிருக்குத் திட்டவட்டமாக ஆபத்து ஏற்படும் என்றிருந்தால் அதற்காகக் கருச்சிதைவு செய்து கொள்ள முடியும். உதாரணமாக அதிக இரத்த அமுக்கம் (severe preeclampsia) ஏற்பட்டு, பிரசவம் தொடரப்பட்டால் தாய் மரணம் அடையக்கூடிய ஆபத்து இருந்தால் அதற்காகக் கருச்சிதைவு மேற்கொள்ளப்படலாம். அதற்கு இந் நாட்டுச் சட்டத்திலும் இடமுண்டு. இஸ்லாமும் அனுமதித்து இருக்கிறது.

இஸ்லாமிய அறிஞரான கலாநிதி யூசுப் அல் கர்ளாவி[8] அவர்கள் ஷெய்க் ஷோல்ட்டட் (Sheik Shaltut) அவர்களின் மார்க்கத் தீர்ப்பின் அடிப்படையில் பின்வருமாறு விளக்குகிறார்.

"தாய்க்கு ஒரு வாழ்க்கையும் கடமைகளும், பொறுப்புகளும் உண்டு. குடும்பத்தின் அச்சாணி தாய் ஆகும். எப்போதோ பிறக்கப் போகின்ற ஒரு குழந்தைக்காக ஒரு தாய் தன்னுடைய உயிரை இழக்க முடியாது."

காதி காஸ்மி முஜாஹிதுல் இஸ்லாம் அவர்கள் கூட, கர்ப்பத்தைத் தொடர்வது தாயின் உயிருக்கு ஆபத்து என்ற நிலையில் எத்தனை மாதங்களாக இருந்தாலும், அந்தக் கர்ப்பத்தை முடிவுக்குக் கொண்டு வர இஸ்லாத்தில் அனுமதி உண்டு என்று குறிப்பிட்டுள்ளார்.[9]

கர்ப்பம் தொடர்ந்தால் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று ஒரு வைத்தியர் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே கருச்சிதைவு செய்து கொள்ள அனுமதி உண்டே தவிர, பெற்றோரின் விருப்பத்திற்காக கருச்சிதைவு செய்து கொள்ள இஸ்லாத்தில் அனுமதி இல்லை.

சட்ட மேதைகளான இமாம்கள் கருச்சிதைவை மிகவும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். இமாம் மாலிக் (றஹ்) அவர்களின் கருத்துப்படி ஆண் திரவமானது பெண்ணுடைய கருப்பையில் தரித்ததும், அதைக் கருச்சிதைவு செய்ய எந்தக் காரணம் கொண்டும் அனுமதி இல்லை. இது ஹஷிய்யா அல் தசூக்கி என்ற கிரந்தத்தில் விளக்கப்பட்டுள்ளது.(10)

இமாம் ஹன்பலி (றஹ்) அவர்களும் கருச்சிதைவை முற்றாக வெறுத்துள்ளார்கள். ஒரு பெண்ணின் வயிற்றில் அடித்துக் கருச்சிதைவை உண்டுபண்ணுபவன் அதற்குரிய குற்றப் பரிகாரங் காணல் அவசியமாகும் என்று இப்னு குதாமா அவர்கள் முஃனி என்ற கிரந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.(11) குற்றப் பரிகாரங் கொடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இது பாவம் என்று தெளிவாகின்றது.

இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள், கருச்சிதைவு ஏற்கனவே உண்டான உயிரை அழிப்பதால் இதை ஓர் உயிர்க்கொலை என்று வர்ணித்துள்ளார்கள்.(12)

இமாம் ஹனபி (றஹ்) அவர்களின் மத்ஹபைச் சேர்ந்த இப்னு ஆப்தீன் அவர்கள் பால் குடிக்கிற குழந்தைக்கு உயிராபத்து ஏற்படும் என்றிருந்தால் நான்கு மாதங்களுக்குள் கருச்சிதைவு செய்யலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.(13)





ஹசரத் அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : இரண்டு பெண்கள் சண்டையிட்டுக் கொண்டார்கள். ஒரு பெண் மற்றப் பெண்ணின் மீது கல்லால் எறிந்த போது கருவுற்றிருந்த அப்பெண் கருச்சிதைவுக்கு உள்ளானாள். இதையறிந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் பெண் ஓர் அடிமையை உரிமை விட்டுக் குற்றப் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும் என்றார்கள்.(14) ஆகவே கருச்சிதைவுக்கு இஸ்லாத்தில் இடம் உண்டா?

இஸ்லாம் வியாபாரத்தை அனுமதித்திருக்கிறது; வட்டியைத் தடைசெய்திருக்கிறது; திருமணத்தை அனுமதித்து இருக்கின்றது; விபசாரத்தைத் தடைசெய்திருக்கின்றது. அதுபோலவே குடும்பத் திட்டத்தை அனுமதித்திருக்கிறது. கருச்சிதைவைப் பூரணமாகத் தடைசெய்திருக்கின்றது.

# ( 16 )

# நிரந்தர கருத்தடைச் சத்திர சிகிச்சைகள்

விரும்பியபடி இடைவெளி விட்டுப் பிள்ளைகள் பெறுவதற்காகத் தற்காலிக குடும்பத் திட்ட முறைகள் (Temporary family planning methods) இருக்கின்றன. அதுபோல், இனிமேல் பிள்ளைகளே வேண்டாம் என்று நினைப்பவர்கட்கு நிரந்தர கருத்தடைச் சத்திர சிகிச்சை முறைகள் இருக்கின்றன.

ஆண்களுக்கான கருத்தடைச் சத்திர சிகிச்சையை வாசெக்டமி (Vasectomy) என்று அழைக்கப்படும். விதையில் இருந்து விந்தானது (Spermatozoa) ஒரு கான் ஊடாக (Vas deference) ஆண் குறியை (Penis) அடைகின்றது. இந்த சத்திர சிகிச்சையின்போது இந்தக் கானில் தையல் போடப்பட்டு கான் ஊடாக விந்து செல்வது தடுக்கப்படுகின்றது.[1] இந்த முறையால் ஆணின் வீரியமோ, உணர்ச்சியோ, வெளிப்படும் திரவமோ குறைவதில்லை. இது மிகவும் பாதுகாப்பான, மிகச் சிறிய சத்திர சிகிச்சையாகும். சத்திர சிகிச்சை செய்த உடனேயே ஒருவர் வீட்டிற்குச் சென்று விட முடியும். இரண்டு மூன்று நாட்களில் சாதாரண வேலைகள் செய்யலாம். ஒன்றிரண்டு வாரங்களில் எல்லா விதமான வேலைகளையும் செய்ய முடியும். இந்த





முறையானது (Vasectomy) மலடாக்கல் (Castration) இல் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

மலடாக்கலின்போது ஆணின் விதைகள் இரண்டும் அகற்றப் படுகின்றன. மலடாக்கலின் பின்னர் ஆணின் வீரியம் குறை கின்றது; உணர்ச்சியும் ஆண் தன்மையும் குறைகின்றன. ஆண்க ளுக்கே உரிய ஓமோன்களின் அளவு குறைகின்றது. மலடாக்கலின் பின்னர் ஒருபோதும் அவரால் பிள்ளை பெற முடியாது.

மலடாக்கல் இஸ்லாத்தில் கண்டிப்பாகத் தடைசெய்யப் பட்டுள்ளது.

அல்குர்ஆன் சூரத்துன் நிஸா 4வது அத்தியாயம் 118வது, 119வது வசனங்களில் இவ்வாறு அருளப்பட்டுள்ளது.

**(தீயவழி நடத்தும் ஷைத்தானை) அல்லாஹ் சபித்தான். அப்போது அவன் "உன் அடியார்களில் ஒரு பகுதியை நிச்சயமாக நான் வழிகெடுப்பேன்" என்று கூறினான்.**

(*4:118*)

**இன்னும் நிச்சயமாக நான் அவர்களை வழிகெடுப்பேன். அவர்கட்கு வீணான ஆசைகளை உண்டாக்குவேன். அவர்கட்கு நான் கட்டளை இடுவேன். அப்போது அல்லாஹ்வின் சிருஷ்டிக(ளின் கோலங்க)ளை அவர்கள் மாற்றி விடுவார்கள் (என்று கூறினான்)...**

(*4:119*)

அல்லாஹ்வின் சிருஷ்டிகளின் கோலங்களை மாற்றுவது என்பது மலடாக்கலையே குறிப்பிடுகின்றது. இவற்றைச் செய்பவர்கள் வழிகேட்டில் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானவர்கள் இவர்கள். மேல் நாட்டின் சில

இடங்களில் ஆண், பெண் உறுப்பு மாற்றுச் சத்திர சிகிச்சைகளை விரும்புவது ஒரு நாகரிகம் என்று சிலர் கருதுகிறார்கள். ஆண்களின் விதைகளை அகற்றி பெண்கள் போல் நீண்ட முடி வளர்த்து, பெண்கள் போல் உடையணிய சிலர் விரும்புகின்றனர். அதேபோன்று சில பெண்கள் தங்கள் மார்பகங்களையும், சூலகங்களையும் (Ovaries) அகற்றி, ஆண்களுக்குரிய ஓமோன் களை ஊசி மூலம் உடலிற் செலுத்தி ஆண்களாக வாழ விரும்புகின்றனர். இத்தகைய பால் மாற்ற உணர்வு உள்ளவர்களை Transexualism என்று அழைப்பர். இது ஒருவகை உள நோயாகும். இவர்கட்கு அறிவுரை கூறி, நடைமுறையை விளக்குவது இலேசான காரியம் அல்ல. இத்தகைய முறையைத்தான் இந்த வசனத்தில் அல்குர்ஆன் கண்டித்து இருக்கின்றது.

பெண்களுக்கான கருத்தடைச் சத்திர சிகிச்சை என்பது கருப்பையுடன் இணைந்துள்ள பலோப்பின் குழாய்களை (Fallopian tubes) தடைசெய்து விடுவதாகும்.(2) இதனால் விந்து இதனூடாகச் செல்வது தடுக்கப்படுகின்றது. இந்த முறையின் பின்னர் பெண்ணின் பால் உணர்வோ, பெண் தன்மையோ ஒரு சிறிதும் மாற்றம் அடைவதில்லை. பெண்களுக்குரிய ஓமோன்களின் அளவிலும் எந்த மாற்றங்கள் ஏற்படுவதும் இல்லை. இதுவும் பெண்ணை மலடாக்கல் முறையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

ஆண்களுக்கான வாசெக்டமி கருத்தடைச் சத்திர சிகிச்சை முறையும், பெண்களுக்கான கருத்தடைச் சத்திர சிகிச்சை முறையும் கிட்டத்தட்ட நிரந்தரமான முறைகளாகவே கொள்ளப் படல் வேண்டும்.(3) ஏனெனில் இவற்றைச் சத்திர சிகிச்சை முறை களால் பழையபடி திருத்தி அமைத்தாலும் குழந்தை உண்டாவதற் கான சாத்தியம் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியளிக்காது.(4) ஆண் களின் கருத்தடைச் சத்திர சிகிச்சையின் பின்னர் எதிர் அணுக்கள் (Sperm antibodies) உண்டாகி விடுகின்றன. ஆகவே குழாய்களை





மீண்டும் ஒருங்கு சேர்த்தாலும் அதன் பின்னர் குழந்தைகள் உண்டாகும் சாத்தியம் குறைவு. எனினும் இந்த வாசெக்டமி சத்திர சிகிச்சையை திருத்தி அமைத்த (Reversal) பின்னர் பலர் குழந்தை உண்டாகி இருக்கின்றனர். பெண்களுக்கான கருத்தடைச் சத்திர சிகிச்சையின் (Tubal ligation) பின்னர் அதை மீளத் திருத்தி அமைத்தாலும் அந்தக் குழாய்களின் செயற்பாடு (Ciliary motility) முன்னர்போல் இருக்க மாட்டாது. ஆனால் இந்தக் குழாய்களை மீளத் திருத்தி அமைத்து பலர் குழந்தைகள் உண்டாகி இருக்கின்றனர். மீளத் திருத்தி அமைக்கும் சத்திர சிகிச்சைகள் 60-70 சதவீத வெற்றியைத் தருவதாக பல நிலையங்கள் குறிப்பிடுகின்றன. அது தவிர ஆணின் விந்தும் பெண்ணின் விந்தும் அவர்களில் இருப்பதால் அவற்றை வெளியே எடுத்துப் பிள்ளைகளை உண்டாக்கவும் (IVF techniques) முடியும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் வழக்கத்தில் இருந்த அல்-அஸ்ல் குடும்பத் திட்ட முறையை இக்கால வழக்கில் உள்ள குடும்பத் திட்ட முறைகளுடன் கியாஸ் - ஒழுங்குபடுத்தல் முறையில் - ஒப்பிட்டுப் பார்த்தால் அவை தற்காலிக முறைகட்கு மட்டுமே பொருந்தும். பெரும்பாலான சட்டமேதைகள், மார்க்க அறிஞர்கள் தற்காலிக குடும்பத் திட்ட முறைகட்கே இவை பொருந்தும் என்று தீர்ப்பு அளித்துள்ளார்கள். அப்படியானால் நிரந்தர கருத்தடைச் சத்தி சிகிச்சைகட்கு இஸ்லாத்தில் இடம் உண்டா?

குடும்பத் திட்ட சத்திர சிகிச்சைகட்கு மிகவும் எதிராக இருந்த கெய்ரோ பல்கலைக்கழக ஷரீஆ பேராசிரியர் டாக்டர் மத்கூர் அவர்கள் கூட 1971 இல் இடம்பெற்ற ரபாத் மாநாட்டில் (Dr. Madkour - Rabat Conference Morocco - 1971) இந்த சத்திர சிகிச்சைக்கு எதிராக அல்குர்ஆனில் ஒரு வசனங்கூட இல்லை என்பதை ஒத்துக் கொண்டுள்ளார். அண்ணல் நபி (ஸல்) அவர்களின்

அருள்வாக்கில் ஒன்று கூட நிரந்தர சத்திர சிகிச்சைக்கு எதிராக இல்லை என்பதை அவர் தெரிவித்துள்ளார்.(5)

அல் அஸ்ஹர் சிரேஷ்ட இமாமாக விளங்கிய ஷேக் ஜாதல் ஹக் அவர்கள் 1980 ஆம் ஆண்டு வெளியிட்ட ஓர் அறிக்கையில் அல்குர்ஆனிலோ, அல்லது அருள் நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகளிலோ நிரந்தர கருத்தடைச் சத்தி சிகிச்சைக்கு எதிராக எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.(6)

ஆனால் பெரும்பாலான மார்க்க அறிஞர்கள் நிரந்தர கருத் தடைச் சத்திர சிகிச்சைகளை **போதிய மருத்துவக் காரணங்கள் இன்றி** அனுமதிக்கவில்லை.

ஷரீஆ சட்டப்படி ஒருவன் தன்னையும், மனத்தையும், மார்க்கத்தையும், பொருளாதாரத்தையும், இனப் பெருக்கும் சக்தி யையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நிரந்தர கருத்தடைச் சத்திர சிகிச்சைகளின் பின்னர் இனப்பெருக்கும் சக்தியை நூறு விகிதம் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது.

சஊதி அரேபியாவின் பிக்ஹு கவுன்சிலின் தீர்ப்பின்படி கருத் தடைச் சத்திர சிகிச்சைகள் பூரணமாகத் தடுக்கப்பட்டுள்ளன.(7)

ஆனால் மருத்துவக் காரணங்கட்காக நிரந்தரக் கருத்தடைச் சத்தி சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு இஸ்லாத்தில் பூரண அனுமதி உண்டு. உதாரணமாக இனிமேல் பிள்ளை உண்டானால் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்று இருந்தால், அல்லது குறைபாடுகள் உள்ள குழந்தைகள் பிறக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தால் நிரந்தரக் கருத்தடை முறைகட்கு ஷரீஅத் சட்டத்தில் இடமுண்டு.(8)

இருதய நோய் உள்ளவர்கள், சிறுநீரக நோய் உள்ளவர்கள், கடுமையான நீரிழிவு நோய் உள்ளவர்கள், பல முறை சிசேரியன்





அறுவை சிகிச்சை செய்யப்பட்டவாகள் அதிக பிள்ளைகள் உண்டாகி கருப்பை தளர்ந்த நிலையில் உள்ளவர்கள், குறைபாடுள்ள குழந்தை களைப் பெறும் சாத்தியம் உள்ளவர்கள் போன்றவர்கள் நிரந்தர கருத்தடை செய்வதை இஸ்லாம் அனுமதித்து இருக்கின்றது.

பதினைந்து வயதில் திருமணம் முடித்து இருபது வயதில் ஆறு பிள்ளைகளைப் பெற்று விட்ட ஒரு பெண்ணின் நிலை என்ன? இன்னும் 30 ஆண்டுகட்கு அவர் பிள்ளை பெற வாய்ப்புண்டு. முப் பது ஆண்டுகட்குத் தற்காலிக முறைகளைப் பாவிப்பதா அல்லது நிரந்தரக் கருத்தடைச் சத்திர சிகிச்சைகளைச் செய்து கொள்ள லாமா? இது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட மருத்துவப் பிரச் சினைகளின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டிய விடய மாகும்.

# ( 17 )

# பால்ய திருமணம்

குடும்பத் திட்ட முறைகள் பெரிதும் வழக்கத்தில் இல்லாத சமூ கத்தில் கட்டுக்கடங்காத விதத்தில் சனத்தொகை பெருக வாய்ப்புண்டு. கணிசமான முஸ்லிம் சிறுமிகள் மிகவும் இளவயதிலேயே திருமணம் புரிகின்றார்கள். குடும்பத் திட்ட முறைகள்இல்லாததால் அடிக்கடி பிள்ளைகளைப் பெறுகின்றார்கள்; தேவைக்கு அதிகமாகவே பெறு கிறார்கள். முதிய வயதிலும் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள் (Too early, too frequent, too late and too much). தாயும் மகளும் கர்ப்பவதிகளாக இருப்பது முஸ்லிம் கிராமங்களில் வெகு சாதாரணமான சம்பவங்களாகும்.

முஸ்லிம் சிறுமிகள் சிறுவயதிலேயே திருமணம் செய் வது மிகவும் துரதிர்ஷ்டமாகும். பால்ய விவாகம் பல பிரச்சினைகட்கு மூல காரணமாகும். சில முஸ்லிம் கிராமங்களில் ஒரு சிறுமி 'பெரிய பிள்ளை' ஆனதும் உடனே படிப்பை நிறுத்தி விடுகின்றனர். வகுப்பில் மிகவும் கெட்டிக்காரத்தனமான பல பிள்ளைகள், சமுதாயத்தில் எவ்வளவோ உயர்ந்த நிலைக்கு வரவேண்டிய பல பிள்ளைகள் பூப் பெய்திய ஒரே காரணத்திற்காக வீட்டுக்குள்ளே பூட்டப்பட்டு விடுகின்றனர். இப்படியாக அந்த சிறுமி வீட்டில் இருக்கும்போது தமக்குப் பெரும் சுமை இருப்பதாகப் பெற்றோர் கருதுகின்றனர். இவ்வேளைகளில் அந்தப் பெண்ணுக்குத் திருமணம் பேசி வந்தால் உடனே அந்தத் திருமணத்தை முடித்து விடுகின்றனர். "என்ன, இப்படித் திடீரென்று கல்யாணம் முடித்து விட்டீர்களே" என்று கேட்டால், "என்ன செய்வது! ஒன்றும் இல்லாமல் கேட்டு வந்தார்கள். நாங்கள் என்ன சேர்த்தா வைத்திருக்கிறோம்? நாங்கள் கொடுத்து விட்டோம்" என்று இலேசாகப் பதில் சொல்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளைக்குப் பின்னர் உங்கள் மகளின் கணவன் என்ன செய்கிறார் என்று கேட்டால் "இப்போது சீசன் சரியில்லை. சும்மாதான் வீட்டில் இருக்கிறார் என்று சொல்வார்கள். தாங்களே தங்கள் குடும்பச் செலவைச் சமாளிக்கத் திண்டாடும்போது இன் னொருவரையும் சேர்த்துக் கவனிக்க வேண்டியிருக்கிறது. தொழில் இல்லாமல் வீட்டில் இருப்பவர் ஒரேயொரு தொழிலை மாத்திரம் ஒழுங்காகச் செய்கிறார். கல்யாணம் முடித்து ஒன்றிரண்டு மாதங் கட்குள்ளேயே அந்தப் பெண் கர்ப்பவதியாகி விடுகிறாள்!

திருமணம் இப்படி பொறுப்பற்ற விடயம் அல்ல. இஸ்லாத்தில் திருமணம் முடிப்பதைப் பற்றி மிகவும் திட்டவட்டமாகக் கூறப்பட் டுள்ளது. அருள்மறையாம் அல்குர்ஆன் சூரா அந் நூர் 24வது அத்தியாயம் 33வது வசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

> திருமணத்தை (செய்ய வசதிகளை) பெற்றுக் கொள் ளாதவர்கள் அல்லாஹ் தன் பேரருளால் அவர்களைச் செல்வம் உள்ளவர்களாக ஆக்கும்வரை பத்தினித்தனமாக இருந்து கொள்ளவும்.
>
> (அல்குர்ஆ 24:33)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றதாக ஹசரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**இளைஞர்களே, உங்களில் மனைவியையும், வீட்டு நிலைமைகளையும் கவனிக்க சக்தி உள்ளவர்கள் திருமணம் புரியுங்கள். அவ்வாறு சக்தி பெறாதவர்கள் உங்கள் இச்சைகளைத் தணித்துக் கொள்வதற்காக நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்.**[1]

அல்குர்ஆனின் இந்த திருவசனத்தையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள் வாக்கையும் அவதானியுங்கள். ஒரு பெண்ணுக்குரிய சகலதையும் வழங்கக் கூடிய ஒரு ஆண்தான் திருமணம் முடிக்க முடியுமே தவிர சம்பாத்தியம் அற்றவன் மணமுடிப்பதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை.

பால்ய விவாகம் நம்முடைய சமூகத்தின் சாபக்கேடுகளில் ஒன்றாகும். மிகச் சிறிய வயதில் உடலும், உளமும் விருத்தி அடையாத நிலையில் திருமணம் முடித்து வைத்தால் அப்பாவியான அச் சிறுமி எத்தனையோ உடல், உள ரீதியான பிரச்சினைகட்கு உள்ளாகிறாள். தங்கள் கவலைகளையும் நோய்களையும் வெளியே சொல்லிக் கொள்ள முடியாத நிலையில் எத்தனையோ இளம் பெண்கள் கண்ணீரிலேயே தங்கள் காலங்களைக் கழிக்கின்றனர். பதினைந்துக்கும் இருபதுக்கும் இடைப்பட்ட வயதில் தாயாகும் பெண்கள் மற்றப் பெண்களை விட இரு மடங்கு மரண ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.[2]

அல்குர்ஆன் சூரத்துன் நிஸா 4வது அத்தியாயம் 6வது திருவசனம் இப்படி அருளப்பட்டுள்ளது.

இன்னும் அநாதைகளை (சிறுவர்களை, சிறுமிகளை) அவர்கள் திருமண வயதை அடையும் வரை (தொழில் முதலியவற்றில்





ஈடுபடுத்தி, கல்வி கற்பித்து) கவனித்து வாருங்கள்...

(அல்குர்ஆன் 4:6)

இந்த ஆயத்தில் திருமண வயதை அடைந்த பின்னரே ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருமண வயது என்ன என்பதில் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. இமாம் அபூஹனிபா (Imam Abu Hanifa) அவர்களின் கருத்துப்படி பெண்ணின் திருமண வயது 17 ஆகும். முதலாம் உலக யுத்தத்தின் முன்னர் பிரகடனமான ஒட்டமன் குடும்பச் சட்டத்திலும் (Ottaman Family Law) இந்த வயது எல்லைதான் குறிப்பிடப்பட்டுள்ளது.[3] பெண்களின் திருமண வயது எல்லை பற்றி பலரும் பல அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளனர். பெண்ணின் திருமண வயது 20-25 என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயமாகும்.

ஒரு சிறுமி பூப்பெய்தியதும் அவளுடைய பாடசாலைப் படிப்பை முடிப்பது மிகவும் துரதிர்ஷ்டமாகும். அவளைத் தனிமைப்படுத்துவதோ, முடக்கி வைப்பதோ சிறந்த காரியங்கள் அன்று. மாறாக, அவள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றியும், அக்காலத்தில் பேண வேண்டிய சுகாதார முறைகள் பற்றியும் சொல்லிக் கொடுப்பது அவசியமாகும். அவளது படிப்பை இடைநிறுத்த வேண்டிய அவசியமில்லை. படிக்க விருப்பமில்லாத பிள்ளைகள் இதைச் சாட்டாக வைத்து படிப்பை முடித்துக் கொள்கிறார்கள். அல்லது இதற்குப் பின் சம்பந்தமில்லாத நோய்களைக் கூறி பாடசாலையில் இருந்து விடைபெற்றுக் கொள்கிறார்கள். வசதி வாய்ப்பிருந்தால் பெண் பாடசாலைகளில் படிப்பினைத் தொடரலாம். அல்லது அவர்கட்குப் பள்ளிப் படிப்பில் விருப்பமில்லா விட்டால் சமையற்கலை, தையற்கலை இன்னோரன்ன தொழில் முறைகளைப் படிப்பிக்க வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "முறையான கல்வியைக் கற்பது ஆண்,

பெண் இருபாலாருக்கும் கடமையானது” என்று மிகவும் கண்டிப்பாகக் கூறியுள்ளார்கள். இந்த ஹதீஸில் வரும் “தலபுல் இல்மி” என்பதில் உள்ள “அல்-இல்ம்” என்பது பயனுள்ள கல்வியைக் குறிக்கும். அது மார்க்கக் கல்வியாகவும் இருக்கலாம்; தொழில் சார்ந்த கல்வி முறைகளாகவும் இருக்கலாம். ஆகவே ஆண், பெண் இருபாலாருக்கும் பயனுள்ள கல்வி முறைகளைக் கற்பிப்பது பெற்றோரின் கட்டாயக் கடமையாகும். ஒரு பெண் இந்தக் கல்விகளைக் கற்றுக் கொண்டால் வீட்டில் இருந்து கொண்டே உழைப்பதற்கும், குடும்பச் செலவைச் சமாளிப்பதற்கும் வழி பிறக்கிறது.

பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தும், பெண்களைக் கேவலமாகவும் நடாத்திய காலத்தில் வாழ்ந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களுக்கு அளித்த கௌரவமும் வாழ்க்கை வாய்ப்பும் உலக நாகரிக வரலாற்றில் எப்போதும் புகழப்பட்டுக் கொண்டே இருக்கும். அந்தக் கொடூர மக்களிடையே “பெண்களைத் திட்டாதீர்கள்; நான் பெண் குழந்தைகளின் தந்தை” என்று கெஞ்சினார்கள். பெண்கட்குப் பயனுள்ள கல்வியைக் கட்டாயமாக்கினார்கள். ஒரு பெண் படித்தால் ஒரு சமுதாயமே மறுமலர்ச்சி பெற்றுவிடும் என்ற உண்மையை அந்தக் காலத்திலேயே உணர்ந்திருந்தார்கள். அந்த அண்ணல் நபியைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் நாம் நமது பெண் சகோதரிகட்கு, குழந்தைகட்கு பயனுள்ள கல்வியை மறுக்கிறோம்.





## ( 18 )

# தள்ளாத வயதில் தாயாகலாமா?

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மாஹாலை காதல் நினைவுச் சின்னமாகத்தான் எல்லோரும் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில் முகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹானின் மனைவி மகாராணி மும்தாஜ் தனது 14வது பிரசவத்தின் போது இறந்து போனார். அந்தப் பிரசவ மரணத்தின் துயரக் காவியமே தாஜ்மஹால் ஆகும்.[1] சகல வய்ப்புகளும், வசதிகளும் மிகுந்த ஒரு சக்கரவர்த்திக்கே தனது இராணியைப் பிரசவ மரணத்தில் இருந்து காப்பாற்ற முடியாது போனால் சாதாரண மக்களின் நிலை என்ன என்று எண்ணிப் பாருங்கள்.

நம்முடைய சகோதரிகள் மிகச் சிறிய வயதிலேயே திருமணம் முடித்து எந்த விதமான குடும்பத் திட்ட முறைகளும் இன்றி அதிக அளவில்பிள்ளைகள் பெறுவதோடு முதிய வயதிலும் பெற்றுக் கொண்டே செல்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாகப் பல ஆண்களுக்கு இனப்பெருக்கம் ஒரு பொழுது போக்குப் போலத்தான் (Recreation is procreation) இருக்கிறது. எந்த விதமான பொறுப்புணர்ச்சியும் இன்றி மனைவியை பிரசவம் என்னும் மரண பயத்திற்கூடாக

செலுத்திக் கொண்டே இருக்கிறார்கள். பால்ய வயதின் திருமணத்தால் ஏற்படும் மருத்துவப் பிரச்சினைகள் பற்றி முன்னர் விளக்கி இருந்தேன். முதிய வயதில் பிள்ளைகள் பெறுவதால் ஏற்படும் மருத்துவப் பிரச்சினைகள் பற்றி இப்போது கவனிப்போம்.

பிள்ளைகள் பெறுவதற்கு மிகச் சிறந்த வயது 20-34 ஆகும். நாற்பது வயதுக்கு மேல் தாயாகும் ஒருத்தி மற்ற பெண்களை விட பத்து மடங்கு மரண ஆபத்தை எதிர்நோக்குகிறார்.[2] அவரது குழந்தை இறக்கும் வாய்ப்பு மற்றப் பெண்களை விட மூன்று மடங்கு அதிகமாகும். அது தவிர வயது அதிகமாகிச் செல்வதால் இரத்த அமுக்கம் (Blood pressure), நீரிழிவு (Diabetes) கருப்பையில் கட்டி உண்டாதல் (Fibroids), பிரசவத்தின் போது இரத்தோட்டம் ஏற்படல் (Abruptio placenta), குழந்தை வளர்ச்சி குறைவாதல் (Growth retardation) போன்ற குறைபாடுகள் ஏற்படுகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொன்றுமே மரணத்தை விளைவிக்கப் போதுமானவை.[3]

வயது முதிர்ந்தோர் தாயாகும்போது அங்கக் குறைபாடுள்ள குழந்தைகளையும், மூளைவளர்ச்சி குறைந்த பிள்ளைகளையும் பெறும் வாய்ப்பு அதிகமாகும். மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் பெறும் சாத்தியத்தைக் கீழே விபரிக்கிறேன்.[4]

| வயது | சாத்தியம் |
|---|---|
| 35 | 1/400 |
| 38 | 1/200 |
| 40 | 1/100 |
| 45 | 1/40 |

முப்பத்தி ஐந்து வயதில் தாயாகும் ஒருத்தி மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகளைப் பெறும் சாத்தியம் நானூறில் ஒன்றாகும்.





45 வயதுப் பெண்ணொருத்தி குறைபாடுள்ள பிள்ளையைப் பெறும் சாத்தியம் 40 இல் ஒன்று. கட்டுப்பாடாக நடந்து கொள்ளாமல் மனம் போன விதத்தில் நடந்து விட்டு குறைபாடுள்ள பிள்ளை ஒன்று பிறந்ததும் அல்லாஹ் மீது குறை கூறுதல் எப்படி நியாயமாகும்?

இது தவிர அதிகமாகப் பிள்ளைகள் பெற்றுக் கொண்டே செல்லும்போது கருப்பை தளர்ந்து விடுகின்றது (Laxity of uterus). பிள்ளைகள் குறுக்காக அமைந்து விடுகின்றது (Abnormal lie). சில வேளைகளில் பிரசவ வலியில் கருப்பை சுருங்கத் தொடங்கும்போது கருப்பையே வெடித்து விடலாம். பிள்ளை பிறந்து முடிந்தாலும் பிளசன்ட்டா (Placenta) வராமல் கருப்பையில் ஒட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும். பிள்ளை கிடைத்த பின்னர் கருப்பை சுருங்காமல் அதிக குருதி ஓடிக் கொண்டே இருக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இரத்த ஓட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கருப்பையையே அகற்ற வேண்டி நேரிடும்.[5] இந்த சத்திர கிகிச்சைகள் சாதாரண விடயமல்ல. இதற்கிடையில் எத்தனையோ போத்தல்கள் இரத்தம் தேவைப்படுகின்றது. வைத்திய நிபுணர்களும் சத்திர சிகிச்சை வசதிகளும் இரத்த வங்கியும் இருக்கின்ற பெரிய வைத்தியசாலைகளில்கூட சில வேளைகளில் இந்தத் தாய்மாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. முஸ்லிம்களில் பெரும்பாலானோர் கிராமப் புறங்களிலேயே வாழ்கின்றனர். கிராமப்புற வைத்தியசாலைகட்கு வருவதற்கே எத்தனையோ மைல்கள் கால்நடையாகவோ, திரீ வீலரிலோ வர வேண்டி இருக்கிறது. போதிய வசதிகள் அற்ற கிராமப்புற வைத்தியசாலைகட்குக் கடைசி நேரத்தில் இவர்கள் சென்றடைந்தால் அங்குள்ள வைத்தியர்களால் என்ன செய்ய முடியும்? இரவு நேரங்களில் அம்புலன்ஸ் வண்டிகளை ஒழுங்கு செய்வதோ, பெரிய வைத்தியசாலைகட்கு நோயாளிகளை இட மாற்றுவதோ இலேசான காரியம் அல்ல. உரிய காலத்தில் பெரிய வைத்தியசாலைகட்கு வந்து சேருமாறு எவ்வளவு அறிவுறுத்

தப்பட்டாலும் இந்த சகோதரிகட்கு வந்து கொள்ள வாய்ப்பில்லை; ஏனெனில் வீட்டில் பால் குடிக்கின்ற சிறிய குழந்தைகள்!

இறைவன் அருளால் அவர்கள் பிரசவித்து முடிந்த பின்னர் ஏதாவது குடும்பத் திட்ட முறைகள் பற்றி அறிவுறுத்தப்பட்டால், வழக்கமான பதில் "எனக்கு இதில் விருப்பந்தான். ஆனால் அவருக்கு இதில் விருப்பமில்லை". கணவருடன் கதைத்தால் அவர் தருகின்ற பதில் "இப்போது மனைவியின் உடம்பு பச்சை உடம்பு. நாங்கள் இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் வந்து செய்துகொள்கிறோம்". ஆனால் இரண்டு மூன்று மாதங்களில் அந்த சகோதரி வருவது கருத்தடை முறைகட்கு அல்ல; கர்ப்பம் உண்டாகி, பரிசோதனைக்காக.

கிராமப்புறங்களில் வாழும் அதிக முஸ்லிம்கள் வறுமையாகவும், கல்வி அறிவு இல்லாமலும் இருப்பதால் மிகவும் துயரமான வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். சில கிராமங்களில் வெகு தூரம் சென்று குடம் குடமாகத் தண்ணீர் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். காட்டிற்குச் சென்று விறகுகள் கொண்டு வர வேண்டும். வேகா வெய்யிலில் வயலில் புல் பிடுங்கித்தான் நாலு காசு சம்பாதிக்கிறார்கள். வீட்டில் ஏதாவது சமைத்தால் கணவன், பிள்கைள் சாப்பிட்டு மிஞ்சினால் அதுதான் அவளுக்கு உணவு. இதற்கிடையில் வருடந் தவறாமல் பிள்ளையும் பெற வேண்டும். "நம் பெண்கட்கு பகலிலும் சித்திரவதை; இரவிலும் சித்திரவதை." இந்தப் பெண்கட்கு ஒரு விடிவு வேண்டாமா?

ஒரு தாய் மரணமானால் ஒரு குடும்பத்தின் இழப்பை எழுத்தில் வடிக்க முடியாது. குழந்தைகளின் வாழ்க்கை உருக்குலைந்து விடுகின்றது. அந்தக் குடும்பத்தின் சம்பளமில்லாத சமையல்காரி, வேலைக்காரி இல்லாமற் போய்விடுகின்றார். ஒரு நல்ல நண்பியை, உறவினரை சமூகம் இழக்கின்றது. வளர்முக நாடுகளில் பெண்கள்





மிக அதிகமாக மரணமாவது பிரசவத்திலேயே தவிர வேறு எந்த நோய்களிலும் அல்ல.

ஆனால் பெரும்பாலான ஆண்கள் இதைப் பற்றி அக்கறை காட்டுவதில்லை. "மனைவி இறந்தால் கணவன் புது மாப்பிள்ளை" என்று சொல்வார்கள். எட்டுப் பிள்ளைகளின் தாய் ஒருவர் எரிகாயங்களால் பரிதாபகரமாக மரணமானார். ஆனால் எண்ணி எட்டு நாட்களுக்குள் அவளது கணவர் இன்னொரு பெண்ணுடன் வந்தார். அதிர்ச்சியில் இருந்து நான் விடுபடுவதற்குள் அவர் சொன்ன காரணம் "வீட்டில் பிள்ளைகள் எல்லாம் சிறியவர்கள். அவர்களைக் கவனிப்பதற்காகத்தான் இந்தப் பெண்ணை மணந்து கொண்டேன்" என்றார். மூன்று மாதங்களில் அந்தப் பெண் கர்ப்பவதியாக வந்தார். சில மாதங்களின் பின்னர் இறந்துபோன அந்தப் பெண்ணின் மூத்த மகனைச் சந்தித்தேன். அவனுக்கு வயது பனிரெண்டு. அவனிடம் குடும்ப நிலவரங்களை விசாரித்தேன். அவன் சொன்ன பதில் "சாச்சிக்கு நாங்கள் தொந்தரவு செய்வதாகச் சொல்லி வாப்பா எங்களை விரட்டி விட்டார். நாங்கள் இப்போது எங்கள் மூத்த உம்மாவின் வீட்டில் இருக்கிறோம். வாப்பா இப்போது எங்களைக் கவனிப்பதில்லை. நான் ஒரு கடையில் சம்பளத்திற்கு நிற்கிறேன்."

( 19 )

# குறைவான பிள்ளைகளும் நிறைவான வாழ்வும்

ஒரு நிமிடத்தில் உலகில் 380 பெண்கள் கர்ப்பவதி ஆகிறார்கள்; பிரசவ சம்பந்தமான பாரதூரமான பிரச்சினைகள் 110 பெண்களில் இடம்பெறுகின்றன; நாற்பது சட்ட விரோதமான கருச்சிதைவுகள் போலி வைத்தியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன; ஒவ்வொரு நிமிடமும் வாழ வேண்டிய ஓர் இளம் பெண் பிரசவத்தால் மரணம் அடைகிறார்.[1] ஆகவே ஒரு நிமிடத்தையேனும் வீணாக்காமல் இத் தகைய அழிவுகளில் இருந்து நம்முடைய சகோதரிகளைக் காப் பாற்றுவதற்காக அவர்கட்கு உரிய குடும்பத் திட்ட முறைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டியது சமூகத்தில் அக்கறை உள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

உலகின் சனத்தொகை 1000 ஆம் ஆண்டில் ஐம்பது கோடியாக இருந்தது. 1927 ஆம் ஆண்டில் இருநூறு கோடியாக இருந்தது 1960 ஆம் ஆண்டில் இது முன்னூறு கோடியாகிற்று. 1974 ஆம் ஆண்டில் 400 கோடியாகவும், 1987 ஆம் ஆண்டில் 500





கோடியாகவும், 1997 இல் 600 கோடியாகவும் அதிகரித்தது. இதன்படி கணக்கிட்டுப் பார்த்தால் 2010 ஆம் ஆண்டளவில் தான் உலகின் சனத்தொகை 600 கோடியாக வேண்டும்.[2] ஆனால் உலகின் அறுநூறு கோடியாவது பிள்ளை நீங்கள் இந்தக் கட்டு ரையை வாசிக்கும்போது பிறந்துவிட்டது. இது உலகின் சனத் தொகை எவ்வளவு வேகமாகப் பரவி வருகின்றது என்பதைக் காட்டுகின்றது. உலகில் ஒவ்வொரு நாளும் 250,000 குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கின்றன. நமது அண்மை நாடான இந்தியா வில் ஒவ்வொரு வருடமும் ஒரு கோடியே எண்பது லட்சம் குழந்தைகள் (இலங்கையின் சனத்தொகைக்குச் சமமான அளவு) பிறந்து கொண் டிருக்கின்றன. இந்தியாவில் நூறாவது கோடிப் பிள்ளை பிறந்து விட்டது.[3]

முஸ்லிம் நாடுகளான இந்தோனேஷியாவின் சனத்தொகை இருபது கோடி; பாகிஸ்தானின் சனத்தொகை பதினைந்து கோடி; பங்களாதேஷின் சனத்தொகை பனிரெண்டு கோடியாகும்.[4] இந்த நாடுகளில் ஏற்கனவே பொருளாதார நிலைகள் சரியாக இல்லை. இந்த நிலையில் கட்டுப்பாடற்ற விதத்தில் சனங்கள் பெருகிக் கொண்டு போனால் அந்த நாடுகள் எப்படி வளம்பெற முடியும்? அதிகமான பிள்ளைகள் பெற்றவர்கள் போதிய வருமானம் இல்லா ததால் சட்டவிரோத முறைகளில் பணந் தேட முயற்சிக்கின்றனர். முடிவில் இஸ்லாத்திற்கே களங்கம் ஏற்படுத்துகின்றனர். இன்று மோசமான கள்ள மார்க்கட் வியாபாரிகள், ஏமாற்றுக்காரர்கள், போதை மருந்துக் கடத்தல்காரர்கள் எல்லாம் பெரும்பாலும் முஸ்லிம் களாகவே இருக்கிறார்கள். இஸ்லாம் உலகத்துக்கே ஒரு உன்னத வாழ்க்கை நெறியாகும். அது மனித சமுதாயம் முழுவதற்குமே வழிகாட்டி. இஸ்லாத்தில் எவை அனுமதிக்கப்பட்டவையோ அவை மனித சமுதாயத்திற்கு நன்மை பயப்பன; எவை விலக்கப்பட்டனவோ அவை மனிதர்கட்கு ஊறு விளைவிப்பன. இத்தகைய உன்னத வாழ்க்

கைத் திட்டம் வழங்கப்பட்ட நாம் இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோதமான வழிகளிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதால் மற்றவர்கள் நம்மை விட்டும் விரண்டோடிக் கொண்டிருக்கிறார்கள். இஸ்லாம் தேன் சொட்டும் பலாச் சுளைகள். அவற்றைப் பாதுகாக்கும் பலாத் தோலாக நாம் இருக்க வேண்டுமே தவிர அடுத்தவர்கள் அதனை நெருங்க முடியாத முள்வேலியாக நாம் இருக்கக் கூடாது. வெறும் முஸ்லிம் பெயர்களை வைத்துக் கொண்டிருப்பதால் மாத்திரம் இஸ்லாமியர்களாகி விட முடியாது.

குடும்பத் திட்ட முறைகள் முஸ்லிம்களிடையே பெரிதும் வழக்கில் இல்லாமல் இருப்பதற்கு அவர்களின் கல்வி அறிவு இன்மையும் ஒரு காரணமாகும். இஸ்லாமிய நெறியில் வாழ்கின்ற, கல்விமான் களான சமுதாய உயர் மட்டத்தில் வாழ்பவர்களைப் பாருங்கள். அவர்கட்கு 3-4 குழந்தைகள்தான் இருக்கின்றன. இருபத்தி ஐந்து முஸ்லிம் டாக்டர்களை நான் எண்ணிப் பார்த்தேன். ஒருவருக்குக் கூட மூன்று குழந்தைகட்கு மேல் இல்லை. இவர்களில் பலர் த.ஃவா பணியில் ஈடுபடுகின்ற, இஸ்லாம் பற்றி நன்கு அறிந்தவர்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ் கின்ற கல்வி அறிவு இல்லாத, வறுமையான குடும்பங்களில் எட்டுப் பத்து அல்லது அதற்கு மேலும் பிறக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். “நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். உங்கட்குக் கொடுக்கப்பட்டிருந்த கடமைகள் பற்றி நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்”. போதிய பொருளாதார வசதிகளும், பராமரிப்பு வசதிகளும் அற்ற நிலையில் அளவுக்கு மீறிப் பிள்ளை பெறுபவர்கள் அந்தப் பிள்ளைகள் மீது நமக்குள்ள பொறுப்புகள் பற்றி என்ன சொல்ல முடியும்?

சில முஸ்லிம் நாடுகளின் பெண்கள் கல்வி விகிதத்தையும் அங்கு குடும்பத் திட்ட முறைகள் எந்த அளவில் பாவிக்கப்படுகின்றன





என்பதையும்,அங்குள்ள தாய், சேய் மரண வீதங்களையும் இங்கே தருகிறேன்.[5]

| | பெண்கள் கல்வி விகிதம் | குடும்பத்திட்ட முறைகள் பாவிக்கப்படும் வீதம் | தாய் இறப்பு | குழந்தை இறப்பு |
|---|---|---|---|---|
| பங்களாதேஷ் | 22% | 40% | 600/100,000 | 94/1000 |
| பாக்கிஸ்தான் | 21% | 1% | 500 | 95 |
| இந்தோனேஷியா | 75% | 43% | 450 | 71 |
| மலேஷியா | 70% | 48% | 60 | 13 |
| இலங்கை | 83% | 62% | 40 | 20 |

இந்தப் புள்ளி விபரங்களைப்பார்க்கும்போது பெண்கள் கல்வி கற்பது அதிகரித்தால் அவர்கள் குடும்பத் திட்ட முறைகளைப் பாவிக்கும் வீதம் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். அதன் பயனாக தாயின் மரண வீதமும், குழந்தையின் மரண வீதமும் கணிசமான அளவில் குறைகின்றன. இந்த மாற்றத்தை ஈரான் இஸ்லாமியக் குடியரசில் நன்கு காண முடியும். 1982 ஆம் ஆண்டில் 52 வீதமான பெண்களே கல்வி பெற்றிருந்தனர். ஆனால் 1996 ஆம் ஆண்டில் 74 வீதமான பெண்கள் கல்வி கற்றிருந்தனர். பெண் கல்வி முன்னேறியதால் அவர்களின் தேகாரோக்கிய நிலைகளில் அதிக மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக 1985 ஆம் ஆண்டில் அங்கு ஒரு இலட்சம் பிரசவங்களில் 140 பெண்கள் மரணமாயினர். ஆனால் 1996 இல் ஒரு இலட்சம் பிரசவங்களில் 36 பெண்கள் மட்டுமே மரணமாயினர்.[6] ஆகவே ஒரு சமூகத்தில்

மாற்றமும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட வேண்டுமாயின் அங்கு பெண்கள் கல்வி கற்க வேண்டும். பெண்கள் நன்கு கற்று ஒரு இஸ்லாமியப் பெண்ணின் பங்கு என்ன, கடமைகள் என்ன என்று உணர்ந்தால் குடும்பத் திட்ட முறைகள் மிகவும் இலகுவாகப் பழக்கத்திற்கு வந்துவிடும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்அருளியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "போதிய வருமானம் இன்றி அதிக பிள்ளைகளைக் கொண்டிருப்பது ஒரு கடுமையான சோதனையாகும்." இந்த வசனங்கள் அல் சயூத்தி (றழி) அவர்களாலும், அல் ஹாகிம் (றழி) அவர்களாலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.[7]

அப்துல்லா இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் "அதிக பிள்ளைகள் இருப்பது வறுமையில் நின்றும் உள்ளது. குறைந்தளவு பிள்ளைகள் இருப்பது இலகுவில் நின்றும் உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.[8]

இஸ்லாத்தில் மிகுந்த ஞானமும் ஈடுபாடும் உள்ளவர்களே குறைந்த அளவு பிள்ளைகளைப் பெற்றால் போதுமென்று நமக்கு அறிவுறுத்தியபோது, கட்டுப்பாடின்றி அதிக அளவு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளலாமா?





**( 20 )**

# சில சந்தேகங்கள்

இக் கட்டுரைத் தொடர் தினகரன் வார மஞ்சரியில் பிரசுரமானபோது அதிகமான வாசகர்கள் மிக முக்கியமான சில கேள்விகளை என்னிடம் கேட்டிருந்தார்கள். அவற்றுக்குரிய விளக்கங்களை நோக்குவோம்.

## (அ) இஸ்லாமும் இன விருத்தியும்

*நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அநேக பொன்மொழிகள் அதிக அளவு பிள்ளைகள் பெறுவதை ஊக்குவிப்பதாக அமைகின்றன. இஸ்லாம் பொதுவாக இனவிருத்தியை ஊக்குவிக்கின்றது. அப்படியானால்குடும்பத் திட்டத்திற்கு இடம் இருக்கின்றதா என்று பல வாசகர்கள் கேட்டிருந்தார்கள்.*

இது ஒரு முக்கியமான கேள்வி ஆகும். வசதியும், வாய்ப்பும் இருந்தும் திருமணம் செய்து கொள்ளாதவர்கள் இஸ்லாத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். திருமணம் அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமான ஒரு நடைமுறை; அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய

வழிமுறைகளில் ஒன்றாகக் காட்டிய வாழ்க்கை முறையாகும். மனைவி, குழந்தைகளுக்காகச் செலவழிப்பது சதக்காவாகும்.[1] அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மேலும் அருளினார்கள்: "ஒரு மனிதன் மரணித்ததும் மூன்று விடயங்கள்தான் அவனுடன் செல்லும் தொடர்ந்து மக்களுக்கு நன்மை அளிப்பதற்காக அவன் செய்த முயற்சி, மாணவர்கட்குக் கற்றுக் கொடுத்த நல்லறிவு, அவனுக்கான பிள்ளை களின் பிரார்த்தனை[2]. இவற்றைப் பார்க்கும்போது திருமணத்தையும் குடும்ப வாழ்க்கையையும் இஸ்லாம் எந்த அளவிற்கு வற்புறுத்தி இருக்கிறதுஎன்பது சொல்லாமலே விளங்கும்.

திருமணத்தின் ஒரு நோக்கம் குழந்தைகள் பெற்றுக் கொள்வதும் சந்ததியைப் பெருக்குவதுமாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அநேக பொன்மொழிகள் இன விருத்தியைத் தூண் டுவனவாக இருக்கின்றன. உடனடியாக எனக்கு ஞாபகத்திற்கு வருகின்ற ஒரு ஹதீஸ், நம்முடைய திருமண குத்பாக்களில் ஓதப்படும் 'தனாக்கஹூ.' என்ற ஹதீஸ் ஆகும். "என்னுடைய உம்மத்து மார்களே, நீங்கள் திருமணம் முடியுங்கள். இனத்தை விருத்தி செய்யுங்கள். மறுமை நாளில் ஏனைய சமூகத்தினரின் முன்னால் உங்கள் தொகையைக் காட்டிப் பெருமைப்படுவேன்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.[3]

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன விருத்தியை விரும்பி னார்கள். அக்காலகட்டத்தை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். பிறந்த உடனேயே பல குழந்தைகள் உயிருடன் புதைக்கப்பட்டன; கோத்திரச் சண்டைகளிலும் கோஷ்டிக் கலவரங்களிலும் ஒருவரை ஒருவர் கொலை செய்வது மிகச் சாதாரணமாக இருந்தது. காபிர்கள் அநியாயமாகத் தோற்றுவித்த அநேக யுத்தங்கள் காரணமாக முஸ்லிம்கள் பெருமளவில் உயிர் இழந்தனர். ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் மிகவும் குறைவாகவும், பலவீனமாகவும் இருந்தார்கள். ஆனால் விரோதிகளோ அதிகமாயும், ஆட்பலம் மிக்கோராயும்





இருந்தனர். இந்தச் சூழ்நிலையில், முஸ்லிம்கள் மிகவும் அதிகமாகப் பெருக வேண்டிய அவசியம் இருந்தது.

இப்படியான இக்கட்டான சூழ்நிலையிலும் கூட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டுக்கடங்காமல் வருடத்திற்கொரு பிள்ளை பெறுமாறு கூறவே இல்லை. ஒரு குழந்தைக்கு இரண்டு வருடங்கள் வரை பாலூட்டுமாறு அறிவுறுத்தினார்கள். இதன்படி ஒரு குழந்தைக் கும் மறு குழந்தைக்கும் இடையில் குறைந்தது மூன்று வருடங்கள் இடைவெளி விட வேண்டியிருக்கிறது. பிள்ளைகள் மீது பெற்றோருக் குரிய பொறுப்புகளை மிகவும் தெளிவாக விளக்கினார் கள்.

ஆகவே இஸ்லாம் இன விருத்தியை விரும்புகின்ற அதே நேரத்தில் குடும்பத்தை வரையறை செய்வதை வலியுறுத்துவதையும் காண்கிறோம். குறிப்பிட்ட சில காரணங்கட்காகக் குடும்பத் திட்ட முறைகளை மேற்கொள்வதை இஸ்லாம் தடைசெய்யவில்லை தாயினதும், குழந்தைகளினதும் தேக ஆரோக்கியக் காரணங்கட் காகக் குடும்பத் திட்ட முறைகளை அனுசரிப்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை என்ற நிறமாலையில் (spectrum) ஒரு முனையில் இனவிருத்தியும், மறுமுனையில் குடும்பத் திட்ட முறைகளும் இருக்கின்றன. தங்கள் குடும்ப நிலவரங்கட்கு ஏற்ப தமக்கு ஏற்றதைத் தெரிவு செய்து கொள்ள இஸ்லாத்தில் இட முண்டு.

*(ஆ) 'ஒருகுடும்பத்திற்கு மூன்றுகுழந்தைகள் போதுமானவை என்று குறிப்பிடுகின்றீர்கள். ஆனால் பல குடும்பங்களில் ஏழாவது, எட்டாவது ஏன் அதற்குப் பின்னர் பிறந்த குழந்தைகள் கூட சமுதாயத்திற்கு மிகவும் வேண்டிய பிள்ளைகளாக இருக்கின்றன. அந்தப் பெற்றோர்கள் மூன்று*

*பிள்ளைகளுடன் நிறுத்தி இருந்தால் இந்தப் பிள்ளைகளின் சேவைகள் சமுதாயத்திற்கு இல்லாமற் போய் இருக்குமே என்ற தோரணையில் பல நேயர்கள் வினா எழுப்பி இருந்தார்கள்.*

என்னுடைய கணிப்பின்படி இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் காலத்தால் கரையாத கல்விச் சேவைகள் ஆற்றியவர்களில் முக்கியமானவர் முன்னாள் கல்வி அமைச்சர் மர்ஹூம் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் ஆவர். அல்லாஹ் அன்னாரின் அளப்பரிய சேவைகளைப் பொருந்திக் கொள்வானாக. மதிப்பிற்குரிய மர்ஹூம் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் குடும்பத்தின் பதின்மூன்றாவது பிள்ளை. அவரது பெற்றோர் மூன்று பிள்ளைகளுடன் நிறுத்திக் கொண்டிருந்தால் பதியுதீன் போன்ற பெருஞ் சேவையாளர் ஒருவர் நமக்குக் கிடைத்திருப்பாரா?

அல்லாஹ் நாடியதைத் தடுக்க எவராலும் முடியாது. உலகத்தின் எல்லாச் சக்திகளும் ஒருங்கு சேர்ந்தாலும் அல்லாஹ் நாடிய ஒரு குழந்தை பிறப்பதைத் தடுத்து நிறுத்தி விட முடியாது; அவன் நாடாத ஒரு குழந்தையைப் பெறச் செய்யவும் முடியாது.

எந்தக் குடும்பத் திட்ட முறைகளைப் பாவித்தாலும் அல்லாஹ் நாடிய ஒரு குழந்தை உருவாவதைத் தவிர்க்க முடியாது. நிரந்தர முறைகளாகக் கருதப்படுகின்ற கர்ப்பத் தடைச் சத்திர சிகிச்சைகளின் பின்னர் கூட ஆயிரத்தில் ஒருவர் கருத்தரித்து விடுகின்றனர். தற்காலிக முறைகளில் இதைவிட மிக அதிகமான அளவில் கருத்தரிக்க வாய்ப்பு இருக்கின்றது.

ஒரு முஸ்லிம் போதிய அளவு இடைவெளிகள் விட்டுக் குழந்தைகள் பிறப்பதற்காகக் குடும்பத் திட்ட முறைகளைப் பாவிக்க வேண்டும். அவற்றையும் மீறிக் குழந்தை உருவானால் அது





அல்லாஹ்வின் நாட்டம் என்று பொருந்திக் கொள்ள வேண்டும். நான் குறிப்பிடுவதை வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். எந்த விதமான குடும்பத் திட்ட முறைகளும் இன்றி வருடத்திற்கு ஒரு பிள்ளையாகப் பெற்றுத் தள்ளிக் கொண்டு நம்முடைய கையில் என்ன இருக்கின்றது? எல்லாம் அல்லாஹ்வின் செயல் என்று வேதாந்தம் பேசுவது ஒருவகை. முறையான குடும்பத் திட்ட முறைகளைப் பாவிக்கும்போது அதையும் மீறி உருவாகும் குழந்தையை அல்லாஹ்வின் நாட்டம் என்று ஏற்றுக் கொள்வது இரண்டாவது வகை. அல்லாஹ் பாதுகாப்பவன் என்று சொல்லிக் கொண்டு ஓடும் பஸ்ஸின் முன்னால் பாய்வது முதலாவது வகை. பாதசாரிகளின் ஒழுங்கு முறைகளைப் பேணி அவதானமாக நடந்து செல்கையில் தவறுதலாக விபத்துக்கு உள்ளாவது இரண்டாவது வகை. நோய்கள் வருவது அல்லாஹ்வின் நாட்டப்படியே என்று சொல்லிக் கொண்டு எந்த விதமான கவனமும் இல்லாமல் இருந்து நோய்க்குள்ளாவது முதலாவது வகை. நோய் வராமல் தடுக்கக் கூடிய தடுப்பு மருந்துகள் (Vaccine) எடுத்து, நோய்க் கிருமிகள் அணுகாவண்ணம் பாதுகாப்பாக இருந்து அதையும் மீறி நோய் வருவது இரண்டாவது வகை. இதில் எது புத்திசாலித்தனமானது, கைக்கொள்ளப்பட வேண்டியது என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

*(இ) வறுமையான குடும்பங்களில் அதிக பிள்ளைகள் பிறந்தால் அவற்றை வளர்த்து முன்னுக்குக் கொண்டு வருவது கஷ்டம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். வறுமையான குடும்பத்தின் பிள்ளைகள் சிறந்த பிரசைகளாக முடியாதா? அல்லது செல்வந்தர்களின் பிள்ளைகள் எப்போதும் சிறந்த பிள்ளைகளாகவே வருமா?*

வறுமையான பிள்ளைகள் சிறந்த பிள்ளைகளாக வர முடியாது என்று ஒருபோதும் நான் குறிப்பிடவில்லை. இந்தக் கேள்வியைக் கண்டதும் எனக்குத் தெரிந்த நூறு விசேட வைத்திய நிபுணர்களை எண்ணிப் பார்த்தேன். அவர்களில் 82 பேர் என்னைப் போன்று சாதாரணமான குடும்பங்களில் இருந்து வந்தவர்களே. அதே போன்று என்னுடைய ஊரில் மிகவும் செல்வந்தர்களாய் இருந்த பலரின் பிள்ளைகளை எண்ணிப் பார்த்தேன். துரதிர்ஷ்டவசமாக அவர்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையவில்லை.

செல்வங் கொழிக்கும் நாடான அமெரிக்காவின் சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதியாக விளங்கியவர்களில் அதிகமானோர் ஆபிரஹாம் லிங்கன் போன்ற ஏழைகளே. ஒருமுறை அமெரிக்காவுக்கு வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவர் விஜயம் செய்திருந்தார். அவருக்கு அமெரிக்காவின் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் சுற்றிக் காட்டிய பின் சேரிப் பகுதியையும் சுற்றிக் காட்டப்பட்டது. ஆச்சரியப்பட்ட அந்தப் பிரமுகர் கேட்டார் : “இவ்வளவு பெரிய மாளிகைகள், அரண்மனைகள் உள்ள நகரில் இன்னும் சேரிகளை நீங்கள் ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?” அதற்கு அமெரிக்கர் பதில் சொன்னார் : “இந்தப் பெரிய மாட மாளிகைகளில் வாழ்வதற்கு, இந்தச் சேரிகளில் இருந்துதான் அறிஞர்களும், சிந்தனையாளர்களும், படித்தவர்களும் வரவேண்டும்” என்றார்.

வரலாற்றில் எண்பது வீதமான தலைசிறந்தவர்கள் மிகவும் வறுமையான குடும்பத்தில் இருந்து வந்தவர்களேயாகும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரெசாட் (Bresard) அவர்களின் கணக்கீட்டின்படி அதிகமான பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இருந்து அதிக அளவு தலைசிறந்தவர்களும், குறைந்த அளவு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இருந்து குறைந்த அளவு சிறந்தவர்களும் உண்டாகி இருக்கின்றனர்.[4]





செல்வந்தர்களுடைய பிள்ளைகள் எல்லோரும் நல்லவர்களாகவும், சிறந்தவர்களாகவும் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. போதை வஸ்துகட்கு அடிமையாகவும், இன்னும் அது போன்ற அநேக செல்வஞ் சேர்ந்த பழக்கங்கட்கும், குற்றங்கட்கும் உள்ளானவர்கள் செல்வந்தர்களின் வீட்டுப் பிள்ளைகளே.

ஆகவே வறுமையான பிள்ளைகள் முன்னுக்கு வர வழியில்லை என்றோ, அல்லது செல்வந்த பிள்ளைகள் எல்லாம் சிறந்து விளங்கும் என்றோ பொது நியதியில்லை. ஒரு பிள்ளை வளர்க்கப்படும் விதத்தில் இருந்துதான் அதன் எதிர்காலம் பிறக்கின்றது. இஸ்லாமிய மார்க்கச் சூழலில் பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரின் தலையாய கடமையாகும். இவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகளே பெற்றோருக்கும் தமக்கும் நாட்டுக்கும் சிறந்த பிள்ளைகளாக விளங்குகின்றனர்

நம்முடைய பொருளாதார நிலைகட்கு அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டால் அந்தப் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்தையும் வழங்குவது பெற்றோருக்குப் பெருஞ் சுமையாக விளங்கும். ஆகவே தமது பொருளாதார நிலைகட்கு அமைவாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டால் வாழ்வு வளமாக அமையும்.

*(ஈ) இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையிலும் சிறுபான்மையாக இருக்கின்றார்கள். இப்படி இருக்கும்போது குடும்பத் திட்ட முறைகளைக் கடுமையாகக் கடைப்பிடித்தால் நமது சமூகம் மேலும் சிறுபான்மை ஆகிவிடாதா?*

அதிகமான வாசகர்கள் இந்த அச்சத்தைத் தெரிவித்திருந்தார்கள். அதிக அளவு பிள்ளைகளைப் பெறுவதால் நமது சமூகம் பெருகிவிடாது. ஏனெனில் அதிக அளவு குழந்தைகள் பெறும்போது

குழந்தைகளின் மரண வீதமும் அதிகரிக்கின்றது. அடிக்கடி பிள்ளைகளைப் பிரசவிக்கும்போது தாயின் உடல் நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுத் தாயின் மரண விகிதம் அதிகரிக்கின்றது.

இலங்கை முஸ்லிம்களில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு அகதிகள் ஆயினர். இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். கணிசமான அளவினர் மிகவும் வசதிகள் குறைந்த கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். ஒரு குடம் தண்ணீருக்கு ஒரு காத தூரத்திற்கு மேல் நடக்க வேண்டிய நிலையில் எத்தனையோ சகோதரிகள் வாழ்கின்றனர். காடுகளில் நடந்து விறகு சுமந்தும் இதைவிட கடினமான வேலைகள் செய்தும் பல குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களைப் பற்றி யாராவது சிந்தித்துப் பார்க்கிறோமா? உயிருடன் இருக்கின்ற இவர்களைப் பற்றி எந்த சிந்தனையுமே இல்லாத நாம், இவர்கட்கு மேலும் குழந்தைகள் பிறந்து சமூகம் பெருக வேண்டுமென்று சிந்திக்கின்றோம்.

இலங்கை முஸ்லிம்களில் மாத்திரமல்ல, எங்கு நோக்கினாலும் சமூகத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் மிகவும் குறைவாகவே குழந்தைகள் பெற்றுக் கொள்கிறார்கள். உயர் மட்டத்தில் உள்ள வர்கட்கு பிள்ளைகளைப் பற்றிய கடமைகளும், பொறுப்புகளும் நன்கு விளங்கியதால் குழந்தைகள் பெறுவதில் கட்டுப்பாடாக இருக்கிறார்கள். ஆனால் கல்வித்தரத்தில், பொருளாதாரத்தில் குறைந்த மக்கள் கட்டுப்பாடின்றிப் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டே செல்கின்றார்கள். காரணம் கேட்டால் ‘எல்லாம் அல்லாஹ்வின் வேலை’ என்று சொல்கிறார்கள். இது மடத்தனமான எண்ணமே தவிர, அல்லாஹ்வின் வேலை அல்ல. இடைவெளி விட்டுக் குழந்தைகள் பெறுவதற்கும், தாயின் தேகாரோக்கியத்தைப்





பேணுவதற்கும் இஸ்லாத்தில் இடம் உண்டு.

சமுதாயத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள், கல்வியறிவு மிக்கவர்கள் ஒருபோதும் தங்கள் சக்திக்கு அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை. உங்கள் பகுதியில் உயர் மட்டத்தில் உள்ளவர்களை எண்ணிப் பார்த்தால் நான் சொல்வதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள். ஆகவே ஏற்கனவே உடல் நலத்திலும் இன்னும் பல காரணிகளிலும் நலிந்து துன்புறும் வறுமையான மக்கள் இடைவெளிகள் விட்டுப் பிள்ளைகள் பெற வேண்டுமா அல்லது சமூகம் பெருக வேண்டும் என்ற நினைப்பில் இரண்டு வருடத்திற்கு மூன்று பிள்ளைகள் என்ற வேகத்தில் பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமா?

ஒரு சமூகத்தின் பலமும், செல்வாக்கும் அதன் எண்ணிக்கை யில் தங்கி இருக்கவில்லை. மிகச் சிறிய எண்ணிக்கையான இஸ்ரவேலர்கள் இன்று மேற்குலகம் முழுவதையுமே ஆட்சி செய்து கொண்டும், ஆட்டிப் படைத்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஒரு சமூகத்தின் சிறப்பு அதன் தரத்தைக் (Quality) கொண்டுதான் மதிக்கப்படுமே தவிர வெறும் எண்ணிக்கை (Quantity) அதிகரிப்பைக் கொண்டல்ல.

அரசாங்கத்தின் புள்ளி விபரக் கணக்கின்படி இலங்கையில் 16 இலட்சம் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வின் புள்ளிவிபரக் கணக்கில் எத்தனை இலட்சம் பேர் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்! முஸ்லிம்களாக நாம் வாழ்வதில்தான் நமது மதிப்பும், அந்தஸ்தும், வெற்றியும் இந்த உலகிலும், மறு உலகிலும் தங்கி இருக்கிறது. இன்றைய இக்கட்டான கால கட்டத்தில் அல்லாஹ் நமக்குச் செய்த பேரருள், தப்லீக் ஜமாஅத்தினரின் தஃவா பணி

யாகும். அந்தத் தியாகிகளின் அரும் பணிகளால் எப்படி எப்படி யெல்லாமோ வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் இன்று முஸ்லிம்களாக வாழ்கிறார்கள். இஸ்லாமிய வாழ்வு நம்மிடம் வந்துவிட்டால் மற்ற சமூகத்தினர் இயல்பாகவே நம்மை மதித்து அன்பு காட்டுவார்கள். தொழிலில், கொடுக்கல்-வாங்களில், மற்றவர்களுடன் நடந்து கொள்ளும் முறைகளில் நாம் இஸ்லாமியர்கள் ஆகிவிட்டால் நம்முடைய சமூகம் இயல்பாகவே உயர்ந்த அந்தஸ்தை அடைந்து விடும். வெறும் இலக்கங்களில் நம்மைப் பெருக்கிக் கொள்வதால் நாம் எதையும் சாதித்து விட முடியாது. ஆகவே இலங்கையில் முஸ் லிம்களின் இன்றைய தேவை, உண்மையான முஸ்லிம்களாக வாழ்ந்து அல்லாஹ்வின் திருப்தியையும் ஏனைய சமூகத்தினரின் நன்மதிப்பையும் பெறுவதே தவிர வெறும் எண்ணிக்கையில் தம்மை அதிகரித்துச் செல்வது அல்ல.





( 21 )

# சான்றோர்களின் சான்று

